# பண்பு

## 18வது ஆண்டு சிறப்பு மலர்




## CHULIPURAM NORTH YOGI KARTHIGESU MEMORIAL ARANERY SCHOOL

## SOUVENIR FOR 18TH ANNIVERSARY

# பண்பு

## 18வது ஆண்டுச் சிறப்பு மலர்

1998-2016

## CHULIPURAM NORTH YOGI KARTHIGESU MEMORIAL ARAMERY SCHOOL

## SOUVENIR FOR 18TH ANNIVERSARY

நூல் ; 'பண்பு' 18அவது ஆண்டுச் சிறப்பு மலர் 2016
வெளியீடு ; சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை
மலர் ஆசிரியர் : திருமதி. சரோஜினிதேவி கனகரத்தினம்

பிரதிகள் ; 300
பக்கங்கள் ; 80

பக்கவடிவமைப்பு : சிவ பரதன்
அச்சுப்பதிவு ; ஜே. எஸ் பிரிண்டேஸ்
சில்லாலை வீதி பண்டத்தரிப்பு

வெளியீட்டு அனுசரணை ; விசு க விமலன் தரும கருமம், பணிப்புலம்

உ

இறைசக்தி துணை

"அருள்மிகு பஞ்சமுக சுயம்புநாதேஸ்வரி சமேத சுயம்பு நாத சிவம் துணை"



சுழிபுரம் வடகிழக்கு செட்டியகுறிச்சி, சாத்தாவோலை,
அருள்மிகு சம்புநாதேஸ்வரி சமேத, சம்புநாதேஸ்வரர்
திருக்கோவில் மூலமூர்த்தி

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | நுழைவாயில் மலராசிரியர் மனத்திலிருந்து.... | 5 |
| 2. | ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள் | 7-26 |
| 3. | அதிபர் அறிக்கை | 27 |
| 4. | விடியல் கொள்ளவைப்போம் | 35 |
| 5. | இந்து அறநெறிப்பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம் | 36 |
| 6. | அமரர் விசு க விமலன் ஞாபகார்த்த தரும கருமம் | 37 |
| 7. | இறைபணி | 38 |
| 8. | திருத்தொண்டர் புராணம் | 40 |
| 9. | தமிழர் வாழ்வில் கல்வியா?செல்வமா? வீரமா? | 42 |
| 10. | தமிழிசைச் செல்வம் | 43 |
| 11. | இந்து சமயமும் மனித மேம்பாடும் | 46 |
| 12. | அறநெறிப்பாடசாலையின் தோற்றம் | 48 |
| 13. | சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டும் இவ் உலக மோட்சநிலை வழிகாட்டிகள் | 50 |
| 14. | ஒண்சுடரில் தோன்றும் உயிர் | 52 |
| 15. | மானிடமும் சோதிடமும் | 53 |
| 16. | இலங்கையில் இந்துசமய மறுமலர்ச்சி | 55 |
| 17. | அறநெறிப் பாடசாலை அறிவக பெட்டகம் | 57 |
| 18. | சுருக்க விளக்க வரலாறு | 58 |
| 19. | வெற்றியின் இரகசியம் | 59 |
| 20. | அறம்செயவிரும்பு | 60 |
| 21. | அறநெறியும் ஆன்மீக அறிவும் | 62 |
| 22. | நம்பிக்கை | 63 |
| 23. | பாரிச நோய் நாடல்..... | 64 |
| 24. | உயர் குருதி அமுக்கம் | 69 |
| 25. | புற்றுநோய் | 73 |
| 26. | பௌராணிக வித்தகர் யோகி கார்த்திகேசு அவர்களின் வாழ்க்கைசுருக்கம் | 74 |
| 27. | மாணவர் ஆக்கம் | 76-88 |

# சமர்ப்பணம்

சுழிபுரம் பணிப்புலம் பதிவாழ் சிறார்களின்
பண்பு சார் கல்விச்
சிந்தனைக்குக் கருவூலமாக அமைந்த
கந்த புராண வித்தகர்
அமரர் யோகி கார்த்திகேசு
மேம்பாட்டுக்கு வித்திட்ட
அமரர் விசு. க. விமலன் (சங்கர்)
அவர்களினதும்
பாதக் கமலங்களில்
18 ஆவது ஆண்டுச் சிறப்பு மலரான
'பண்பு'

# அறநெறிக் கீதம்

தொன்னெறி அறங்கள் துலங்கிடும் ஞான
உண்மைகள் அனைத்தும் உணர்வோமே
அன்புடன் அருளும் அமைந்த நல்வாழ்வை
அறநெறி வழியில் அமைப்போமே
(தொன்னெறி

தூய்மையும் தியானமும் சொல்லிய ஞானியர்
வாய்மையின் வழிகளை வளர்ப்போமே
ஆய நாற் பாதமும் ஆகம வேதமும்
ஆன்ம நன்னேயமும் அறிவோமே
(தொன்னெறி

ஆலயம் போற்றி நல் நோன்புகள் நோர்க்கவும்
அடியராய் பணிசெய்ய அறிவோமே
சாலமும் இன்றை நாமம் கூடியே பாடவும்
சாஸ்திர ஆற்றலும் பெறுவோமே.
(தொன்னெறி

நாளை உலகில் நல்லவர் என்றிடும்
நாமம் பெற்றிட பயில்வோமே
தீதும் நன்றும் யாதென தேறும்
திறமைகள் அனைத்தும் பெறுவோமே
(தொன்னெறி

ஒன்றே குலமென ஒருவனே இறையென
உலகுக் குரைத்திட எழுவோமே
நன்றே நிலைத்திட நன்மை புரிந்திட
நல்லவை கற்றுத் தெளிவோமே
(தொன்னெறி

அறநெறி இறைபணி ஆவதே எம்பணி
அனைவரும் உணர்ந்திடும் வகையினில் உணர்ந்திட
அத்தன் திருவடி நித்தம் பணிந்து நாம்
(தொன்னெறி

# அருள்மிகு ஸ்ரீசம்புநாதேஸ்வரி
# சமேத
# ஸ்ரீசம்புநாதேஸ்வரர்



புனிதமான ஆலயம் எங்கள் ஆலயம் எமது
பள்ளியில் அருகில் உள்ள ஆலயம்
மாபெரும் அருளே சம்பு நாதேஸ்வரா போற்றி
மாசுநீங்கி கல்வியுடன் நற்பண்புகள் தருவாய்
பல்லுயிரையும் காத்திடுவாய் அருள்மிகு சிவனே போற்றி

பரமபதம் சரணடைந்தோம்; அப்பனே போற்றி

நாடி உன்னைத் தேடி வந்தோம்

நாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவாய் இறைவா!

## விருது வாக்கு :

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்"

## பாடசாலையின் பணிக்கூற்று :

ஒழுக்கத்துடன், விழுமியங்களையும் கலாசாரத்தையும் பேணி தரமான கல்வியூடாக பண்புசார் சமூகத்தை உருவாக்குதல்

## Vision Statement of Our School

Creating a well behaved Society through the preservation of discipline, values and culture.

## பாடசாலையின் செயல் நோக்குக்கூற்று


யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை மாணவர்களை சைவ சமயக் கல்வியூடாக நல்லொழுக்கத்துடன், இறை சிந்தனையை உள்ளார்ந்த உணர்வுடன் வளர்த்து, சைவ விழுமியங்களையும், கலாசாரத்தையும் மேம்படுத்தி உன்னத ஆரோக்கியமான ஆளுமை உடையவராக்குதல்


## Missiom Statement of our School

Enhancing the balanced personality of the students of YOGI KARTHIGESU MEMORIAL ARANERY SCHOOL Through the teaching of Saivaism and its thoughts of morality

# நினைவேந்தல்

அமரர் யோகி கார்த்திகேசு அமரர் கந்தையா நாகராசா





## அமரர் விசு க விமலன்



## எமது அதிபர்
## திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்



### விசு க விமலன் ஞாபகார்த்த தரும தாபனம் உருவாக்குநரும்
### அறநெறிபாடசாலை போஷகரும் பாரியாரும் பிள்ளைகளும்

இடமிருந்து வலம் திருமதி தயாபரி மகேசன், திருமதி குலமணி கந்தசாமி
திரு கு.வி. கந்தசாமி, திருமதி தயாவாணி சாந்தசிவம்,
திரு வைகுந்தன் கந்தசாமி



# பாடசாலை நிர்வாகிகள் 2016




# பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்



# வெற்றிபெற்ற மாணவர்கள்


ஜெ.ஜனனி


க.கயல்விழி


க.நர்மிதா


ஜெ.ஜதுசன்


சி.தர்சினி


பா. அஜந்தா

# வர்த்தக வங்கி முறைமை

திரு வி. ராகுலன்

வங்கிகள் பல்வேறான வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்கின்ற தொழிற்பாடுகளின் ஊடாக பொருளாதாரத்தின் செயலாற்றுகைக்கும் அபிவிருத்திக்கும் அத்தியாவசியமான பல நிதியியல் பணிகளை வழங்குகின்றன.

வங்கிகளின் நிதியியல் தொழிற்பாடுகளில் தொடர்புகொள்கின்ற வாடிக்கையாளர்கள் பிரதானமாக மூன்று பிரிவுகளை சேர்ந்தவர்கள். அவர்கள் வருமாறு:

அ. நிதியங்களை வழங்குகின்றவர்கள் அல்லது வங்கிகளில் பணத்தை முதலீடு செய்பவர்கள்.

- பண வைப்புகளின் உரிமையாளர்கள்
- கடன் கொடுத்தோர்
- பங்கு உடமையாளர்கள்

ஆ. வங்கிக்கடன் வசதிகளைப் பெறுகின்றவர்கள்

நீண்டகாலம் வங்கிகளில் வைப்புகளைப் பேணிவருவதன் ஊடாக வங்கியின் நம்பிக்கையைப் பெற்று கடன் பெறுவதன் மூலம் தொடர்ந்தும் வங்கியின் நம்பிக்கையை பெற்றிருப்பார்கள்,

இ. பணக்கொடுப்பனவுகள்/பெறுகைகள், பெறுகின்றவர்கள்

பணக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பண முதலீடுகளுடன் தொடர்புடையதாக வங்கியினால் வழங்கப்படும் பல்வேறான நிதியியல் பணிகள் பெறுகின்ற வாடிக்கையாளர்கள்.

**வங்கிப் பணி வசதிகள்**

அ. வைப்புப் பணிகள்

1.நடைமுறைக்கணக்கு

இக்கணக்குகளின் பணவைப்புகளை காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யலாம், ஆதலினால் நடைமுறைக் கணக்கு உரிமையாளர் ஒருவரால் வங்கியிலிருந்து காசோலைப் புத்தகம் பெறமுடியும். அத்தோடு நடைமுறைக்கணக்கிலிருந்து பணம் பெறுவதை அல்லது அதிலிருந்து வேறொரு தரப்பிற்கு பணம் செலுத்துவதை குறித்த பணப்பெறுமதிக்கு காசோலை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளலாம்.

காசோலைகள் 3 விதத்தில் வழங்கப்படுகின்றது.

காசுக் காசோலை
பெறுபவரின் கணக்குக்கு மட்டும் காசோலை
கொடுக்கல் வாங்கல் செய்யமுடியாத காசோலை

2. சேமிப்பு வைப்புகள்

கணக்கு உரிமையாளருக்கும் பணம் கிடைக்கின்ற முறைக்கேற்ப வைப்பிலிடுவதும் பணம் தேவைப்படுகின்ற போது மீளப் பெறுவதற்குமான வசதிகளை கொண்டுள்ள வைப்பாகும். இவ் வைப்புகளுக்கு வட்டி செலுத்தப்படுகின்றது. வாடிக்கையாளருக்கு பொருத்தமான முறையில் பல்வேறு வகையான சேமிப்பு கணக்குகள் வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் சேமிப்பு கணக்கு
பெண்களுக்கான சேமிப்புக் கணக்கு
சிரேஷ்ட பிரசைகளுக்கான சேமிப்பு கணக்கு
இளைஞர், யுவதிகளுக்கான சேமிப்புக்கணக்கு

இவற்றை விட வங்கியில் பெறக்கூடிய மேலதிக வசதிகள்

தவணை நிலையான வைப்புகள்
கொடுகடன் பணிகள்
தங்ககடன் அடைவு
ஈட்டுக் கடன்
தவணைக்குத்தகை கடன்
உண்டியல் கழிவிடல்
பொதியிடல் கடன் போன்ற சேவைகள் வழங்கப்படுகன்றன.

# போட்டிப் பெறுபேறின் தொடர்ச்சி...

இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான வலிமேற்கு சங்கானை பிரதேச செயலகத்தினால் 09.07.2016 அன்று நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டி விபரம் வருமாறு
பேச்சுப்போட்டி

| தரம் | பெயர் | நிலை |
|---|---|---|
| 3 | க. நர்மிதா | 1 |
| 5 | க. கஸ்தூரி | 1 |
| 8 | ஜெ. ஜனனி | 1 |
| 11 | ஜெ.யதுர்சனா | 1 |
| 6 | பா. அஜந்தா | 2 |
| 7 | யோ. திகழினி | 2 |
| 9 | சி. தர்சினி | 2 |

தோற்றிய 7 மாணவர்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்று தமக்கும், எமது அறநெறிப்பாடசாலைக்கும் பெருமையுடன் புகழும் ஈட்டித் தந்துள்ளனர். இம்மாணவர்களையும் இவர்களுக்கு நிகழ்வைத் தயாரித்து, பயிற்சியளித்த ஆசிரியர்களை திரு, திருமதி கனகரத்தினம் அவர்களையும் பாடசாலை சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

முதலாம் இடத்தைப் பெற்ற 4 மாணவர்களும் யாழ் மாவட்டத்தில் இன்று பங்கு கொண்டுள்ளனர். இவர்களின் தேர்ச்சிக்கு இறையருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

# பண்பு நூல் வெளியீடு, நினைவேந்தல் நாள்

## பரிசு தினம்.-2016

### நிகழ்ச்சி நிரல்

விருந்தினர் அழைப்பு

மங்கல விளக்கேற்றுதல், திருமுறை ஓதுதல்

கொடியேற்றுதர், அறநெறிக்கீதம்

பொதுச் சுடரேற்றல்

தமிழ்மொழி வாழ்த்து

வரவேற்பு நடன்

வரவேற்புரை: திரு. வ.தருமலிங்கம் அவர்கள்
பொருளாளர்

அருளாசியுரை : சிவஸ்ரீ.தி. பொன்னம்பலவாணர் அவர்கள்
பண்டிதர்,உரையாசிரியர்,
சிவஸ்ரீ. சு. ரங்கநாதக்குருக்கள் அவர்கள்
சுழிபுரம் ஸ்ரீ சம்புநாதேஸவரர் ஆலயப் பூசகர்
சிவஸ்ரீ பே. இன்பராசாகுருக்கள் அவர்கள்
பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப்பூசகர்

தலைமையுரை : திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம் அவர்கள்

தொடக்கவுரை : திருமிகு கு. வி. கந்தசாமி ஐயா அவர்கள்

வாழ்த்துரை : திரு. ஆ. கனகரத்தினம் அவர்கள்
கலாபூஷணம், செயலாளர், சைவப்புலவர்

### பண்பு- சிறப்பு மலர் வெளியீடு

வெளியீட்டுரை : திருமதி. நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகம், யாழ் பல்கலைக்கழகம்
முதற்பிரதி பெறுபவர் : ஸ்தாபகர் திருமிகு கு.வி. கந்தசாமி அவர்கள்
பிரதி வழங்குதல்

"பண்பு" சிறப்பு மலரின் ஆய்வுரை: திருமதி வளர்மதி கோகுலன்
ஆசிரியர் யா/ வட்டுக்கல்லூரி
பதிலுரை–நூலாசிரியர்

### நினைவேந்தல் நிகழ்வு

அமரர் யோகி கார்த்திகேசு

அமரர் கந்தையா நாகராசா

அமரர் விசு. க. விமலன்(சங்கர்)

சுடரேற்றல், மாலையணிவித்தல்

நினைவேந்தல் உரை ; திரு. செ. சிவபாதம் அவர்கள்
தலைவர், சித்தாந்த பண்டிதர்

அதிபர் அறிக்கை
கௌரவ விருந்தினர் உரை
சிறப்பு விருந்தினர் உரை
முதன்மை விருந்தினர் உரை

## கௌரவிப்பு நிகழ்வு :

முதன்மை விருந்தினர் Dr சி.யமுனாநந்தா
ஸ்தாபகரும் போஷகரும் திரு கு. வி. கந்தசாமி
சிவஸ்ரீ.தி. பொன்னம்பலவாணர் அவர்கள் பண்டிதர்,உரையாசிரியர்,
பாடசாலை நிர்வாக அங்கத்தவர்கள்
திரு. வ. தர்மலிங்கம்– பொருளாளர்
திரு. கி. பூபாலசிங்கம்– அங்கத்தவர்
திரு. ஆ. கனகரத்தினம்– செயலாளர்
திருமதி க. சரோஜினிதேவி– அதிபர்
திரு செ. சிவபாதம்– ஆசிரியர்
செல்வி வ. மனோராணி - ஆசிரியர்
திருமதி வசந்தகுமாரி சுந்தரராசா சேவையாளர்
ஏற்புரை சிவஸ்ரீ பொன்னம்பலவாணர் அவர்கள்

## பரிசளிப்பு நிகழ்வு

- பரீட்சைகளிலும் போட்டிகளிலும் சித்தியடைந்து விசேட பாராட்டைப் பெற்ற மாணவர்களின் பரிசும் சான்றிதழ்களும் வழங்கல்
  நெறிப்படுத்துபவர் வ. மனோராணி
- விமலன் ஞாபகார்த்த பரிசில் வழங்கல் நிகழ்வு :
  நெறிப்படுத்துபவர் திரு அழ. பகீரதன்

கல்வியில் முன்னேற்றம் காணுகின்ற, பொருளாதாரத்தில் இடர்ப்படும் மாணவர்களுக்கு இப்பரிசில் திட்டம் சேமிப்பும் சிக்கனமும் என்ற நோக்கோடு கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டுவருகின்றது. மாணவர் ஒருவருக்கு வருடாந்தம் ரூ 5000/= இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்பு கணக்கு திறக்கப்பட்டு வைப்பிட்டு வழங்கப்படுகின்றது.

நன்றியுரை செல்வி வ, மனோராணி ஆசிரியர்
கொடியிறக்குதல் தேவாரம்

சுபம்
மங்களம்

நுழைவாயிலில்...

# மலராசிரியரின் மனத்திலிருந்து...

*"வல்லமை தாராயோ- இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே*
*சொல்லடி சிவசக்தி நிலச்*
*சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ"*

*என வீரக் குரலை உரிமையுடன் எழுப்பினார் பாரதியார். உலகம் பயன்பெற, மண்ணுலகு மாண்புபெற வாழும் வாழ்வே வாழ்வு, இல்லையேல் வாழ்வதெல்லாம் பூமிக்குப் பாரம். அதாவது நிலச்சுமை ஆகும்.*

*மனிதன் இறை நம்பிக்கையுடன் தான் நிர்ணயித்த இலக்கை நோக்கி விடாமுயற்சியுடன் நகர்வானேயானால் அவன் நிச்சயம் வெற்றி பெறுவான் என்பதில் ஐயமில்லை. இதை திரு. கு.வி. கந்தசாமி ஐயா அவர்கள் 18ஆண்டுகளுக்கு முன்பே சாதனை மூலம் பிற்காலச் சமுதாயத்துக்கு நிரூபித்து உள்ளார். அவரின் தன்னம்பிக்கையும், பற்றுறுதியும் தான் இன்று பிரகாசிக்கின்ற சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை தனது 18வது ஆண்டுப்பூர்த்தி விழாவை மிகப்பெரிய விழாவாக, கோலாகலத்துடன் கொண்டாடி மகிழ்கின்றது.*

*ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மைல் கல்லைத் தாண்டிச் செல்லும் உணர்வு. இப்படியான காலத்தில் அறநெறி அன்னை எமக்கு ஆற்றிய போதனைகள், நற்சிந்தனைகள் எம் மனதை நிரப்புகின்றன. எமக்கு வழிகாட்டியாய் அமைந்து வாழ்வாங்கு வாழ கற்றுக் கொடுக்கின்ற களமாக அமைகின்றது இப்பாடசாலை.*

*எனவே, அறநெறிப்பாடசாலை அன்னையின் பாதச்சுவடுகளை நூல்வடிவமாக, பேணப்படவேண்டி ஆவணப் பொக்கிஷமாக ஆக்க வேண்டியது எமது தலையாய கடமையும், பொறுப்புமாகின்றது. அந்த வகையில் இன்று கன்னிப் படைப்பாக 'பண்பு' எனும் 18வது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளிவருகின்றது.*

*இம்மலரானது, இப்பாடசாலை மாணவர்களின் சாதனைகள், பரீட்சைப் பெறுபேறுகள் போட்டி முடிவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. அத்துடன் இப்பாடசாலை ஆசிரியர்கள், நிர்வாகிகள், மாணவர்களின் ஆக்கங்களையும் கவிஞர்கள், கல்வியாளர்கள், வைத்தியர்கள் போன்ற அறிஞர்களின் அருளாசியுரையுடன் பேரறிஞர்களின் வாழ்த்துச் செய்திகளையும் கொண்டு துலங்குகின்றது.*

*உரிய குறுகிய காலத்தில் இத்தகைய உன்னதமான 'பண்பு' மலர் மலர்ந்து மணம் பரப்புவதற்கு உறுதுணையாக செயற்பட்ட அனைத்து உள்ளங்களையும் நன்றியறிதலுடன் பாராட்டுகின்றேன்.*

*சுபம்*
*மங்களம்*

திருமதி. சரோஜினிதேவி கனகரத்தினம்
அறநெறிப்பாடசாலை
சுழிபுரம்

உ
சிவமயம்
"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்"
சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை

# 18வது ஆண்டு நிறைவு விழாவும், 'பண்பு' சிறப்புமலர் வெளியீடும் விசு.க.விமலன் [சங்கர்] ஞாபகார்த்த விசேட வருடாந்த விழாவும் பரிசுத் தினமும் - 2016

காலம்; 17.07.2016 ஞாயிற்றுக் கிழமை
பி.ப. 2.30மணி
இடம் : பாடசாலை முன்றல்

தலைவர் : திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம் அவர்கள்
பாடசாலை அதிபர்

அருளாசியுரை

◊ சிவஸ்ரீ.தி. பொன்னம்பலவாணர் அவர்கள்
பண்டிதர்,உரையாசிரியர், பொன்னாலை பிள்ளையார் ஆலய பூசகர்
◊ சிவஸ்ரீ. சு. ரங்கநாதக்குருக்கள் அவர்கள்
சுழிபுரம் ஸ்ரீ சம்புநாதேஸவரர் ஆலயப் பூசகர்
◊ சிவஸ்ரீ பே. இன்பராசாகுருக்கள் அவர்கள்
பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப்பூசகர்

பிரதம விருந்தினர்

Dr சி.யமுனாநந்தா அவர்கள்
SMO போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

சிறப்புவிருந்தினர்

திரு. சு. உதயபாலன் அவர்கள்
இந்துசமய கலாசார உத்தியோகத்தர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்,

கௌரவ விருந்தினர்கள்

திரு. சோ. தேவராஜா அவர்கள்
பிரபலசட்டத்தரணியும் சத்திய ஆணையாளரும்
திரு. சி. சுந்தரம்பிள்ளை அவர்கள்
பண்டிதர், B.O.L
திரு. சு. திருகேஸ்வரன் அவர்கள்
அதிபர், யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலம்
திரு. செ. கணேஸ்வரன் அவர்கள்
தலைவர், சுழிபுரம் ஸ்ரீசம்புநாதேஸ்வரர் ஆலய பரிபாலனசபை
திரு. வை. பிரேமதாஸ் அவர்கள்
அதிபர், யா/ சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்
திரு. க. கனகரத்தினம் அவர்கள்
கனடா பணிப்புலம்.கொம் நிறுவகர்
திரு. சி. ராஜ்கண்ணா அவர்கள்
கிராம உத்தியோகத்தர், பணிப்புலம்
திரு. கு.வி.கந்தசாமி அவர்கள்
ஸ்தாபகரும் போஷகரும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்,

யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை இன்று 18ஆவது வயதை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்னும் வகையில் இளைய பருவத்திலே நாம் கற்றுக் கொள்ளும் அறிவு முதுமை வரை நம்மை அறநெறி மனிதனாக வாழ வழி சமைக்கின்றது. இதையே ஔவையாரும் அறம் செய்ய விரும்பு வள்ளுவரும் அறத்துப்பால் என்னும் நீதி நூல்கள் மூலமாக நமக்கு கருத்துக்களை அள்ளி வளங்கி உள்ளனர்.

இதனை ஆதாரமாக கொண்டு அறநெறி என்னும் பாடசாலை இன்று இலங்கை நாட்டில பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன. இதனுடைய தொடரில் யோகி கார்த்திகேசு சுழிபுரம் மக்களின் அறிவின் செயற்பாட்டிற்கு ஆற்றிய பணிக்கு நன்றி தெரிவுக்கும்வகையில் இப்பாடசாலை அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. பதினெட்டு ஆண்டுகள் இப்பிரதேச சிறுவர்களின் நற்பண்பிற்கு வித்திட்ட அறநெறிப்பாடசாலை பல்லாண்டு காலம் வளர்ச்சியடைந்து நற்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இப்பணியில் இணைந்திருக்கும் அதிபர், ஆசிரியர், இயக்குனர் அனைவர்களையும் வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும்

இன்ப அன்பு"



# முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
# Muthumari Ambal Thevasthanam

Siva Sri S.Sriranganatha Kurukkal
Chief Priest
Tholpuram,Valkkamparai
Chulipuram,Srilanka.

Tele Phone No.0212250081

சிவஸ்ரீ சு. ஸ்ரீரங்கநாதக்குருக்கள்.
பிரதமகுருக்கள்
தொல்புரம்,வழக்கம்பரை
சுழிபுரம்,சிறிலங்கா.

................/......../20....



## தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதமகுருக்கள் சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக்குருக்கள் வழங்கிய ஆசியுரை

'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்'
'கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி'
'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவருக்கு மாடல்ல மற்றவை'
'எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடிக்கற்றோரை மேல் வகுப்பென்பர்'

சென்ற இடமெல்லாம் சிறப்பைத்தருவது கல்வி, இது மனிதனுக்கு மிகவும் அவசியமானது. ஆதிகாலத்தில் குருகுலக் கல்வியாகத் தோன்றித் திண்ணைப் பாடசாலையாக வந்தபோது வசதி படைத்த சிலரே கல்வியாளராக விளங்கினர், பின்பு கல்விச்சாலைகள் தோன்றி எல்லோரும் கல்வி பெறும் வசதி ஏற்பட்டது. அந்தவகையில் சுழிபுரம் வடக்கில் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்படாசாலையானது ஆரம்பிக்கப்பட்டு 18வது வயதினைக் கடந்துள்ள நிலையில் விஷேட மலரொன்றினை வெளியிடுவதைக் கேள்வியுற்று பேரானந்தம் அடைகின்றேன்.

இப்பாடசாலையானது 1998ல் சுழிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் முன்மண்டபத்தில் அறநெறிக் கல்விக்கூடமாக ஆரம்பமாகி தற்போது ஸ்ரீசம்புநாதேஸ்வரர் ஆலயத்தின்முன் அமைக்கப்பட்ட தனியான கட்டடமொன்றில் இயங்கிவருவது குறிப்படத்தக்கது. இப்பாடசாலையானது சமய, கலாசார, பண்பாட்டு, கல்வி ஒழுக்கம் பேணுகின்ற உன்னத நிலையமாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலையின் ஸ்தாபகரும், போஷகருமாகிய திரு. கு. வி. கந்தசாமி போன்றவர்களாலும் தொடர்ந்து சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்களின் அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் ஆற்றுகின்ற செயற்பாட்டினால் இப்பாடசாலையின் மைந்தர்கள் உலகின் பலபாகங்களிலும் சிறப்பான பதவிகளில் இருந்து பணியாற்றிவருகின்றார்கள். பாடசாலையின் 18வது ஆண்டு நிறைவினை மகிழ்வுடனும் மனப்பூரிப்புடனும் இப்பாடசாலையைச் சார்ந்த சமூகத்தினர் அனைவரும் கொண்டாடுகிறார்கள். இந்த அறநெறிப்பாடசாலையானது பல்லாண்டு காலம் தொடர்ந்து தனது கல்விப்பணியைச் செவ்வனே நடாத்திவரும் இத்தருணத்தில் இம்மலருக்கு ஆசியுரை வழங்குமாறு கேட்டுக்கொண்ட நிர்வாகிகளும், ஆசிரியர்களும், மாணவர், பழைய மாணவர்கள், கல்லூரி அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர்கள் எல்லோருக்கும் நன்றி கூறி எல்லாம்வல்ல ஸ்ரீசம்புநாதேஸ்வரர் பெருமானையும்

சிவமயம்

## பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பேரின்பராஜக் குருக்கள் வழங்கிய ஆசிச் செய்தி

சுழிபுரம் வடக்கு "யோகி கார்த்திகேசு' ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை இவ்வருடம் 18வது ஆண்டைக் கொண்டாடுப் இந்நாளில் சிறப்புமலர் ஒன்று வெளிவருவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எமது கிராமத்தின் மாணவர்கள் நலன்கருதி இவ் அறநெறிப்பாடசாலை 1998 ஆம் ஆண்டு கல்விசார் பண்பாட்டாளர்களால் இந்துசமய கலாசார அலுவலகத்தின் பூரண ஆதரவுடன் சுழிபுரம் வடக்கு கண்ணகியம்மன் ஆலய தரிசன மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பின் நிரந்தர கட்டடம் தேவை கருதி சுழிபுரம் வடக்கு சாத்தாவோலை சிவன் (சம்புநாதேஸ்வரர்) ஆலய வெளிவீதியில் வடகிழக்குப் பக்கமாக கட்டடம் அமைத்து அங்கே பாடசாலை இயங்கிவருகிறது. ஆலயச்சூழலும், மருத நிலமும், மருத மரமும், இயற்கை எழில் கொஞ்ச அமைதியான இடத்தில் இந்தப் பாடசாலை நல்லமுறையில் பாடசாலை நிர்வாகத்தினரால் நடாத்தப்பட்டு வருகிறது

இப்பாடசாலை மாணவர் பலர் பல போட்டிகளில் குறிப்பாக, தமிழ், பண்பாடு, கலை, இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த தேர்ச்சி பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.. விஷேடமாக கடந்த ஆண்டு யாழ் மாவட்ட மட்ட ஆக்கத்திறன் போட்டியில் இப்பாடசாலையில் இருந்து பங்குபற்றிய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பிடித்து சிறப்புத் தேர்ச்சியுடன் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர் என்றால் மிகையாகாது. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அநேகமானோர் ஓய்வுநிலை அதிபராகவும், ஓய்வுநிலை ஆசிரியர்களும் பண்டிதர், சோதிடர்களாகவும் விளங்குகின்றனர். இவர்களின் கல்விப் போதனைகளால் மாணவர்களின் அறிவாற்றல் மேலும் வலுப்பெறுகிறது.

ஒரு அறநெறிப்பாடசாலையை இயக்குவது என்பது 'நிதி' மூலதனம் முக்கியமான இடத்தை வகிக்கிறது. இதற்கு உறுதுணையாக எமது ஊரைச் சேர்ந்தவரும், கனடா நாட்டில் வாழ்ந்து வருபவருமாகிய அக்காலத்தில் எமதூர் மக்கள் 'தொண்டர்' என அழைத்த அந்தத்

தொண்டர் ஐயாவின் பின் இன்றுவரை சமய, சமூகத் தொண்டராகவே நிலைத்து நிற்கும் வகையில் நிதிப் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கும் அறக்கொடையாளர் மதிப்புக்குரிய திரு கு.விசுவலிங்கம் கந்தசாமி அவர்கள் ஆவார். அவர்தம் மகனாகிய அமரர் விசு. க. விமலன்(சங்கர்) ஞாபகார்த்தமாக வருடந்தோறும் ரூ 5000/- ரூபாவை மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புப்பணமாக வாரிவழங்கி வருகின்றார்.

மாணவர் தெரிவு எமது ஊரை அண்டியுள்ள பாடசாலை மாணவர்களில் 5 பேர்வீதம் உள்வாங்கப்படுகிறார்கள். இப்பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கு வருடா வருடம் என்னை அழைக்கின்றனர். பாடசாலைச் சமூகம். நான் சிறுவனாக இருந்தபோது அமரர் யோகி கார்த்திகேசு அவர்கள் சாத்தாவோலைச் சிவன் ஆலயத்திலே தங்கி நின்று பலருக்கு சமய, புராண, இதிகாச, கந்தபுராண விளக்கவுரையுடன் சித்தாந்த கருத்துகளையும் போதித்து வருவார். அப்படியாக அவரைக் குருவாக வைத்து சீடராக இருந்து இன்று சிறந்துவிளங்குவரும் கந்தபுராண விளக்கவுரை, கதாப்பிரசங்கியும், சித்தாந்த பண்டிதருமாகிய எமதூர் மதிப்புக்குரிய திரு செல்லையா சிவபாதம் அவர்கள் என்றால் நாம் எல்லாம் பெருமைப்படுகிறோம்.

இன்றைய விழா சிறப்புடன் நிகழவும், இவ் அறநெறிப்பாடசாலை மேன்மேலும் சிறந்துவிளங்கி கல்வி, பண்பாடு. சமய அறநெறி ஒழுக்கத்துடன் மாணவர் விளங்கிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைச் சமூகம் சார்ந்த நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற் றோர்களுக்கு பெருமை சேர்த்துக் கொடுக்க வேண்டும்.என்றும் இன்று வெளியாகும் இச்சிறப்புமலர் நல்லமுறையில் வெளியிடு வதையிட்டும் எல்லாம் வல்ல சாத்தாவோலை ஸ்ரீசம்புநாதேஸ் வரரினதும் ஸ்ரீமுத்துமாரியம்மாளினதும் திருவருள் என்றும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஆசிகூறுகிறேன்.

# சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பா.உ அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி




எதிர்காலச் சமுதாயத்தை அறிவுள்ளதாக மாற்றுகின்ற கைங்கரியத்தை செய்கின்ற யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை கல்விப் பணியில் 18ஆண்டுகளைக் கடந்து பயணிக்கின்ற இவ்வேளையில் வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மனம் பூரிப்படைகின்றேன்.

அறநெறிப் பாடசாலை சமயம் சார்ந்த ஒழுக்கவிழுமியங்கள் அடங்கிய நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புகின்ற பணியைச்செவ்வனே மேற்கொள்கின்றது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்கள் சார்ந்து இத்தகைய அறநெறிக்கல்வி போதிக்கப்பட்டுவருகின்றது. அந்தவகையில் சுழிபுரம் கிராமத்து மக்களுக்கொரு வரப்பிரசாதமாக இந்தப் பாடசாலை விளங்குவது சிறப்பம்சமாகும்.

இந்த இனியவேளையில் நல்ல அறிவை வழங்கும் இக்கல்விக்கூடத்தை ஸ்தாபித்த திரு. கு. வி. கந்தசாமி அவர் களின் முயற்சியானது. இன்று அகலக்கிளை பரப்பி பணிசெய்வதையிட்டு



அந்த பெருமகனாரைப் பாடசாலை மாணவர்கள் பாடாக இந்து சமயப் கலை கலாசாரப் போட்டி களைப் புரிந்து பரிசுக அந்த மாணவர்களையும் களையும் பாராட்டுகின்

இன்றைய நவீன யங்களின் தேவை அதி கின்றது. இந்நிலையில் லொழுக்கம்" என்ற மகு மாணவ சமுதாயத்தை பம்சமாகும். இந்தவகை புனைகின்ற மலர்க்குழு கள். அத்துடன் இந்தப் தைப் பாராட்டுவதோடு முயற்சிகள் தொடரவும் துகின்றேன்.

பாராட்டுகின்றேன். இந்தப் தங்களது அறிவின் வெளிப் போட்டிகள் மற்றும் ஏனைய கள் என்பவற்றில் சாதனை ளைப் பெற்றுவருகின்றனர். வழிப்படுத்திய ஆசிரியர் றேன்.

சூழலில் ஒழுக்க விழுமி கரித்த வண்ணம் இருக் "நன்றிக்கு வித்தாகும் நல் டவாசகத்தோடு நல்லதோர் உருவாக்குகின்றமை சிற யில் இந்த ஆண்டுவிழா வின் முயற்சிக்கும் வாழ்த்து பாடசாலையின் நிர்வாகத் எதிர்காலத்தில் இவ்வாறான இறை ஆசி வேண்டி வாழ்த்

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

**திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**

**சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்,**

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு,
3ஆவது மாடி, செஸ்திரிபாயா பிரிவு II
பத்திரிமுல்ல



# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பனிப்புலம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை தனது பதினெட்டு ஆண்டுகள் நிறைவைப் பூர்த்தி செய்து வெளியீடு செய்யும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யோகி கார்த்திகேசு அவர்களின் ஞாபகார்த்தமாக அறநெறி சிந்தனைகளை மாணவர்களிடத்து வளர்க்கும் முகமாக அமைக்கப்பட்ட இவ் அறநெறிப் பாடசாலை சமய ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சிறந்த சமூகத்தை உருவாக்கும் உன்னத பணியை சிரமேற்கொண்டு சிறப்பாக சேவையாற்றிவரும் அதேவேளை வேதனம் எவையும் பெறாது அறநெறி ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இவ்விடத்தில் பணி சிறக்க வாழ்த்துகின்றேன். யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் அவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும், சிறப்பான நிலையில் இருப்ப தனையும் அறிகின்றேன்.

மேலும் சிறந்த அறநெறிக் கல்வியை வழங்கவேண்டி யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை சிறப்பு மலர் மணந்து நறுமணம் பரப்ப என் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்



# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை பதினெட்டு ஆண்டுகள் அறநெறிக்கல்விச் சேவையில் மிளிர்ந்து இன்று பெருமிதமாய் விழாவெடுக்கும் இவ்வேளையில் சிறப்புமலருக்கு எனது வாழ்த்துச்செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்னும் மகுடவாசகம் தாங்கி சுழிபுரம் வடக்கில் ஸ்ரீசம்புநாதேஸ்வரர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள இவ் அறநெறிப்பாடசாலை எமது திணைக் களத்தினால் நடாத்தப்படுகின்ற இந்துசமயப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சைகள், ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வுகள், குருபூசைகள் என்பவற்றிலே பங்குபற்றி வருகின்றமை பாராட்டுதற் குரிய விடயமாகும்.

பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் ஆகியவற்றில் மாணவர்கள் ஆக்கத் திறன்களை வெளிப்படுத்தி முதற்பரிசுகளைப் பெற்றுக் கொண்டமை மட்டுமல்லாது நல்லூர் கந்தசுவாமி ஆலய உற் சவகாலத்தில் சிறப்பான கலைநிகழ்வுகளை நடாத்தி முன்னு தாரணமாய் விளங்கிவருகின்றமை சிறப்பாகும்.

ஒழுக்கத்துடன் சமூகவிழுமியங்களையும் கலாசாரத்தையும் பேணித் தரமான கல்வியூடாக பண்புசார் சமூகத்தை உருவாக்க வேண்டு மென்ற உயரிய நோக்கோடு இயங்கிவரும் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் சேவை வளரவும், வாழ்த்து களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பாடசாலையை வழிநடாத்தும் போஷகர், தலைவர் உள்ளிட்ட நிர்வாக அங்கத்தினருக்கும் அறநெறிப் பாடசாலையின் அதிபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், விழாக் குழுவினர், மலர்க்குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட் டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
18/171, காலி வீதி, கொழும்பு-04

# வட மாகாண
# கௌரவ ஆளுநர் அவர்களின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் பதினெட்டாவது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு வரவிருக்கும் ஞாபகார்த்த மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். முதலில் இந்த அறநெறிப்பாடசாலை சிறப்பாகத் தொடர்ந்து இயங்குவதற்கு உதவிய பாடசாலை ஸ்தாபகர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், அயலவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

தற்போது இளம் சமூகத்தினரிடம் மத நல்லொழுக்கப் பண்புகள் அருகிவருகின்ற காலகட்டத்தில் அறநெறிப் பாடசாலையின் மூலம் இளம் சமூகத்தினரிடம் மத நல்லொழுக்கங்களை வளர்க்கக் கூடியதாக இருக்கும். அதற்கு இந்நிறுவனத்தின் "ஒழுக்கத்துடன் விழுமியங்களையும், கலா சாரத்தையும் பேணித் தரமான கல்வியூடாக பண்புசார் சமூகத்தை உருவாக்குதல்" என்ற பணிக்கூற்றே சான்றாகும்.

இப்பாடசாலை மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து இயங்கி இளம் சமூகத்தினருக்கு அறநெறியைப் போதித்துச் சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

**திரு இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்
வடமாகாணம்.

# வலிமேற்கு பிரதேசச் செயலர் வழங்கிய வாழ்த்துரை

யாழ் மாவட்டத்தின் சுழிபுரம் வடக்கில் அமைவுபெற்றுள்ள சம்புநாதேஸ்வரர் ஆலயச் சூழலில் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையின் பதினெட்டாவது ஆண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துசமய சிறார்களிடையே ஒழுக்க விழுமியங்கள் மற்றும் நற்பண்புகளை வளர்த்து சிறந்த பண்பாட்டம்சங்கள் நிறைந்த சீரிய சமுதாயத்தை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு இவ் அறநெறிப்பாடசாலை இயங்கிவருவது மனநிறைவினைத் தருகின்றது.

அறநெறிக்கல்வியூடாக மாணவர்களிடையே அன்பு, அறம், கருணை, கட்டுப்பாடு, கடமை என்கின்ற மனிதநேயப் பண்புகளை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதோடு மேலும் பல சிறப்புக்களோடு இவ் அறநெறிப்பாடசாலை சிறப்பாக இயங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திரு அ. சோதிநாதன்

பிரதேச செயலர்

வலி மேற்கு பிரதேச செயலகம்

சங்கானை



# பணிப்புலம் கிராம சேவையாளரது வாழ்த்துச் செய்தி

கி. றாஜ்கண்ணா
கிராம சேவையாளர்
பணிப்புலம்
J/176

சைவ சமயச் சூழலை மையமாக கொண்டு பணிப்புலம் கிராமத்தில் சுழிபுரம் வடக்கு ஸ்ரீசம்புநாதேஸ்வரர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையானது இவ்வருடம் தனது 18 வருட நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

இவ் அறநெறி பாடசாலையானது "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" எனும் தனது மகுட வாசகத்திற்கு ஏற்ப பணிப்புலத்திலும் அதனை அண்டிய கிராமங்களில் உள்ள மாணவர்களைக் கல்வியில் மட்டுமில்லாது நல்லொழுக்கத்திலும் சிறந்தவர்களாக உருவாக்குவதில் தனது பங்கினைத் திறம்பட ஆற்றிவருகின்றதையிட்டு பணிப்புலம் கிராம சேவையாளர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமகால சூழ்நிலையில் ஒழுக்கம் நிறைந்த ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். கல்வியில் மட்டுமல்லாது நல்லொழுக்கத்திலும் சமயம் சார் சிந்தனையிலும் சிறந்த ஓர் மாணவ சமுதாயம் கட்டியெழுப்பப்பட வேண்டியது இன்றைய காலகட்டத்தில் கட்டாயமானதாகும். எமது சமயத்தையும் எம்மவர் ஒழுக்கப்பண்புகளையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எம் அனைவரது கரங்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் பணிப்புலத்திலும் அதனை அண்டிய கிராமங்களில் உள்ள மாணவர்களை கல்வியில் மட்டுமில்லாது நல்லொழுக்கத்திலும் சிறந்த மாணவர்களாக உருவாக்குவதில் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையானது தனது சேவையினைத் திறம்பட்ட ஆற்றிவருகின்றது. இவ் அறநெறிப்பாடசாலையின் சேவைகள் தொடர வாழ்த்துவதுடன் இது போன்ற சேவையினை இன்னும் பலநூறு வருடங்கள் எமது மக்களுக்கு வழங்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# செஞ்சொற்செல்வரின் வாழ்த்துச் செய்தி

சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையின் பதினெட்டாவது ஆண்டு நிறைவு குறித்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். சிறுவர்களை அறநெறிப்பாதையால் அழைத்துச் செல்வதற்கு அறநெறிப்பாடசாலைகள் அத்தியாவசியமானவை. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் தூரநோக்குச் சிந்தனையுடன் உருவாக்கப்பெற்ற இப்பாடசாலையால் பலரும் பயன் பெற்றனர். ஸ்ரீமான் திரு கு.வி.கந்தசாமி அவர்களின் சிந்தையில் எழுந்த இப்பாடசாலை வலி மேற்குப் பிரதேசத்தில் முதன்மையான அறநெறிப்பாடசாலையாகத் திகழ்வது பெருமைக்குரிய விடயம் ஆகும். இப்பாடசாலை மாணவர்கள் பல போட்டிகளில் வெற்றிபெற்றுச் சாதனை நிலைநாட்டி வருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலையின் தலைவராக விளங்கும் புராணபடன வித்தகர் திரு. செ.சிவபாதம் அவர்கள் இப்பாடசாலையின் சிறப்புப்பற்றி என்னைச் சந்திக்கும்போது எடுத்துரைப்பார். கல்வியில் ஆர்வம் உடையவர்களுக்கு அவர்களது குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டு இப்பாடசாலை நிர்வாகம் உதவி வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. ‘ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டும்’ என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்கு ஏற்ப இவ் அறநெறிப்பாடசாலை சார்ந்தவர்கள் தொண்டாற்றி வருவது பாராட்டுதற்குரியது. எம்மண்ணில் எதிர்காலச் சந்ததியை நன்முறையில் வழிநடாத்தும் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை சூரிய சந்திரர் உள்ளவரை தன்நிறைவான பணியைத் தொடரவேண்டும் என வாழ்த்தி அமைகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்

தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



# யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

திரு சு. திருகேஸ்வரன் B.ED, SLPS
அதிபர்
யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் 18ம் ஆண்டுச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆன்ம ஈடேற்றம் நோக்கிய நமது பயணத்தில், நாமும் நல்வழிப்படுவதோடு, நம்மைச் சூழவுள்ளோரும் பாதுகாக்கப்படுகின்றனர்,

இன்று பொய்மையும் அறியாமையும் மேலோங்கியதனால், விலங்குகளிலும் மேம்பட்ட மானிடர் இப்புவியில் உயிர் வாழ்வதற்கே அஞ்ச வேண்டியுள்ளது. நவீன இலத்திரனியல் கருவிகளின் தவறான பயன்பாடு, மது, போதை போன்ற நவீன அசுரர்களிடம் இருந்து நாம் பாதுகாப்புப் பெற சீர்மியம் அவசியமாகிறது. சீர்மியநெறி நிற்பதற்கு அறநெறி அவசியமாகின்றது,

அஞ்ஞான இருளகன்று உண்மையான மெஞ்ஞானம் தோற்றுவதற்கு அறவாழ்வு மேலோங்க வேண்டும். தனியே சான்றிதழ்கள் மட்டும் கல்வியாகாது. கற்றவன் இவ்வுலகில் உதாரண சீலர்களாக வாழும் போதே அவன் கற்றவனாகக் கணிக்கப்படுகிறான். தன்கடமையைச் செவ்வனே செய்வதில் புலனைச் செலுத்தாது, பொறி தவறுவதால் தனித்துவம் குன்றி சுதந்திரம் இழக்கப்படுகின்றது.

இவ்வறவாழ்வை நாம் வாழ்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய விழுமிய நெறியைக் கடந்த 18 வருடங்களாகப் போதித்து வரும், யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையானது, சுழிபுரம் வடக்கு சிவன் ஆலய வளாகத்தில் அமைந்து ஆற்றிவரும் சேவை மேலானது. அறநெறிக் கல்வியுடன் மாணவர்களைப் பல்வேறு விதமான சமய கலாசாரப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறச் செய்வதன் ஊடாக தன்னம் பிக்கையையும் வளர்க்கிறது,

அமரர் விசு விமலன் ஞாபகார்த்தமாக மாணவர்களுக்கு வழங்கும் ரூபா 5000 க்கான வங்கி வைப்புச்சான்றிதழ் மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, மாணவர்கட்கு தன்னம்பிக்கை வளரவும் எதிர்காலத்தின் மீது பற்று ஏற்படவும் வாய்ப்பளிக்கின்றது.

இப்பாடசாலையின் பயன்பாட்டை அனைவரும் பெறவேண்டும் என அவாவுறுவதுடன் பணி மேலோங்க வாழ்த்துகிறேன்.

# அறநெறிக் கல்விக்கு உயிர்கொடுப்போம் எம் இளையவர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க வழியமைப்போம்

அருள் சிவானந்தன்
பொருளாளர், அகில இலங்கை சைவ மகாசபை
பணிப்புலம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

"அறம் செய விரும்பு" என்பது தமிழ் மூதாட்டி ஔவையாரின் வாக்கு. ஆம், இதுவே எங்கள் ஒவ்வொருவருக்கும் முதலில் சொல்லித் தரப்படுகின்ற நீதி நூலான ஆத்திசூடியின் முதல் வரிகள். அந்த வகையில் எமது குழந்தைகளை அறநெறி சார்ந்த வாழ்க்கைக்கு பயிற்றுதற்கு அறநெறிப் பாடசாலை இன்றியமையாத ஒன்றாகும்.

சைவம் என்கின்ற ஆதியும் அந்தமும் இல்லாத சிவப் பரம்பொருளை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்ற சமயத்தவர்களாகிய நாம் எமது இளைய தலைமுறைக்கு உன்னதமான சமயப்பண்பாடுகளை அறநெறி சார்ந்த வாழ்க்கை முறைகளை பள்ளிப் பருவத்திலே பயிற்றுதல் வேண்டும்.

இளையவர்களிடையே வன்முறைக்கலாசாரமும் போதைப் பொருள் பாவனையும் பரவி வருகின்ற மிகவும் ஆபத்தான காலப்பகுதியில் இவற்றிலிருந்து பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள எமது சமயம் போதிக்கின்ற உயரிய கோட்பாடான "அன்பே சிவம்" என்பதை நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாறுகளுடன் ஒப்பு நோக்கிச் சிறார்களுக்குச் சொல்லித் தரவேண்டும்.

தேவார, திருவாசகங்கள், திருமந்திரம், திருக்குறள், திருவருட்பா உன்னதமான இறையியலுக்கும் அற வாழ்வுக்கும் வழிகாட்டும் நூல்களிலுள்ள ஆழமான கருத்துக்களை இளமையிலே சின்னஞ் சிறார்களின் மனங்களிலேயே பதியும் வகையில் சொல்வதினூடாக அவர்களை ஆற்றல் மிகுந்த, ஆளுமையுள்ள, ஆன்ம பலம் உள்ள எதிர்கால சந்ததியாக உருவாக்கமுடியும்.

யோகாசனம், தியானம், கூட்டுப்பிரார்த்தனை, தொண்டுச் செயற்திட்டங்கள் என்பவற்றைப் பயிற்றுவதனூடாக மன ஒருமைப்பாடுடைய நேரான மனப்பாங்குடைய கூட்டுறவார்ந்த சமூகத்தை எதிர்காலத்தை உருவாக்குவதில் பெற்றோர்கள் கடமை மிக மிக முக்கியமானது. ஒவ்வொரு பெற்றோரும் வெள்ளிக்கிழமைகளில் தமது குழந்தைகளை ஆலய வழிபாட்டிற்கும், அறநெறி வகுப்பிற்கும் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தல் வேண்டும். குழந்தைகளோடு அவர்களும் பங்குபற்றுவார்களானால் இன்னும் சிறப்பானது.

மதிப்பார்ந்த அரச அதிபருடைய தலைமையிலே அனைத்துத் துறைசார்ந்தோரும் ஒருமித்து நடைமுறைப்படுத்திவரும் வெள்ளிக் கிழமை மற்றும் ஞாயிறு காலையில் அறநெறிக் கல்விக்காக மட்டுமே ஒதுக்கப்பட்ட நேரத்தை அதற்குரிய முறையில் பயன்படுத்த வழி வகைசெய்யும் வகையில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அந்த ரீதியில் சிறப்பான அறநெறிப் பாடசாலை ஒன்றை பல ஆண்டுகளாக உன்னதமான அர்ப்பணிப்புடன் நடாத்திவரும் சாத்தாவோலை யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களினதும் நிர்வாகிகளினதும் சாத்தாவோலை சம்புநாத சிவாலய தர்ம கர்த்தாக்களினதும் பணி போற்றுதலுக்குரியது இதனை எமது சங்கானைப் பிரதேசத்தின் அனைத்து ஆலயங்களும் முன் உதாரணமாகக் கொண்டு செயற்பட்டால் எமது அனைத்துக் குழந்தைகளினதும் வாழ்வும் சிவநெறி சார்ந்த அறவாழ்வாக மிளிரும். இவ்வரிய சிவத்தொண்டு, அறப்பணியை முன்னெடுக்கும் அறநெறிப் பாடசாலை, சம்புநாத சிவாலயத்தின் அனைத்து நல் உள்ளங்களுக்கும் இறை சிவனின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து நிறைவுசெய்கிறேன்.

# சாரணர் பயிற்றுனர் தலைவரின் வாழ்த்துச் செய்தி

திரு ந. சௌந்தரராஜன்,
பயிற்றுனர் தலைவர்
சாரணர் இயக்கம்

சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையின் 18வது ஆண்டு விழாவையொட்டிப் பிரசுரமாகும் நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அறத்துடன் வாழும் நெறியையும் வழங்குவதாக சிறார்கள் மத்தியில் அதைப் புனிதமாக பயிற்றுவித்து நன்மக்களாக வாழவழி சமைத்துக் கொள்வதே இப்பாடசாலையின் நோக்கமாகும். மானிடப் பிறவிகள், எவ்வாறு, என்ன முறையில் வாழப்பழகுவதும், உடல் நலத்தை சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற படிநிலைகளில் எவ்வாறு உட்படுத்தலாம் என்பதை இவ்வகையான பாடசாலைகள் எடுத்துக் கூறுகிறது.

இதேபோன்று தான் சாரணர் இயக்கமும் சாதி, சமய, மொழி வேறுபாடு இன்றி சமயத்திற்கும், நாட்டிற்கும் சமூகத்திற்கும் கடமைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ வழிவகைகள் செய்து கொடுக்கின்றது. இங்கு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டில் உருவாக்கப்படுகின்றது.

பலஆண்டுகளுக்கு முன் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ மாநகரில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் மேற்கத்திய சமூகத்தில் யோகாசனப் பயிற்சியால் மனிதன் எவ்வாறு பரிபூரணமாகவும், ஆரோக்கியமாகவும் வாழமுடியும் எனக்கூறி யாவரையும் வியப்பில் ஆழ்த்தினார். சமய அறநெறியில் வாழ்ந்து காட்டிய உத்தம புருஷன் என்றதால் அந்த மகான் இன்று மறைந்தாலும் அவர் ஆற்றிய போதனைகளும், செயல்களும் இன்று புகழ்பேசிக் கொண்டே உயிர்ப்புடன் நிகழ்கின்றன.

சைவ மக்களிடையே காணப்படும் இந்த அறநெறியானது, இப்போதனைகளை மிகவும் கவனத்துடன் பெற்று தங்கள் வாழ்வை மிக அழகாகவும் நற்பிரஜையாகவும் வாழ்வதற்கு அறநெறிக் கல்வி வழிவகுக்கின்றது என்பதில் ஐயமில்லை,

எனவே சுழிபுரம் பதியில் உள்ள அறநெறிப் பாடசாலையானது நன்கு, பரந்து, விரிந்து மேலும் பல்லாண்டு காலம் சேவையாற்றி சிறப்படைய இறைவனை வேண்டுதல் செய்கின்றேன்.

வாழ்க இதன் புகழ், வளர்க இதன் சேவை.

# அறநெறிப்பாடசாலையின் துரித வளர்ச்சி

**கி. பூபாலசிங்கம்**
சமாதான நீதவான்
சுழிபுரம்

கந்த புராண வித்தகர் யோகி கார்த்திகேசு அவர்களின் நாமத்தைக் கொண்டு மேற்படி அறநெறிப் பாடசாலை மிக எழுச்சியுடன் இயங்கி வருகின்றது.

1998 ஆம் ஆண்டு நாட்டில் அமைதியின்மை ஏற்பட்ட காலத்தில் அமைதியின்மை ஏற்பட்ட காலத்தில் அமைதியையும் சமாதானத்தையும் வேண்டி இளம் சிறார்களை நல்வழிப்படுத்தும் முகமாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பெற்றது.

இதனை நிறுவியவர் தொண்டர் திரு கு. வி. கந்தசாமி அவர்களே ஆவார். ஆரம்பகால ஆசிரியர்களாக திரு. வ. தர்மலிங்கம், சி.சிவானந்தராசா, செ.சிவபாதம் ஆகியோர் செயலாற்றினார்கள் தற்போது திருமதி. சரோஜினிதேவி கனகரத்தினம் அதிபராக வழிநடத்துகிறார்கள். இப்பாடசாலை பல்வேறு மட்டங்களிலும் போட்டிகளில் வெற்றி கண்டுள்ளது.

அமரர் க. விமலன் தர்மசாதன நிதியில் இருந்து ஐந்து பாடசாலைகளுக்கு கற்றலில் முன்னேறிச் செல்கின்ற வருவாய் குறைந்த பிள்ளைகளுக்கு ஆண்டு தோறும் நிதி வழங்கிவருகின்றது. இந்நிறுவனம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று மேலோங்கவேண்டுமென ஸ்ரீஜம்புநாதேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

## பண்பாளர் நிறை யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை

சம்புநாதேஸ்வரர் அருள்புரிய
கரம் பிடித்து உயர்த்தி நிற்க
பண்பாளர்களை உருவாக்க
கடுமையாக உழைக்கும்
அறநெறிப் பாடசாலையின்
பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

சைவம் புகழ் ஞாலத்தில்
ஒழுக்கத்துடன் புகழ்விளங்க
நேர்மையுடன் ஒழுகி நிற்கும்
பண்பாளர் பலரையுமே
பாங்குடனே ஈன்று
பார்மீது நிற்கின்றாய்.

பண்புடன் கலாசாரத்தையும்
விழுமியங்களையும் போற்றி
சுழிபுரம் பதியதனில்
சிறப்புடனே நிமிர்ந்து நிற்கும்
சீர்நிறை நின்பணி
சிறந்தோங்க வாழ்த்துகின்றோம்

# அதிபரின் வாழ்த்துச்செய்தி

18வது ஆண்டு விழாவைக் காணும்
யோகி கார்த்திகேசு அறநெறித்தாய் வாழியவே

பல்வகை சிறப்பு வாய்ந்த
பார்புகழ் சுழிபுரம் அறநெறி
எல்லீரும் அன்னை பண்புப்
பயிரினை வளர்க்கும்
நல் ஒழுக்கப் பணியை மேவி
வையத்தை உயரச் செய்தல்
வல்லமை தருமவள் வணங்க
அடியேன் நான் பெற்றபேறே.

அன்னையவள் ஆலய முன்றலில்
அழகாய் வீற்றிருந்து
பிற்றையவள் பிள்ளைகளுக்கு
பண்பு தனை ஊட்டி மகிழ்ந்து
முன்னோர் விழுமியங்களைப் பேண
வழி அமைத்து அருள
நன்மை பல பெற்று நாம்
நலமாக வாழ்வோம்,

இன்று பதினெட்டென்கின்ற
பெரு விழாக் காணும் அன்னை
அன்று தோன்றிய நாள் தொட்டே
சீரான பணிகள் செய்து
குன்றின் மேல் தீபம் போல
பிரகாசிக்கக் கண்டோம் நாம்
என்றுமே பல்லாண்டு வாழ்க தாயே
உயர்க உன்பணி நன்றே

**திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்**
அதிபர் யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை

# காலத்தால் கனிந்த அறநெறி

திரு.சோ. தேவராஜா
பிரபல சட்டத்தரணியும் சத்திய ஆணையாளரும்
அரசடி வீதி, பண்டத்தரிப்பு

யாழ்ப்பாண மாணவ சமூகத்தை முப்பது வருட யுத்தம் காவுகொண்டது. தொடர்ந்து இனிவரும் முப்பது வருடம் சித்தம் சிதையும் போதைச் சீரழிவுச்சவாலாகி முன்னிற்கிறது. 'சித்தமெலாம் சிவமயமே' என்பது செல்லாக்காசாகி 'எல்லாம் உலகமயமே' ஆன நுகர்வுப் பண்பாட்டில் சிக்கித் தவிக்கும் சமகாலத்தில், பதினெட்டு ஆண்டுகள் அறநெறிப் பாடப் பணி செய்து நிமிர்தல் சாதனையே.

'சர்வதேச சமூகம்' எனக் காவடியெடுத்துக் காலமெலாம் நாடோடிகளாய் பரதேசிகளாய் 'உலக வலம்' வரும் தமிழ்ச் சமூகப் பொற்காலக் கனவுகள் போயகல, பெற்றதாய் தந்தையரை வலம் வந்து மாங்கனி பெற்ற விநாயகப் பெருமானின் வரம் பெற்றவராய்- ஊருக்குழைத்திடும் யோகியராய்- அறநெறிப் பாடசாலை, அவனருளால் அவன்தாழ் பணிந்து பதினெட்டாண்டுகள் இப்பாரினில் பாதம் பதித்துப் பயணிக்கும் பாக்கியம் பெற்றுக் காலத்தால் கனிந்த கல்விச் சொத்தாய் எங்கள் முன் பண்பாட்டு விருட்சமாய் படர்வது கண்டு பல்லோரும் போற்றிப் பணிவோம்.

'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்' எனும் இலட்சியம் பயனளித்திட கல்வி, செல்வம், வீரம், நம்பிக்கை, அன்பு, இரக்கம். கருணை. இன்சொல், இன்முகம். அறம். மறம். அருள். பணிவு, அடக்கம் வாய்க்கப் பெற்று ஆடுதல், பாடுதல், கூடிப் பணிசெய்தல், எழுதுதல், பேசுதல் ஆய கலைகள் அறுபத்து நான்கும் கற்றுத்தோய்ந்து, பதினாறு செல்வமும பெற்றுத் தேர்ந்து 'தெளிவே தெய்வம்' எனும் தாரகம் கைவரப் பெற்ற, ஆளுமை பெற்ற மாணவ சமூகமே எதிர்கால சனநாயக சமூகத்திற்குத் தேவையான வித்துக்களாய்- ஆணிவேர்களாய்- அறுகுபோல் வேரூன்ற, ஆல் போல் தழைத்துச்செழிப்பது கண்டு நாம் மகிழ்வோம்.

என்றும் பதினெட்டாக- மார்க்கண்டேய இளமைப் பருவம் குன்றாத அழகுடன்- வசீகரத்துடன்- துடிப்புடன்- துணிவுடன்- ஊர் கூடித் தேரிழுத்து எம் மாணவப் பரம்பரையை இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வகையை 'யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை' செய்யும் வல்லமை தாராயோ! பராசக்தி இம்மாநிலம் பயனுறவே.



## பதினெட்டு ஆண்டுகள் இம்மண்ணில் அறநெறி வளர்த்த யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலைக்கு வாழ்த்துச்செய்தி

யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை
நானிலத்தில் பல்லாண்டு வாழி! வாழி!!

பல்வளமும் பலதுறையும் செழித்துத் தோன்றும்
பார்போற்றும் யாழ்ப்பாணப் பதியி லுள்ள
எல்லையறு புகழ்பூத்த நல்ல ஊராம்
எங்களது சுழிபுரநற் பதியில் மேவி
தொல்லைவினை நீக்கியருள் சிவனின் முன்னால்
தோன்றித்திரு யோகியரின் பெயரைக் கொண்ட
நல்லதொரு அறநெறிநற் பாடசாலை
நானிலத்திற் பல்லாண்டு வாழி வாழி

மூவாறு வருடங்கள் முழுது மாக
முறையாகக் கல்வியொடு கலாசா ரத்தை
ஓயாது மாணவர்க்கு வழங்கி யின்று
ஓங்குபுகழ் தான்பூத்து நிற்கு தன்றோ
பேறாகக் காப்பாளர் திருகுவி யோடு
பிறப்பகன்ற திருமகனாம் விசுக விமலன்
கூறாது செய்பணிகள் எம்ம னோராற்
கூறிடவும் முடியாது வளர்க வாழ்க

அறநெறிநற் பீடமது வாழி வாழி
அதிபரொடு தலைவர்நற் செயலர் வாழி
பிறைநுதலாள் தேவியும்பிஞ் ஞகனும் சேர்ந்து
பிறவியறு பேறதனை அளிக்க வேண்டி
திறமையொடு செயலாற்றும் நிர்வாகம் வாழி
ஜெகமெல்லாம் துயரகன்று வாழி வாழி
மறைவாழி ஆகமமும் அறமும் வாழி
மண்மீது திருமுறைகள் வாழி! வாழி!!

**பண்டிதை திருமதி பொன். பாக்கியம்,**

# சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் வழங்கும் வாழ்த்துரை

நமது சிறுவர்கள் தான் நாளைய நமது சமுதாயத்தின் மிகப் பெரிய சொத்து. இவர்களை ஒழுக்க சீலர்களாகவும், அறவிழுமியங்களைப் பேணுபவர்களாகவும் வளர்த்து விட வேண்டிய பொறுப்பு நமது சமுதாய நிறுவனங்கள் அனைத்திற்கும் உண்டு. பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகள் விதைக்காமல் நல்ல சிந்தனைகளை பதியச்செய்து விட்டால் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக மாறும் பொழுது வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்தரும் பிரஜைகளாக உருவாகுவார்கள். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பன நம்மிடம் உள்ள முதுமொழிகள்.

அறவிழுமியங்களைப் பேண வாழவேண்டும் என்ற சிந்தனையைச் சிறுவயதிலேயே மாணவர்களிடம் வளர்த்து விட வேண்டிய தார்மீகப் பொறுப்பு சமூக நலன்விரும்பிகள் அனைவரதும் கடமையாகும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்பது வள்ளுவர் வாக்கு. நல்லொழுக்கத்துடன் வாழ்வது இன்பம் தரும் இல்வாழ்க்கைக்கு இடும் விதையாகும். உயிரினும் மேலாகப் போற்றப்பட வேண்டியது ஒழுக்கம். தீயொழுக்கம் கொண்டு வாழ்வது என்றும் தீராத துன்பத்தையே தரும்.

1998 ஆம் ஆண்டு சுழிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை இன்று பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. பதினெட்டாவது அகவையிலே கால்வைக்கும் இப்பாடசாலை அறவிழுமியங்கள் தவறாது வாழும் மாணவர்கள் பலரைச் சுழிபுரம் மண்ணிலே உருவாக்கியுள்ளது. சுழிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று ஸ்ரீசம்பு நாதேஸ்வரர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியான கட்டிடத்தில் சிறப்பாக இயங்கிவருகிறது.

யோகி கார்த்திகேசு இந்த மண்ணிலே வாழ்ந்த ஒரு நடமாடும் தெய்வம். நாவலரைப் போல நைஷ்டிக பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர். அகமும் புறமும் சிவமணம் பூத்த ஞானச் செம்மலின் அருட்பார்வைக்கு உட்பட்ட சிலரின் கூட்டு முயற்சியினால் இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. இங்கு பயிலும் மாணவர்கள் அறநெறிக்கல்வியைச் சீராகப் பெறுவதோடு சமயம் சார்ந்த நிறுவனங்களால் நடாத்தப்படும் பல போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்களையும் பெற்று வருகின்றார்கள்.

இப்பாடசாலையிலே கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல முறையிலே இதனை நடாத்தும் நிர்வாகிகளுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீசம்புநாதேஸ்வரப் பெருமானின் திருவருள் கடாட்சம் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

# போஷகர் திரு. கு. வி. கந்தசாமி அவர்களின் ஆசிச் செய்தி

கட+உள்= கடவுள், எங்கும் நிறைந்ததே 'இறைசக்தி' எல்லாம் அறிவதும், எல்லாம் வல்லதும், என்றுமுள்ளதும் என்பதால், தனெக்கென ஒரு சொரூபமில்லாததுமாகும். எனவே, எண்ணுவதற்கு எட்டாத பரம்பொருளின் திருக் கருணையால், இன்று தமிழ் ஈழத்திருநாட்டின் வடபால், சோழியபுரம் கிராமத்தில் எழுந்தருளியிருக்கின்ற அருள்மிகு சம்புநாதேஸ்வரி சமேத சுயம்புநாதேஸ்வரர் கருணையினால், யோகி கார்த்திகேசுவின் ஆத்மீக பலத்தினால்போலும், அறநெறிப் பாடசாலை ஆக்கம் அன்று பெற்றுள்ளது அனைவரும் அறிவர்.

அதனால் அரும்பெரும் சேவைகளை இன்று உலகறிய ஆற்றுவதற்கு வாய்த்தவர்கள் அனேகர். அறநெறிப்பாடசாலையின் பரிபாலன சபையினர் மிகவும் ஆழ்ந்த அனுபவமும், அறிவாற்றலும், செயற்திறனும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளனர் என்பதை, செயல்கள் நிரூபிப்பன.

எவராவது இதனைத் தெரிய விரும்பினால், இலகுவாகப் படித்தறிவதற்கு, சென்ற மூன்று ஆண்டுகளாக வெளிவந்த 'அமரர் விசு. க. விமலன்(சங்கர்) ஞாபகார்த்த தரும கருமம்' அறிக்கைகள் பதில்கூறும். இதனைத் திறம்பட ஆக்கித் தருபவர் பாடசாலை அதிபர் (ஓய்வுநிலை பாடசாலை அதிபர்) உயர்திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம் ஆவார். அம்மையார் அவர்களின் அளப்பரிய ஆற்றலின் சிறந்த வெளிப்பாட்டினாலும் ஆன்மீக அறிவு வளர்ச்சிக்கான வகுப்புக்களை அவரைநிகர்த்த ஆசிரியர்களும் சேர்ந்து அரும்பணி ஆற்றுகின்றனர். இலங்கைத் தீவின் வடபால், ஈழநாட்டின் அரச அதிகாரிகளும் கண்டு மிகவும் போற்றும் அளவிற்கு வளர்ச்சிபெறும் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சி என்றும் ' குன்றாதிருக்க அனைவரதும் பணிதொடர, எல்லாம்வல்ல 'கடவுள்' கருணைபாலிக்க, நாம் எல்லோரும், எப்போதும் பிரார்த்தனை செய்வோமாக!

# அதிபர் அறிக்கை- 2016

வேழமுகத்து விநாயகரை மனதிலிருத்தி பாடசாலையின் அருகே வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் அருள் மிகு ஸ்ரீசம்புநாதேஸ்வரி சமேத ஸ்ரீசம்புநாதேஸ்வரப் பெருமானை வணங்கிக் கொண்டு இங்கு வருகைதந்துள்ள ஒவ்வொருவரின் உணர்விலும் சாந்தியும் சமாதானமும் வேண்டி நிறைந்த வணக்கங்களுடன் அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்று எமது அறநெறிப்பாடசாலையில் நடைபெறும் பெருவிழாவானது பாடசாலை வரலாற்றிலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு நிகழ்வாகும். ஏனெனில் இன்று 5 வெவ்வேறான விழாக்கள் நடைபெறுகின்றன.

1. அறநெறிப்பாடசாலை அன்னையின் 18வது ஆண்டு நிறைவுவிழா.
2. பாடசாலையின் கட்டாயம் பேணப்படவேண்டிய ஆவணப் பொக்கிஷமாக அமைந்துள்ள “பண்பு” எனும் சிறப்புமலர் வெளியீடு.
3. சிறந்த சேவையாளரின் கௌரவிப்பு.
4. விசு. க. விமலன் (சங்கர்) ஞாபகார்த்த தரும தாபன பணப்பரிசில் திட்டம்
5. மாணவர்களின் பரிசளிப்பு விழா

என்பவையாகும்.

இப்படியான தனித்துவமான, பெருமைமிக்க, பெருவிழாவிற்கு வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அனைவரையும் வருக, வருகவென வரவேற்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதம விருந்தினர் Dr. S. யமுனாநந்தா அவர்களே, சிறப்பு விருந்தினர் திரு. சி. உதயபாலன் அவர்களே, எமது பாடசாலை தாபகரும், போஷகரும் கனடாவிலிருந்து வருகை தந்து இவ்விழாவில் சிறப்பித்துக்கொண்டிருக்கும் திரு. கு. வி. கந்தசாமி ஐயா அவர்களே, அவர்தம் பாரியார் திருமதி. க. குலமணி அவர்களே. கௌரவ விருந்தினர்களே, அருளாசியுரை நிகழ்த்த வருகை தந்துள்ள ஆலய குருமார் அவர்களே, வாழ்த்துரை, நினைவுரை, வெளியீட்டுரை, ஆய்வுரை வழங்குவதற்காக எமது அழைப்பை ஏற்று வருகைதந்து மேடையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சான்றோர்களே! அயற்பாடசாலை அதிபர்களே, நிர்வாகத்தினர் மாணவச்செல்வங்கள் மற்றும் பெற்றோர், நலன்விரும்பிகளுடன் இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள அனைத்து உள்ளங்களுக்கும் எனது அன்பு நிறைந்த மாலை வணக்கம்.

எங்கள் தாயக மண்ணில் தமது சேவையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை மருத்துவ அதிகாரி, வைத்தியகலாநிதி சி. யமுனாநந்தா அவர்கள் எமது இப்பெருவிழாவிற்கு பிரதம

விருந்தினராக வருகை தந்துள்ளமை மிகவும் பொருத்தமானது. இவரின் வருகையால் பாடசாலைச் சமூகம் பெருமை அடைகின்றது. இவரை வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

இந்து சமய கலாசார உத்தியோகத்தர் யாழ் மாவட்ட செயலகம் மேன்மை தங்கிய திரு. சி. உதயபாலன் அவர்கள் சிறப்பு விருந்தினராக அமைவது சாலவும் சிறப்பாக அமைகின்றது. இவரை வரவேற்றுக் கொள்ளுவதில் மகிழ்வடைகின்றோம்.

அடுத்து எமது மண்ணின் மைந்தனும் பிரபல சட்டத்தரணியும், சத்திய ஆணையாளரும் ஆகிய திரு. சோ. தேவராஜா அவர்கள் இப்பாடசாலையில் மிகவும் அக்கறை கொண்டவர். இவரை கௌரவ விருந்தினராக வரவேற்றுக் கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபர் திரு. சு. திருகேஸ்வரன் அவர்களையும் திரு செ. சுந்தரம்பிள்ளை, பண்டிதர்; B.O.L அவர்கள், கனடாவிலிருந்து வருகைதந்துள்ள திரு கனகரத்தினம் அவர்கள் அருள்மிகு ஸ்ரீசம்புநாதேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. செ. கணேஸ்வரன் அவர்கள், யா/சாந்தை சிற்றம்பலவித்தியாசாலை அதிபர் திரு வை. பிரேமதாஸ் அவர்கள், எமது கிராம உத்தியோகத்தர் திரு சி. ராஜ்கண்ணா அவர்கள் ஆகியோரை கௌரவ விருந்தினராக மனதார வாழ்த்தி, வருக வருகவென வரவேற்பதில் மனம் நிறைவடைகின்றது.

அருளாசியுரை வழங்குவதற்கு வருகை தந்துள்ள ஆலய குருமார் சிவஸ்ரீ தி. பொன்னம்பலவாணர் அவர்களையும் சிவஸ்ரீ சு. இரங்கநாதக்குருக்கள் அவர்களையும் சிவஸ்ரீ பே. இன்பராசாகுருக்கள் அவர்களையும் அன்புடன் வரவேற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடுத்து வரவேற்புரை, வாழ்த்துரை, நினைவேந்தல் உரை, நன்றியுரையாற்றுவதற்கு வருகை தந்துள்ள இப்பாடசாலை நிர்வாகத்தினராகிய திரு வை. தருமலிங்கம், திரு ஆ. கனகரத்தினம், திரு செ. சிவபாதம், செல்வி. வ. மனோராணி அவர்களையும் வரவேற்றுக் கொள்ளுகின்றேன்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" எனும் மகுட வாசகத்திற்கமைவாக எமது மாணவர்கள் நற்பண்புடன் வளர்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இருந்தும் இப்பண்பு மேலும் விருத்தியடைய பெற்றோரும் பெரும்பங்களிப்பு செய்தல் வேண்டும். இறை சிந்தனையுடன் கலாசார விழுமியங்களைப் பேண பழகுதல் இக்காலத்தின் அவசிய தேவையாகின்றது.

1998 ஆம் ஆண்டில் ஸ்தாபிதம் செய்த சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை அன்னைக்கு 18 ஆவது வருடப் பூர்த்தி விழாவை இன்று மிகவும் குதூகலமாக உள் உணர்வுடன் பெரு விழாவாக பாடசாலைச் சமூகம் முன்னெடுத்துள்ளமை பாராட்டுதலுக்குரியது. இவ்வேளையில் இவ் விழாவிற்கு மூலகர்த்தாவாகவுள்ள நிறுவுனரும், ஆலோசனை வழங்குபவருமாகிய தொண்டர் ஐயா என்று அழைக்கப்படுகின்ற திருமிகு கு. வி. கந்தசாமி அவர்களையும் அவர்தம் பாரியார் திருமதி குலமணி அம்மையார் அவர்களும்

பாராட்டுதற்குரியவர்கள். இவர்கள் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இவருடைய இந்த தர்ம சிந்தனைக்கும் கருவூலமாக அமைந்த புராண வித்தகர் அமரர் யோகி கார்த்திகேசு அவர்களை நெஞ்சில் இருத்தி வணங்குகின்றேன். திரு கு.வி.கந்தசாமி தம்பதியினரின் மூத்த புதல்வன் அமரர் விசு. க. விமலன் (சங்கர்) அவர்களின் நினைவேந்தலின் பொருட்டு அவரின் ஞாபகார்த்த விசேட வருடாந்த ஞாபகார்த்த விசேட வருடாந்த ஞாபகார்த்த தரும தாபனத்தின் மூலமாக வறிய குடும்பத்து மாணவர்களுக்கு வருடாந்தப் பணப் பரிசில் திட்டம் 2013 தொடக்கம் செயற்பட்டு வருகின்றது. இன்று இத்திட்டம் நான்காவது வருடமாக நடைபெறுகின்றது. இது பெருமைக்குரிய விடயம். இச்செயற்பாட்டினை முன்னெடுக்கும் விமலனின் பெற்றோரை மீண்டும் மனநிறைவுடன் பாராட்டுகின்றேன்.

இப்பணப்பரிசில் திட்டத்தினை விமலனின் சகோதரர்களுடன், ஒன்றுவிட்ட சகோதரர். இலங்கை வங்கி இளவாலை கிளை முகாமையாளர் திரு அழ. பகீரதன் அவர்களும் இணைந்து அவர்தம் பாரியாரும் தரும தாபனத்தின் செயலாளரு மாகிய திருமதி சிவலதா பகீரதனும் செயற்படுத்திவருகின்றனர். இவர்களை நன்றியறிதலுடன் பாராட்டுகின்றேன்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாலாயிரம் நாட்டல்
பின்ன நல்ல தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்னும் மகாகவி பாரதியாரின் கூற்று இங்கு நோக்கற்பாலது.

எமது அன்னை வீற்றிருக்கும் திருமனையில் அன்னைக்கு விழாவுடன் மலரும் வெளியிட்டு மகிழ்வது எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. இன்னும் பலநூற்றாண்டுகள் எமது அறநெறிப்பாடசாலை,

"மலர் மலிந்து மறையுரைத்து மறுவில்லாத சுடர் விரித்து"

மாணவச் செல்வங்களுக்கு அறிவுடன் பண்பு, விழுமியத்துடன் கலாசாரத்தையும் மேம்படுத்தி அகிலம் எல்லாம் பெருமையுறச் செய்தல் வேண்டும்.

"மன மகிழ்ந்து மலர்கள் தூவி வாழியென்று வணங்குவோம்"

"தீரமுற்று சிறப்புற தொண்டர் கந்தசாமி ஐயாவினது
தீர்க்கமான தியானமதில் தேறிவந்த பாடசாலை"

சிறுசிறு தடைகளையெல்லாம் தூசாக மதித்து, விமர்சனங்களாக, ஏணிப்படிகளாக ஏற்று உறுதியோடு முன்னோக்கி, காய்களை நகர்த்தி எமது கரங்களில் இறைவனால் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தரமான கல்வியுடன், விழுமியம், கலாசாரத்தைப் பேணி வாழ்வாங்கு வையகத்தில் வாழ

நாம் நல்வழிகாட்டுவோம்.

**மாணவர் வளம் :**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1-3 | 12 | 13 | 25 |
| 4-5 | 08 | 10 | 18 |
| 6-9 | 14 | 19 | 33 |
| 10-11 | 05 | 06 | 11 |
| மொத்தம் | 39 | 48 | 87 |

மாணவரின் அதிகரிப்புக்கு தாங்கு தூணாக எங்களுடன் இணைந்து சேவைசெய்கின்ற திருமதி வசந்தகுமாரி சுந்தரராசா, Banker பூலோகராசாவின் மருமகள் எமது பாராட்டுக்கள். தனது வீட்டுவேலைகள் மற்றும் சிரமத்தை கருத்திற் கொள்ளாது மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருக்கு அறநெறிக் கல்வியில் விழிப்புணர்வை ஊட்டுவதுடன் பாடசாலை சுத்தம், சிற்றூண்டி தயாரித்து வழங்குதல் போன்ற சேவையில் முழுமூச்சாக ஈடுபடுபவர். வசந்தகுமாரிக்கு இறைவனின் அருள் என்றும் கிடைக்க பிரார்த்தனையுடன் அவரை வாழ்த்துகின்றேன்.

**ஆசிரியர் வளம் :**

திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம் அதிபர்
செல்வி. வ. மனோராணி ஆசிரியர்
திரு. ஆ. கனகரத்தினம் ஆசிரியர்
திரு. செ. சிவபாதம்–ஆசிரியர்
திரு. வ. தருமலிங்கம்- ஆசிரியர்
செல்வி. இ. டிலாஜினி–வருகை ஆசிரியர்

**அறநெறிப் பாடசாலை நிர்வாகசபை :**

தலைவர் - திரு செ. சிவபாதம்
செயலாளர்– திரு. ஆ. கனகரத்தின்ம
பொருளாளர்–திரு. வ. தருமலிங்கம்
நிர்வாக உறுப்பினர் திரு. கி. பூபாலசிங்கம்
திரு அழ. பகீரதன்
திருமதி க. சரோஜினிதேவி
செல்வி வ. மனோராணி
செல்வி இ. டிலாஜினி
ஆலோசகர் திரு. கு. வி. கந்தசாமி

### முகாமைத்துவமும் நிர்வாகச் செயற்பாடும்

இப்பாடசாலையின் செயற்பாடுகள் யாவும் திரு கு. வி. கந்தசாமி ஐயாவின் வழி நடத்தலில் அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

சென்ற வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது, தேவார பாராயணம் செய்யும் பணியை ஒழுங்காகவும் ஆசாரமாகவும் மேற்கொண்டுவருகின்ற சுழிபுரம் மண்ணின் மைந்தன் திரு செ. சிவசுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டிப் பொன்னாடை அணிந்து கௌரவித்துள்ளோம். அத்துடன் சோதிடத்தை துல்லியமாகக் கணித்து சொல்லுமாற்றல் பெற்ற சோதிடக் கலைஞர் திரு. வ. தருமலிங்கம் அவர்களுக்கும் கௌரவம் செலுத்தியுள்ளோம்.

### பரீட்சைகளும் பெறுபேறுகளும்

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள்**

1. **இந்து சமய அறிவுப் போட்டி–2015**

| தரம் | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | சித்தி | சித்திவீதம் 2015 | சித்தி வீதம் 2014 |
|---|---|---|---|---|---|
| 3 | 05 | 03 | 03 | 100 | 50 |
| 4 | 03 | 02 | 01 | 50 | 80 |
| 5 | 05 | 05 | 02 | 40 | 71.4 |
| 6 | 13 | 09 | 09 | 100 | 16.7 |
| 7 | 08 | 07 | 05 | 72.2 | 7.7 |
| 8 | 11 | 07 | 03 | 42.9 | 33.3 |
| 9 | 11 | 06 | 03 | 50 | 100 |
| 10 | 12 | 00 | 00 | - | - |
| 11 | 09 | 01 | 00 | 00 | 00 |

பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைப்பதற்கு அயராது உழைத்த செல்வி.வ. மனோராணி ஆசிரியருக்கும் செல்வி. இ. டிலாஜினி ஆசிரியருக்கும் நன்றிகள் பற்பல.

### ஏனைய போட்டிகள் :

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தபடும் ஆக்கத் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு-2015

அ. பேச்சு

விசேட பாராட்டைப் பெறுபவர்கள்

| தரம் | பெயர் |
|---|---|
| 4 | க.நர்மிதா |
| 5 | க.கஸ்தூரி |
| 7 | க.கயல்விழி |
| 9 | சி.தர்சினி |
| 10 | இ.விதுஷா |

ஆ. ஆக்கத்திறன் போட்டி யாழ் மாவட்ட மட்டம்

பேச்சு:

| பெயர் | தரம் | நிலை |
|---|---|---|
| ஜெ. யதுர்சனா | தரம் 11 | 1ம் இடம் |

2. **அரச இலக்கிய கலை பெருவிழா-2015**

அ. பிரதேச இலக்கியப் போட்டித் தொடர்:

| தரம் | பெயர் | பிரிவு | போட்டி | நிலை |
|---|---|---|---|---|
| 6 | ச.சாளின்யா | பாலர் | கையெழுத்து | 2 |
| 6 | பா.அஜந்தா | பாலர் | கையெழுத்து | 1 |
| 5 | க.கஸ்தூரி | பாலர் | கவிதை பாடல் | 1 |
| 5 | க.கஸ்தூரி | பாலர் | கையெழுத்து | 3 |
| 8 | ம.காஸ்மிகா | கனிஷ்ட | கவிதை எழுதுதல் | 1 |
| 9 | இ.விதுஷா | கனிஸ்ட | கவிதை பாடல் | 2 |

## பாடசாலையிலுள்ள அறநெறிக்குழு

1. தலைமைத்துவக்குழு

மேல்வகுப்பு மாணவர்களின் தலைமையிலும் வழிகாட்டலிலும் அறநெறிப் பாடசாலையில் கீழ் வகுப்பு மாணவர்கள் செயற்படுவதை நடைமுறைப் படுத்துதல்.

2. பாடசாலையில் நடாத்தும் குருபூசை விழாக்கள்

| குருபூசைக்குரிய அருளாளர் | திகதி |
|---|---|
| 1. திருவள்ளுவர் | 24, பெப்ரவரி |
| 2. யோகர் சுவாமிகள் | 20, மார்ச் |
| 3. காரைக்கால் அம்மையார் | 26 மார்ச் |
| 4. விபுலாநந்தர் | 03 மே |
| 5. சம்பந்தர் | 24 மே |
| 6. அப்பர் | 02 யூன் |
| 7. சேக்கிழார் | 08 யூன் |
| 8. மாணிக்கவாசகர் | 08 யூலை |
| 9. சுந்தரர் | 10 ஆகஸ்ட் |
| 10. மெய்கண்டார் | 30 அக்டோபர் |
| 11. திருமூலர் | 13 நவம்பர் |
| 12. நாவலர் | 21 நவம்பர் |

பேச்சு பாடசாலை மட்டத்தில் நடாத்தி வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

3. இசை வழிபாட்டுக்குழுக்கள் அமைத்து பஜனை பாடுதல்
4. இந்து சமய அறநெறிக் கல்வி–கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டது.
5. பொங்கல்விழா
6. சித்திரை வருடப்பிறப்பு
7. நவராத்திரி விழா

எமது பாடசாலை மாணவர்கள் பங்குகொள்ளும் நிகழ்வுகள்:

1. ஸ்ரீசம்புநாதேஸ்வர ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பஜனையும், கூட்டுப்பிராத்தனையும்
2. நல்லூர் கந்தசாமி ஆலய திருவிழாக் காலங்களில் கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்ளுதல்
3. பிரதேச சபை இலக்கியப்போட்டி
4. இந்துசமய அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் திருவாசகவிழாப் போட்டி, இந்துசமய அறிவுப்போட்டி.
5. பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தேவார பாராயணம் செய்தல்

எமது பாடசாலைத் தேவைகள்:

1. மாணவர் மேசை–25
2. மாணவர் கதிரை-25
3. பாய்கள் -06
4. தையல் வகுப்பை மீண்டும் ஆரம்பித்தல்
5. 30அடிx70அடி கட்டடம் அமைத்தல்

## யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்படாசாலை
## பரிசுபெறுவோர் விபரம்-2015

| | மாணவர் பெயர் | தரம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| 1 | ய. நந்தினி | 3 | சித்தி |
| 2 | ம. சஸ்மியா | 3 | சித்தி |
| 3 | அ. அபிசா | 3 | விசேட சித்தி |
| 4 | க. கஸ்தூரி | 4 | அதிவிசேட சித்தி |
| 5 | ர. மிதுசன் | 5 | சித்தி |
| 6 | பா. அஜந்தா | 5 | சித்தி |
| 7 | ச.சிம்புஜன் | 6 | சித்தி |
| 8 | ஈ. ஜீவன் | 6 | சித்தி |
| 9 | வ.விதுர்சன் | 6 | சித்தி |
| 10 | அ. லிங்கேஸ்வரன் | 6 | சித்தி |
| 11 | ஜெ. ஜதுர்சன் | 6 | சித்தி |
| 12 | பி. கஜாலினி | 6 | விசேட சித்தி |
| 13 | ம.ஹேமாபதி | 6 | விசேட சித்தி |
| 14 | க.யதுர்சன் | 6 | அதிவிசேடசித்தி |
| 15 | க. கயல்விழி | 6 | அதிவிசேடசித்தி |
| 16 | ஜெ.ஜனனி | 7 | சித்தி |
| 17 | ம.காஸ்மிகா | 7 | சித்தி |
| 18 | சி. அனுஸ்ரிகா | 7 | சித்தி |
| 19 | மு. கினுஜன் | 7 | சித்தி |
| 20 | சு. பிரிந்தாயினி | 8 | சித்தி |
| 21 | ஜெ. யதுஷன் | 8 | சித்தி |
| 22 | மு. கயானா | 8 | சித்தி |
| 23 | யோ.கஜந்தினி | 9 | சித்தி |
| 24 | இ.விதுஷா | 9 | சித்தி |
| 25 | ஜெ. ரதீஸ் | 9 | சித்தி |
| 26 | ச. கதுர்சனா | 9 | அதிவிசேடசித்தி |



# விடியல் கொள்ளவைப்போம்

திரு வே. த. யோகநாதன் (Ph.D தமிழ்)
மருத்துவக் கலாநிதி, முனைவர்,
திருச்சிராப்பள்ளி

கல்வியினைக் கையெடுத்து காசினியில் நாம்வாழ
கற்பதுவே உயர்வென்றே தமிழினம் உயர்ந்திடவே
நல்லறிவூட்டி தமிழன்னை நெறிவழி காட்டி
சொல்வளமும் கல்வித் திறனும் அருள்புரியும்
சரஸ்வதி யெனும் தெய்வம்

எதிரிகளிடமிருந்து எம் தமிழினம் தப்பிஉயிர் வாழ
சதிகார இன அழிப்பிலிருந்து தமிழினம் மீட்சி பெற
நாதியற்றுப் போகாமல் தன்மானத்துடன் வாழ்ந்திடவே
ஆதிசக்தி நாயகியாம் வீர அருள் புரியும் துர்க்கை
யெனும் தெய்வம்

செல்வ செழிப்பை தமிழ் மக்கள் பெற்றிங்கே
தொல்லையின்றி நிம்மதியாய் வாழ்ந்திடுவோம் என்பதையும்
வள்ளலாக வளமுடனே வாழ வழி செய்திங்கே
நல்வளமும் பொருள் வளமும் அருள் புரியும்
லட்சுமியெனும் தெய்வம்

இன்றைய கணனியது இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டுவதால்
நன்றாக ஏற்கும் பலர் நம்பியிங்கே இருப்பதனால்
ஆன்மீக நெறியதனை ஏற்பதற்கு மறுப்பதனால்
ஏன்? எதற்கு? எப்படி? எனக்கேட்கு தமிழர் வாழ்வு

கடவுள் தன்னை மறவாதே நடமாடும் தெய்வம்- உன் வழியில்
உடன்பாடு அற்றவரை முரண்பாடின்றி ஏற்க வைத்து
அடம் பிடிக்கும் மனிதரையும் அன்பு ஆயுதத்தால்-அரவணைத்து
வடம் பிடித்து வாழவழி அமைக்கும் தமிழர் ஆன்மீக அறிவியல்

வாத பிரதி வாதங்கள் தமிழினத்திற்கு இனிவேண்டாம்
மோதல் கொள்கையது புறமுதுகு காட்டிடவே
சாதனை காட்டி சக்தி நெறியில் நாம் வாழ்ந்து
வேதனை மிகு தமிழினத்தை விடியல் வெற்றி கொள்ள வைப்போம்



# இந்து அறநெறிப்பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம்

**திருமதி ஜனார்த்தனன் அகல்யா,**
இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேசச் செயலகம், சங்கானை.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு வகையான பாடசாலைகள் காணப்பட்டாலும் அதில் நின்று வேறுபட்ட தனித்துவமான போக்கினை கொண்டதொரு பாடசாலையாக இவ் அறநெறிப்பாடசாலை விளங்குவதைக் காணலாம். இதன் அமைப்பு, செயற்பாடு என்பன மிகவும் எளிமையானது ஆகும். இதன் அமைப்பு, 1989ம் ஆண்டு முதல் இந்து சமய அறநெறிப்பாடசாலைகள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெற்று அதன் நடவடிக்கைகள் சிறப்பான விரிவான திட்டங்களுடன் நடை முறைப்படுத்தப்பெற்று, செயற்பட்டுவருகின்றன. இதன்மூலம் இவ் அறநெறிப்பாடசாலைகள் அரசாங்க அந்தஸ்துடையவையாக உருவாகின.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறநெறிப்பிரிவினால் சமயக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியாகப் பல்வேறு வகையான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்து தர்மாசிரியர் கருத்தரங்குகள், அற நெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்குள், இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் அறிவை மேம்படுத்தும் முகமாக நூல்கள் கொள்வனவிற்கான கொடுப்பனவுகள், இந்துசமயப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நடாத்துதலும் பரிசில்கள் வழங்கலும், இசைக்கருவிகள் வழங்கல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்செயற்திட்டங்கள் மூலம் இந்து அறநெறிப்பாடசாலைகள் ஊடாக சிறந்த ஒழுக்கமும் விழுமியமும் மிக்க சமுதாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இவ் அறநெறிப்பாடசாலைக் கல்வியினூடாக நம்பிக்கையுடன் தெய்வத்தை வணங்கவும் வழிபடவும், பெற்றோரைப் பேணுதல், மதித்தல், இன்சொல் பேசுதல், விருந்தோம்பல், அன்பு, பொறுமை, உண்மை பேசுதல் போன்ற நல்லொழுக்கங்களை சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு ஊட்டப்படல் வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

பாடசாலைகள் தோறும் குழந்தைகளுக்கு சமயக்கல்வி போதிக்கப்பட்டாலும் அது குறிப்பிட்ட பாடத்திட்டங்களுக்கு அமையவே போதிக்கப்படுகின்றது. ஆனால் இப் பாடசாலைகளில் போதிக்கப்படும் கல்விமுறை குறிப்பிட்ட பாடத்திட்டங்களுடன் நின்று விடாது சீரிய ஒழுக்க நெறிகளை எத்தகைய முறையில் கைக்கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற நெறிமுறையைப் போதிக்கின்றது. எனவே தான் சமயத்தை ஒரு சித்தாந்தமாகக் கொள்ளாது வாழ்வியலோடு இணைந்து வழிகாட்டுவது தான் அறநெறிப்பாடசாலைக் கல்வியின் நோக்கமாகும்.

இவ்வகையில் சங்கானை பிரதேச செயல்பிரிவிற்கு உட்பட்ட அறநெறிப் பாட சாலைகளுள் ஒன்றான யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை 1998ல் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை பதினெட்டு ஆண்டுகளைக் கடந்த நிலையில், இப் பாடசாலையின் சிறப்பு, மகிமை என்பவற்றை உள்ளடக்கி வெளியீடு செய்யவுள்ள மலருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி யடை கின்றேன்.

# அமரர் விசு. க. விமலன் (சங்கர்) ஞாபகார்த்த தரும கருமம்
## 17.07.2016 விமலன் (சங்கர்) ஐந்தாவது நினைவுதினம்
## பெற்றோர் தரும் செய்தி

எல்லாம் வல்ல அருள்மிகு 'சிவசக்தி' அருள்கூர்ந்து, எம் எல்லோருக்கும் எப்போதும் கருணைபாலிக்க வேண்டுதல் செய்வோமாக.

எமது பேரன்புக்கு உரியவர் அமரர் விமலன், எமது மத்தியில் நாற்பத்தொன்பது ஆண்டுகள் மட்டும் வாழ்ந்தவர். கல்வியால் உயர்ந்தவர். சேவையில் சிறந்து விளங்கியவர். இலங்கையில், பணிப்புலம், பண்டத்தரிப்பில் பிறந்து, இருபத்தினான்கரை ஆண்டுகள் சேவை யாற்றிவிட்டு, கனடியத்திருநாட்டிலும் இருபத்தினான்கரை ஆண்டுகள் வாழ்ந்து பிரிந்தவர்.

வாழ்நாட்களில் ஈடு இணை அற்ற பலசேவைகளில் மிளிர்ந்தவர். இலங்கையில் கணக்காய்வாளர் ஆகவும், கனடாவில் றோயல் வங்கியில் இறுதியாக, உலக நாடுகளுடனான வணிக விரிவாக்க ஓர் அதிகாரியாகவும் பணியாற்றிவந்தவர்.

அங்கும், இங்கும் பொதுநலசேவைகளில் மிகவும் கருத்தூன்றி கடமையாற்றியவர். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' ஔவைப்பாட்டியின் திருவாக்குக்கு அமைவாகச் சிறுபராயத்து பிள்ளைகளின் பண்பாடு, கல்வி அறிவு மேம்படுத்தும் பலவித முயற்சிகளை சலிக்காது மேற்கொண்டு (நண்பர்களுடன் இணைந்து) பாடுபட்டவர்,

அங்கு 'காலையடி மறுமலர்ச்சி மன்றத்திலும்' இங்கு 'பண்கலை பண்பாட்டுத் கழகத்திலும்' முன்னணித் தொண்டனாக (தன் சக நண்பர்களையும் அரவணைத்து) சிறந்த சேவையாற்றியவரென்பதை; சகநண்பர் அனைவரும் அவரின் இறுதி யாத்திரையின்போது உலகறிய நிரூபித்திருந்தனர். இவற்றோடு நிகரற்ற சேவையின் பயனாகவே, ஆத்மீக பலத்தினால் போலும் மறைந்த பின்பும் எண்ணியது நிறைவேறவும், என்றென்றும் நிலைத்துவிளங்கவும் இவரின் 'ஞாபகார்த்த தரும கருமம்' தொடர்கிறது. இவரின் ஆத்ம சாந்திக்கும் அனைவரும் பிரார்த்திப்போமாக!

முக்கிய குறிப்பு ;

ஆத்மீக பலமானது, அணுவிலும் சக்திவாய்ந்தது. இதற்கு உதாரணமாக பலரைக் காட்டி விளக்கமுடியும். இவ்விடத்தில் அமரர் விமலன் அவரின் ஆத்த்தும பலத்தையும் அறிவது நன்றாகும்.

இவர் செய்து வைத்த காப்புறுதி வருவாய்களின் இலங்கை ரூபா பெறுமதி பத்துக்கோடிக்கு மேலாகும், அத்தியாவசிய கொடுப்பனவுகள் போக, மிகுதியாக கிடைத்த நான்கு கோடி ரூபாவை, விமலன் தரும கரும நிதியமாக்க முயற்சித்தோம், பணப்பேயிடம் சிக்கி பறிகோப நேர்ந்தது. என் செய்வது? எங்களின் நெருங்கிய உறவினர்களே, அன்றாடம் கருமமாற்றி நன்றாக வாழ்பவரேயாகும், விமலனின் ஆத்தும பலமானது, ஏழுநெருங்கிய உறவினர்களிடமிருந்து நன்கொணைகள் பெற்று 'நம்பிக்கை நிதியம் இரண்டாண்டு காலத்தில் உருவானது. இலங்கை வங்கியில் நிரந்தர வைப்பில், ரூ 2500000/= பெற்றோரின் பெயரில் கூடுதல் வட்டி பெறுவதற்காக வைக்கப்பெற்றுள்ளது. வருடாந்த வட்டியை விமலன் ஞாபகார்த்த தரும தாபன கணக்கு எண் 72170267 இல் முறையாக வைப்பாக்கி, ஆண்டுதோறும் சிரார்த்த காலத்தில், அறநெறி பாடசாலை பரிபாலன சபை மூலமாக பள்ளிப்பிள்ளைகளுக்கு பரிசில் பணமாக வழங்கப்பெறுகின்றது.

விளக்கம் வருமாறு ;

| பெயர், உறவுமுறை | தொகை | பணம் சேரச்சேர வைப்பில் இட்ட விளக்கம் தேதி | தொகை |
|---|---|---|---|
| கு.வி. கந்தசாமி, குலமணி பெற்றோர் | 400000/= | 13.08.2010 | 400000/= |
| க.வைகுந்தன் ஜெயகௌரி சகோதரன் | 400000/= | 23.082010 | 400000/= |
| மா.மகேசன் தயாபரி குடும்பம் சகோதரி | 300000/= | 24.12.2012 | 700000/= |
| இ.சாந்தசிவம் தயாவாணி குடும்பம் சகோதரி | 300000/= | 21.07.2012 | 700000/= |
| இ.பொ. கங்காதரன் சகோதரர் மச்சான்மார் | 300000/= | 16.08.2012 | 300000/= |
| அழ பகீரதன் ஒன்றுவிட்ட சகோதரர் | 200000/= | | |
| விமலன் பிரேமலதா மனைவி | 600000/= | | |

ஆண்டாண்டு தோறும் சென்னையிலிருந்து திருவாசக நூல்களை இறக்குமதி செய்து இலங்கையிலும் கனடாவிலும் தமிழ் சைவக் கோவில்களில் முற்றோதும் பக்தர்களை கூட்டி பாராயனம் செய்வதை ஊக்குவிக்கின்றோம்.

# இறை பணி

சைவ சித்தாந்த பண்டிதர் செ. சிவபாதம்
பணிப்புலம்

ஆன்மா திரோதான சக்தியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து ஆணவ முனைப்பில் வாழ்தல் பெத்தநிலை எனப்படும். இந்த நிலையில் இறைவன் ஆன்மாவாய் ஒற்றுமைப் பட்டு நிற்பான். இப்படியாக ஆன்மா வாழும் போது முற்பிறப்பில் தாம் செய்த தவப்பயனால் அவனருளாலே பக்குவமடைந்து இரு வினை ஒப்பு மலபரிபாகம் வரும்போது ஆன்மா இறைவனோடு ஒற்றுமைப்பட்டு சிவனேயாய் நிற்கும் இந்த நிலை சீவன்முத்தர் நிலையாகும். இந்த நிலையில் ஆன்மா திருவருள் முனைப்பில் வாழும் (நாம் யார்க்கும் குடியல்லோம் என்னும் முனைப்பு) இறைவன் இந்த நேரத்தில் தம்மால் ஆள்கொள்ளப்பட்ட அடியவரின் பெயரால் செயற்படுவார். இதை கதை மூலம் படம் பிடித்துக் காட்டுவதுதான் திருவாதவூரடிகள் புராணமாகும்.

பாண்டி நாட்டில் திருவாதவூரிலே அந்தணர் பரம்பரையில் சம்புதாசிரியருக்கும் இவர் மனைவி சிவஞானவதியாருக்கும் தவப்புதல்வனாக உதித்தார். இவருக்குத் தாய் தந்தையர் திருவாதவூரடிகள் என்ற பெயரைச் சூட்டி அழைத்தார்கள். திருவாதவூரர் இளமைப் பருவத்திலை கற்கவேண்டிய கலைகள் எல்லாவற்றையும் கற்றுத் தெளிவடைந்தார். இதன் பயனாக பாண்டிய மன்னன் இவரை அழைத்து கௌரவித்து தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் கொடுத்துத் தனக்கு முதல் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். இப்பணியை நன்றாக நடாத்திவரும் காலத்தில் பாண்டிய மன்னன் குதிரைகள் கொள்வனவு செய்யும் பொருட்டு நாற்பத்தொன்பது கோடி பொன்னைக் கொடுத்து அனுப்பினார். இவ்வாறு வாதவூரர் செல்லும்போது திருப்பெரும் துறை என்னும் புண்ணிய தலத்தையடைந்தார். இவ்வாறு வந்த வாதவூர் குருந்த மரத்தடியில் அடியார் பலர் சூழ ஞானாசிரியன் ஒருவர் வீற்றிருப்பதைக் கண்டார். திடீரென சிவிகையில் இருந்து இறங்கி அவருக்குமுன்பாக வந்து வணங்கி குருவே உங்கள் கையிலுள்ள புத்தகம் என்ன புத்தகம் என்று கேட்டதும் குரு சிவஞானபோதம் என்று சொன்னதும் சிந்தை மகிழ்ந்தார். அப்போது குருவே நீங்கள் சிவம் ஏது ஞானம் ஏது-போதம் ஏது என்று இவற்றின் பொருளை சொல்லியருளினால் கைலாச மலையில் கல்லால மர நிழலில் இருந்த சிவபிரான் என்று நினைத்து உங்களுக்கு அடிமையாவேன் என்று சொன்னார். இவ்வாறு சொன்னதும் இறைவன் சிரித்த முகத்துடன் வாதவூரரைப் பார்த்து "அன்பனே சிவம் என்பது ஒப்பற்ற தனிப் பரம்பொருள். இவரை அறிவது ஞானம் ஆகும். இவ்வாறு பெற்ற ஞானத்தை சிந்தித்துத் தெளிதலே போதமாகும்" என்று கூறினார். வாதவூரர் மனம்மகிழ்ந்து "எமது ஆன்ம நாயகரே எம்மை இப்போது ஆட்கொள்ளவேண்டும்" என்று வணங்கி நின்றார். அப்போது சிவன் 'சிவாயநம' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அவரது காது வழியாக உபதேசித்து மனம் அமைதிபெறும்படி செய்து, அவரது பாவத்தையும் ஒழித்து, அப்போது குருவாகிய சிவன் வாதவூரரின் சிரசில் தமது திருவடிகளை வைத்து, திருவடி தீட்சை செய்ய அப்போது அவரது பசுகரணங்கள் பதி கரணங்களாக மாறியது. சிற்றறிவு ஞான அறிவாக மாறியதும் அப்போது மேலும் பல சைவசித்தாந்த ஞானத்தை உபதேசித்து அன்பனே உமது உடல், பொருள், ஆன்மா மூன்றும் உம்முடையதல்ல நம்முடையனவாகும். இங்கே உன்னைப் போல மானிட உருவத்தில் வந்த எமது குரு வடிவத்தை உம்முடைய மனதில் இருத்துவாயாக. இதுவே சைவ சித்தாந்தத்தின் இறுதி நிலையாகும் என்று அவர் கூற திருவாதவூரர் கேட்டு இந்த குருவடிவத்தை உள்ளத்திலே வைத்தார். இவ்வாறு வைத்ததும் குருவாகிய சிவன் இவரது உள்ளமாகிய ஆன்மாவைக் கவர்ந்துவிட்டார். அப்போது திருவாதவூரர்,

தன்னை மறந்தார்,தன் நாமம் கெட்டார், தலைப்பட்டார் சிவனது கட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிட்டார். அன்று தொடக்கம் குருவாகிய சிவன் திருவாதவூதவூரரின பெயரால் அவரிடத்தில் வாழத்தொடங்கிச் செயற்கரிய செயல்களைச் செய்யத் தொடங்குகிறார். இவற்றுள் ஒரு செயல் ஐம்பத்தொரு பதிகம் திருவாசகம் பாடியது ஆகும்.

இதில் சில பாடல்கள்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாலும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவான் அச்சோவே (அதிசயம்)

கயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக் கலந்தாண்டலுமே
அயல் மாண்டு அருவினை சுற்றமும் மாண்டு என்னுடைய செயல் மாண்டவா
பாடித் தெள்ளேணம் கொட்டாமோ

பொழிப்புரை: கயல் மீன் போன்ற கண்ணையுடைய அம்மை பாகன் சிவன் அத்துவிதமாய் என் அறிவில் பொருத்தி என்னை ஆண்டருளியவுடன் பூமியிலுள்ளவர்களின் மேல் உள்ள பற்றும் ஒழித்து வினையால் வரும் சுற்றத்தார் உறவும் ஒழிந்து நெஞ்சின் கண் உள்ள மயக்கமும்ஒளிந்தும் எஞ்சியுள்ள சொல்லின் செயலிளந்து உடம்பின் செய்கையும் இல்லாமல் போன விதத்தை பாடி ஆடுவோமாக-

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

பொழிப்புரை: எண்தோளும் முக்கண்ணும் உடைய சிவனே என்னை ஆட்கொண்ட அக்காலத்திலே என் உடம்பு- ஆன்மா- பொருள் எல்லாவற்றையும் நீ ஏற்றுக் கொள்ளவில்லையோ இப்போது எனக்கு துன்பம் உண்டோ நீ நல்லது செய்யினும் தீது செய்யினும் நானோ இதற்கு பொறுப்பு நீங்கள்தான் காரணம். (தனக்கு யாதொரு அதிகாரமும் இல்லை நன்மையும் தீமையும் கடவுளைப் பொறுத்தது என்று குறிப்பிட்டார்.)

ஈழநாட்டிலுள்ள புத்தகுரு சிதம்பரம் சென்று புத்தசமயம் மெய்ச்சமயமென நிலை நாட்டவந்தான் இப்படியாக வந்த புத்தகுருவோடு சோழ அரசனும் கல்விமான்களும் கூடிய சபையில் திருவாதவூரர் சமயவாதம் செய்து இவர்களை ஊமையாக்கிய பின்பு பேசும்வல்லமையைக் கொடுத்து புத்தசமயம் பொய் சமயம் என்று நிரூபித்துக்காட்டி இவர்களையும் சைவசமயத்தவராக மாற்றி சைவசமயத்தவராக மாற்றி ஈழநாட்டரசனையும் சைவனாக மாற்றிச் சைவசமயத்தை வளர்த்தார்.

திருக்கோவாயார் என்ற சொல்லப்படும் பதிகம் பாடியது.

இப்படியாக பெரியபுராணத்தில் கூறப்படும் 63 நாயன்மார்களின் உள்ளமாகிய ஆலங்களில் இறைவன் வாழ்ந்து இவர்களின் பெயர்களினால் தமிழ்நாட்டில் செயற்கரிய செயல்களை செய்து சைவசமயமே மெய்ச்சமயமென நிரூபித்துக்காட்டி சைவ மக்களையும் நிம்மதியாக வாழும்படி செய்தது இறைவன் செயலே ஆகும். ஆதலால் திருவாதவூரரின் எலும்பும் நாடி, நாளம், தோல், இரத்தம் சேர்ந்த உடம்பு சிவன் வாழும் ஆலயமாகும். ஆதலால் நாமும் எங்கள் உடம்பே ஊனுடம்பாக வைத்திருக்காமல் சிவன் வாழும் ஆலயமாக மாற்றி இறைபணி செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மானிடப் பிறவியின் பயனை அடைவோமாக-

# திருத்தொண்டர் புராணம்

திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற திருவள்ளுவர் வாக்கினுக்கேற்ப கேடும், ஆக்கமும் கெட்ட திருவினராய் ஓடும், செம்பொன்னையும் ஒப்ப நோக்குபவராய் வாழ்ந்த திருத்தொண்டர் களின் வரலாற்றைக் கூறுவதாய் அமைந்ததே பெரிய புராணம் எனும் திருத் தொண்டர் புராணமாகும்.

இவ்வுலக மக்களுக்கு திருத்தக்க வளமைகள் யாவற்றையும் ஒளிவு மறைவின்றி வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கருவூலங்களே பன்னிருதிருமுறைகளாகும். அவற்றுள் பன்னிரண்டாவதாக அருளா ளர்களாகும், இறையருளாலும் அமைக்கப்பெற்ற பெருமையுடையது பெரிய புராணம். இப்பெரிய புராணத்தில் தெளிவாகவும், பிழிவாகவும் அமைந்ததே சிவஞான போதத்தின் பன்னிரண்டாவது நூற்பா.

திருத்தொண்டர் புராணத்தை அருளிய சேக்கிழாரின் வரலாற்றையும் சுருக்கமாக பார்க்குமிடத்து இவர் சேக்கிழார் குடியிற் பிறந்து அருண்மொழித்தேவர் என்னும் பிள்ளைத் திருநாமத்தையும் குரிப்பெயராகிய சேக்கிழார் எனும் பெயருடையவர். குன்றத்தூரில் வாழ்ந்தவர் இவரின் சிவபக்தியையும் மதிநுட்பத்தையும் அறிந்த சோழநாட்டு மன்னர் வளவர்கோன், இவரைத் தனது தலைமை அமைச்சராக்கினர்.இதனால் உத்தம சோழ பல்லவராயன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றவர்,

இவர் மன்னனுக்கு நல்லமைச்சர் ஆகவும் சிவம் வளர்க்கும் தொண்டராகவும் வாழ்ந்தவர் அப்பொழுது சமண சமயம் தழைத்தோங்கிய காலம். மன்னன் சீவக சிந்தாமணி போன்ற சமண காப்பியங்களை படித்து, சுவைப்பதைக் கண்ணுற்ற சேக்கிழால் மனம் வருந்தி தில்லை நடராஜரிடம் சென்று தனது இடர்களை முறையிட்டார். அச்சம். மானாட. மழுவாட, மதியாட, புனலாடா. மங்கை சிவகாமியாட உலகத்து உயிர்களையெல்லாம் ஆட்டி வைக்கும் ஆடலில் வல்லவனான அம்பலக் கூத்தன் அருளால் 'உலகெலாம் என அசரீதி வாக்கு பேரொலியாக சிதம்பர இரகசியத்தில் ஒலித்தது. அவ்வமயம் தில்லை வாழ் தவச்சிந்தை உடையவர்களும், முப்போதும் திருமேனி தீண்டிப் பூசை செய்பவரான தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரரும், மடத்துத் தலைவர்களும் அசரீர வாக்கை செவிமடுத்து உள்ளம் உருகினார்கள்.

இப்படியாக, சிதம்பரேஸ்வரர் 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்த தெய்வச் சேக்கிழார் திருத் தொண்ட புராணத்தை அருளினார். இந்நூல் தமிழ் இனப் பண்பாடு, நாகரிக வரலாறுகளை விளக்குவதாக அமைகிறது. இது 4286 பாடல்களைக் கொண்ட இத்திருத் தொண்டர் புராணமானது 'உலகெலாம் என்று ஆரம்பித்து 'உலகெலாம் என நிறைவுபெறுகின்ற சிறப்புடையது. இத்தகைய போற்றக்கூடிய இப்புராணம் 'இறைநூல்' எனப்படுகிறது.

தெய்வச் சேக்கிழாரினால் 'மாக்கதை' எனவும் குறிக்கப்படுகின்றது இத்திருத் தொண்டர் புராணம். படிப்பதைப் படித்துக் கண்ணீர் உகுத்து உருகி நிற்பவர்களை

மேன்மேலும் உயர்த்தி சிவப் பரம்பொருளின் திருவடியிற் சேர்ப்பிக்கும் திறனை உடையதே பெரியபுராணம் என்று உணர்த்தவே எடுக்கும் மாக்கதை' என்றருளினர்; சேக்கிழார் பெருமான் கி.பி 300 தொடக்கம் கி.பி 900 வரை தமிழக வரலாற்றைப் பதிவு செய்திருப்பதால் இக் காப்பியம் வரலாற்றுக் காப்பியம் என அறிஞர்களால் போற்றப்படுகின்றது.

தமிழில் தோன்றிய காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்குப் பிறகு தமிழ்க் காப்பியமாகவும் தமிழ் மண்ணில் வாழ்ந்த 63 அருளாளர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் பெருங் காப்பியமாகவும் திருத் தொண்டர் புராணம் அமைகின்றது. அத்துடன் வாழ்வியலை எடுத்துரைக்கும் பெருங்காப்பியமாக, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய காப்பியமாக பெரிய புராணம் திகழ்கின்றது.

திருத்தொண்டத் தொகை எனும் முதல் நூலை அடிப்படையாய் வைத்துத் திருத்தொண்டர் என்னும் வழி நூல் இயற்றப்பட்டது. இவ்விரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியுள்ளார்.

திருத்தொண்டர் புராணத்தின் விழுமியங்கள் என பின்வரும் மூன்றைக் கருதலாம். அவையாவன தொண்டு, பக்தி, குறிக்கோள் என்பவையாகும். இவை மூன்றும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளோடு விளக்கப்பெற்றுள்ளன. அத்துடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளுக்கு அறுபத்து மூவரும் உரியவர்கள். முப்பதிற்கும் மேற்பட்ட நாயன்மார்கள் உணவிடும் அறத்தையும், கணநாதர், முருகர் என்போர் பூக்கொண்டு இறைவனை அருச்சித்தவர்கள் திருமூலர் யோக நெறிக்கும், பூசலார் ஞானநெறிக்கும் என திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்படு கின்றது.

அடுத்து பக்தி உணர்விற்கும், பணிவுக்கும் மிகுந்த அளவு முக்கியம் கொடுத்தவர் அப்பர். மணிவாசகர் பக்தி நெறி அறிவித்துத் தன்னுடைய பழவினைகளை இறைவன் நீக்கியதாகக் கூறியுள்ளார். நம் ஊன் உடம்பில் உறைந்துள்ள இறைவனை அடைய கடும் முயற்சி செய்த சித்தர்களால் கூட அடைய முடியாதவன் இறைவன். ஆனால் பக்திமையால் வணங்கும் அடியார்களுக்கு முக்தி கொடுத்து இறைவன் அவர்களுக்கு முன் நிற்கிறார்' என்கிறார் திருமூலர்.

சிவனடியார்களின் முக்கிய பண்பு மனச்செம்மை ஆகும். மெய்மையான தவத்தையே அவர்கள் மெய்ப்பொருள் என கருதினர். இக்கூற்றுக்கு மெய்ப்பொருள்நாயனார், ஏனாதி நாயனார் போன்றோரின் வரலாறு நல்ல சான்றுகளாகும். மற்றும் தமது கொள்கைகளை இழக்காத மாண்புடைய அடியார்களுக்காக இறைவனே இரங்குகின்றார். இயற் பகை நாயனார் வரலாறு இதற்கு மிகப் பொருத்தமான சான்றாகும். இயற்பகை நாயனாரைப் பார்த்து இறைவனே இயற்பகை முனிவா ஓலம்

ஈண்டு நீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலாதவனே ஓலம்
அன்பனே ஓலம் ஓலம்

செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்' என்று ஆறுமுறை ஓலமிட்டார் என்றால் அடியவர் பெருமையை என்னென்பது?

நாயன்மார்கள் காலத்தில் தலங்கள் எப்படி இருந்தனவோ அவ்வாறு மட்டுமே

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுகின்றார். எனவே தான் இப்புராணம் ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழுகின்றது. இக்காப்பியத்தில் பெண் பெருமை, ஒப்புரவு, குருநெறி, தொண்டின் சிறப்பு பற்றியும் சேக்கிழார் பெருமான் எடுத்தா ளுகின்றார்.

அம்மை அப்பரின் அருளாற் தோன்றிய இத்திருத்தொண்டர் புராணத்தை பன்னிரண்டாம் திருமுறையாக சேக்கிழார் வகைப்படுத்தினார். இவர் தில்லையம்பலம் பதியில் தங்கி திருத்தொண்டர்புராணத்தை அரனடியில் அனைவருக்கும் அறிவித்து, பின்பு அம்பலவாணர் திருவடி நீழலில் இரண்டறக் கலந்து பேரின்பமெய்தினர். தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருகிய தெய்வத்தமிழ்ப் பனுவலாகிய திருத்தொண்டர் புராணத்தை இத்தமிழ் உலகம் ஏற்றிப் போற்றி வாழ்வாங்கு வாழ்ந்து பயனடைய வேண்டும். நாமும் போற்றி நற்கதி அடைவோம் வாரீர்.

*அறிவியல் கவிதை*

# தமிழர் வாழ்வில் கல்வியா? செல்வமா? வீரமா?

குனிந்து கற்ற கல்வியது-உனை
குன்றாய் நிமிரச் செய்துவிடும்
பதவி உனைத் தேடிவரும்
பணமும் உன்னை நாடி வரும்.

பணமது உன்னை நாடிவர
குணமது கொஞ்சம் மாறி விடும்
இனசனம் உன்னைத் தேடிவரும்
ஈடில்லா செல்வத்தால் மனம் கர்வமுறும்.

ஈடில்லா செல்வத்தால் நீ கர்வமுற்று
இணையில்லை உனக்கு யாருமென்று
திமிர் பிடித்து நீ கர்வமுற
திரண்டிடும் பகை பல உனை வீழ்த்த

திரண்டிடும் பகையது உனை அழிக்க
வீரத்துடனே எதிர்கணை தொடுக்கும்
உறவது உனக்கு எதிராகும்
ஊரும் உனக்குப் பகையாகும்.

ஊரும் உனக்குப் பகையாக
வேருடன் நீ வீழ்ச்சியுற
யாருமற்ற அநாதையைப் போல
அனைத்துமே உனக்கு எதிராகும்

கல்வி, செல்வம், வீரமிருந்தாலும்
கற்ற வழியே நீ பணிவு கொண்டால்
உற்றார், பெற்றார் உறவாகும்
உலகே உனக்கு புகழ் சூட்டும்

**கவிதாயினி சாந்தியோகா**
அனைத்துலக தமிழ் மாமன்றம்
திருச்சிராப்பள்ளி
இந்தியா

# தமிழிசைச் செல்வம்

கலாபூஷணம் எஸ்.சிவானந்தராஜா

சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், பரிபாடல், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவற்றில் பண்டைத்தமிழரின் இசைபற்றிய தகவல்கள் பல உள்ளன. புறநானூற்றில் பண்வகைகள், குழல்-யாழ் வகைகள், தண்ணுமை- பெருவங்கியம் எனப் பாணர்களின் இசைமீட்ட பலசெய்திகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் யாழிசை வல்லோன், பாடலாசிரியன், தண்ணுமையாளன், நாட்டியபெண் என்போரின் இலக்கணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனாயயாயனாரின் புராணத்தில் குழலிசை வல்லோனின் வாசிக்கும் முறை- இலக்கணம் யாவும் அழகாகத் தரப்பட்டுள்ளது.

திருமுறை- திருப்புகழ் பாடல்களில் பண்கள், இசைக்கருவிகள் யாவும் கூறப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். பண்டைத்தமிழரின் இயற்கை யோடிசைந்த வாழ்வே தமிழிசையின் தோற்றம் ஆகும். இயற்கை ஒலியினது நுட்பங்களை அறிந்து. தாம் வாழ்ந்த நிலங்களுக்குரிய ஏழிசை. யாழ், பண். பறை வகைகளை அமைத்தனர். இயற்கையை இசைக் கண்கொண்டு உறவாடினர். நில இயல்புகளுக்கான மக்கள்- யாழ்- பண்- பறை விபரங்களை காண்க:

| நிலம் | மக்கள் | யாழ் | பண் | பறை |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | குறவர் | குறிஞ்சி | குறிஞ்சி | தொண்டகம்,துடி |
| பாலை | வேடர் | பாலை | பஞ்சுரம் | துடி, நிறை கோட்பறை |
| நெய்தல் | பரதர் | விளரி | செவ்வழி | மீன் கோட் பறை |
| முல்லை | இடையர் | முல்லை | சாதளி | ஏறு கோட் பறை |
| மருதம் | உழவர் | மருதம் | மருதம் | மண முழவு கிணை |

பண்டைத்தமிழர், தாம் வாழ்ந்த நில இயல்புகளுக்கேற்ப, மிருகங்கள்- பறவைகளின் ஒலிகளை ஏழிசையோசைகளாகக் கொண்டனர். இயற்கை ஒலி நுட்பங்களை எத்துணைதூரம் செவிமடுத்தனர் என்பதை ஏழிசையோசைகள் மூலம் நாம் அறியலாம். இவ்வோசை நுட்பங்களை அறிந்த பாணர்கள், தமது குரலிலும்- கருவியிலும் ஏழ்வகைப்பாலைகளையும் இசைத்து, வலிவு- மெலிவு- சமம் மூன்றிலும் மக்களுக்கும், மன்னர்களுக்கும் இன்பம் தந்தனர்.

வண்டு துளைத்த மூங்கிலிலே வந்த இனிய ஓசையைக் கொண்டு, குழற் கருவியை அமைத்தனர். வேடனின் வில் நாணில் பிறந்த ஒலிகளைக்கண்டு, குமிழங்கொம்பிலே நார் கொடுத்து வில் யாழினை அமைத்தனர். வில் யாழ் வளர்ச்சியடைந்து- பல நரம்புகளுடைய சகோட யாழ், செங்கோட்டு யாழ், பேரியாழ் என்பன உருவாகின. மன்னர்கள் அவையிலே குழல்- யாழ் கருவிகள் மூலம் யாழ்ப்பாணர்கள் இசை மீட்டி, தமிழிசை வண்ணங்கள் பாடி பொன்னும், பொருளும் பெற்றனர். மன்னர்களும் இசையினில் வல்லவர்களாகி கலைவாழ்விற்கு பாணர்களுக்கும்- விறலியர்களுக்கும் உதவினர்.

இயற்றமிழிற்கு எழுத்து- சொல்- பொருள் இருப்பது போன்று, இசைத்தமிழிற்கு இசை-

பண்- திறம் மூன்று உறுப்புகள் உள்ளன. யாழினை நிலைக்களனாகக் கொண்டே பண்கள் வகுக்கப்பட்டன. யாழில் பிறக்கும் நாற் பெரும் பண்களாவன- பாலையாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், செவ்வழி யாழ் என்பனவாகும். இந்நாற் பெரும் பண்களும் ஒவ்வொன்றும் 21 திறங்களாகி (4 X 21) 84 பண்களாகிற்று. இவற்றுடன் பெரும்பண்கள் 16, மற்றும் 3 பண்கள் சேர்ந்து 103 பண்கள் உண்டாகின.

தமிழர் தம்வாழ்வில்
விடியற் காலையில் - மருதப் பண்ணும்
மாலையில் - செவ்வழிப் பண்ணும்
நண்பகலில் - பாலைப் பண்ணும்
நடுயாமத்தில் - குறிஞ்சிப் பண்ணும்
இசைத்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

யாழ் நரம்பில் பிறக்கும் ஏழிசைக்கும் உரிய பெயர்கள் பின்வருமாறு:
குரல்- துத்தம்- கைக்கிளை- உழை- இளி- விளரி- தாரம் என்பனவாகும்.

எமது சாரீர வீணையில் நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, பல், தலை ஆகிய உறுப்புகள் மூலம் ஏழிசை பிறக்கின்றது. யாழிலும்- குழலிலும், குரலிலும் பாணர்கள் நாற்பெரும் பண்ணையும், ஏழ்பெரும் பாலையினையும் இசைத்தனர்.

கி.பி 7ம் நூற்றாண்டு முதல்–13ம் நூற்றாண்டுவரை தமிழிசையில் பன்னிரு திருமுறைகள், நாலாயிரம் திவ்யப் பிரபந்தங்கள், திருப்புகழ் பாடல்கள் தோன்றி, ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்திற்று. பொலிவுற்றது. திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் பாடிய பலவகைப் பண்கள், தமிழிசை வண்ணங்கள், திருநீலகண்ட யாழ்ப்பாணர் செங்கோட்டு யாழ் மூலம் மீட்டிய வரலாறு நாம் அறிந்ததே. திருமுறைகளைப் பண்முறை வகுத்தமை, உமாபதி சிவாச்சாரியாரின் திருமுறை கண்ட புராணத்தில் 31-34 பாடல்கள் மூலமும், கட்டளை விபரங்கள் 35-45 பாடல்களிலும் காணப்படுகின்றன. திருமுறைப்பண்கள் பாடும் கால அடிப்படையில் பகற் பண்கள்14, இராப் பண்கள் 11, பொதுப் பண்கள் 3 வகுக்கப் பட்டுள்ளன. இப்பண்களே தற்பொழுது நடைமுறையில் உள்ளன.

| பகற் பண்கள் | இராப் பண்கள் | பொதுப் பண்கள் |
|---|---|---|
| 1. புறநீர்மை | 1. தக்கராகம் | செவ்வழி |
| 2. பியந்தைக் காந்தாரம் | 2. பழந்தக்கராகம் | செந்துருத்தி |
| 3. கௌசிகம் | 3. சீகாமரம் | திருத்தாண்டகம் |
| 4. இந்தளம் | 4. கொல்லி | யாழ்முரி |
| 5. தக்கேசி | 5. கொல்லிக்கௌவாணம் | |
| 6. நட்டராகம் | 6. வியாழக்குறிஞ்சி | |
| 7. சாதாரி | 7. மேகராகக் குறிஞ்சி | |
| 8. பழம்பஞ்சுரம் | 8. குறிஞ்சி | |
| 9. காந்தாரபஞ்சமம் | 9. அந்தாளிக்குறிஞ்சி | |
| 10. பஞ்சமம் | 10. திருநேரிசை | |
| 11. நட்டபாடை | 11. திருவிருத்தம் | |
| 12. காந்தாரம் | | |
| 13. திருக்குறுந்தொகை | | |

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரின் பாடல்களில் காணப்படும் சந்தங்கள், பல்வேறு தாளவிகற்பங்களை எடுத்துக்காட்டும் அற்புதமான படைப்பாகும். இறைவன்- முருகனைப் போற்றிப் பாடும் பாடல்களில் பல இசைக்கருவிகள் குறிப்படப்பட்டு பல முரசங்கள் ஒலிக்கும் ஒலியை அற்புதமாகக் கையாண்டுள்ளார். சங்க காலத்தில் ஊது கருவிகளை வங்கியங்கள் என்றும், தாளங்கொட்டும் முரச- பறை வாத்தியங்களை வாச்சியங்கள் என்றும், கூட்டிசைக் கருவிகளை பல்லியம் எனவும் அழைத்தனர்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் பின்னர், தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் கி.பி 17ம் நூற்றாண்டுவரை வடமொழியினது செல்வாக்கு அதிகரித்தது. இதனால் தமிழிசையின் வளர்ச்சி தடைப்பட்டது. வட- தென்மொழி இசை நூல்களையாராய்ந்த கோவிந்த தீட்சிதர், வேங்கட மகி என்போர் 72 தாய் இராகங்களின் கட்டமைப்பை அறிமுகப்படுத்தினர்.

சங்கீத மும்மூர்த்திகளாக விளங்கிய புரந்தரதாசர், தியாகராஜஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீட்சதர் என்போர் காலத்தில் பல சமஸ்தானங்களும், கொடைவள்ளல்களும் இசையை வளர்த்தனர். இசைப்பீடங்கள் ஏற்படுத்தினர். மேற்படி மும்மூர்த்திகள் பல கிருதிகளை தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம் மொழிகளில் இயற்றினர். பல தாய் இராகங்களிலும், அபூர்வ ராகங்களிலும் உருப்படிகளை இயற்றி இசைப்பாடல்களைத் தந்த பெருமை இவர்களையே சாரும், சமகாலத்தில் கோபாலகிருஷ்ணபாரதியார், அருணாசலக் கவிராயர். முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை தமிழில் கீர்த்தனை வடிவில் பல பாடல்களைத் தந்தனர். புரந்தரதாஸர் அப்பியாச கான உருப்படிகளையும் கீதம், பதம், தில்லானா வடிவப்பாடல்களைத் தந்ததுபோல தமிழிலும் பலர் முன்வந்து பாடல்களைத் தந்தனர்.

தமிழிசையின் தனித்துவத்தை இசைக்கச்சேரிகள், பஜனைகள், இசைப்பேருரைகள், நாட்டிய- வில்லிசை நிகழ்ச்சிகள் மூலம் பலர் தமிழ்மொழியில் பிரசித்தனர். பல சைவ ஆதினங்கள் தோன்றி தேவார- திருப்புகழ் பாடல்வல்லோரை பயிற்சி கொடுத்து உருவாக்கினர். 1929ல் தமிழகத்தில் அமைந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப்பீடத்தின் மூலம் பலவகைத் தமிழிசைப் பாடல்கள் இயற்றப்பட்டு வித்வான்களை உருவாக்கினர். பெரிய சாமித்தூரன், பொன்னையாப்பிள்ளை, யோகி. சுத்தானந்தபாரதியார், பாபநாசம் சிவன் எனப் பலர் முன்வந்து தமிழில் கீதம், சூளாதி, ஸ்வரஜதி, வர்ணம், பதம், கீர்த்தனை, தில்லானா எனப் பல வகைப்பாடல்களை இயற்றினர். இவற்றை இசையமைத்து பல தொகுதிகளாக அண்ணாமலை இசைப் பீடத்தினர் வெளியிட்டனர். இலங்கையினின்றும் பலர் முன்வந்து இசைத்துறையில் பயிற்சி பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டங்களைப் பெற்றனர்.

இலங்கையில் 1931ல் வடஇலங்கைச் சங்கீத சபையும் 1969ல் யாழ். இராமநாதன் இசைக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டதன் மூலமும், அரச கல்லூரிகளின் இசையாசிரியர்களின் நியமனத்தாலும் இசைவளர்ச்சி மேலோங்கிவருகின்றது. குருகுலக் கல்வி, நிறுவனமயப் படுத்தப்பட்டதனால், விரும்பியவர்கள் யாரும் இசையைக் கற்கலாம்.

இன்று தமிழிசையில் சாத்திர ரீதியிலும், மெல்லிசையாகவும் பலர் புலமைபெற்றிருப்பதும், இவர்களது திறமையை வெளிப்படுத்த பல ஒலி- ஒளி ஊடங்கங்கள் முன்வந்து செயற்படுவதும் தமிழன்னையின் கரங்களைப் போற்றுவதாக அமையும்.

# இந்து சமயமும் மனித மேம்பாடும்

திருமதி கோ. வளர்மதி
ஆசிரியர்
யா/ வட்டு இந்துக் கல்லூரி

உலகில் இன்று நிலவி வரும் பெரும் சமயங்களில் இந்துசமயமும் ஒன்றாகும். இலகின் பலபாகங்களிலும் கோடிக்கணக்கான மக்கள் இந்து சமயத்தைப் பின்பற்றி வருகின்றார்கள். ஒருவரால் ஒரு இடத்தில் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்படாத பழமையும் பெருமையும் மிக்க சமயமே இந்து சமயம் ஆகும். தொன்று தொட்டு வரும் வாழ்க்கை நெறி என்பதால் சனாதன தர்மம் என்ற பெயர் இந்து சமயத்திற்கு வழங்கப்படுகின்றது.

இந்துசமயம் கலைகளோடும் பண்பாட்டோடும் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்துள்ளது. ஒவ்வொரு தனிமனிதனும் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி முறையாக வாழ்வதற்கும் இந்து மத தத்துவங்கள் வழிகாட்டுகின்றன. புற உலகை மட்டுமன்றி அகத்தையும் சிறப்பாக ஆன்மாவையும் இந்து சமய தத்துவங்கள் ஆராய்கின்றன. இந்து மதத்தின் உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் ஒவ்வொரு இந்து மதத்தவரும் வாழ்வதற்கும், ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கும் வழிவகைகளைத் தெளிவாகக் கூறுகின்றது.

இந்து சமயத்தவர்களின் மேம்பாட்டிற்கு பெரிதும் துணை புரிவன கோயில்கள் ஆகும். ஆன்மா இறைவனிடம் வயப்படும் இடம் ஆலயம் ஆகும் ஆலயத்தில் நடைபெறும் நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிக கிரியைகள் என்பன அங்கு வழிபடவரும் ஒவ்வொருவரையும் இறைவனிடம் வழிப்படுத்தும் சாதனமாகக் காணப்படுகின்றது. இத்துடன் இந்துக் கோயில்கள், கலைக்கருவூலங்களாகத் திகழ்கின்றன. இசை, நடனம், நாடகம், சிற்பம். ஓவியம் என்பன இக்கோயில்கள் உஊடாக மக்கள் வாழிவினை செம்மைப்படுத்துகின்றன. இக்கலைகள் மனித மனங்களின் எண்ணற்ற சிந்தனைகளைத் தூண்டி அழகியல் உணர்வுகளையும் ஆனந்தத்தையும் ஏற்படுத்துகின்றன.

இந்துமதத்தில் தமிழ்வேதம் எனப் போற்றப்பெறும் திருமுறைகள் இறைபுகழை எடுத்தியம்புகின்றன. இறைவனை இசையால் பாடுவதன் மூலம் மனித உள்ளங்கள் மேம்பாடு அடைவதைக் காணலாம். இசையானது ஓம் என்னும் ஒளியின் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. உலகிலுள்ள ஜீவராசிகளை, குறிப்பாக மக்கள் இறைவனுடன் இணைப்பதற்கு முதற்படியான இசைவுடன் வாழ்தல் இசைந்து வாழ்தல் ஆகிய தன்மையை உருவாக்கி மனிதமேம்பாட்டிற்கும் ஆன்ம ஈடேற்ற த்திற்கும் வழிசமைப்பதே இசையாகும். எனவே இந்துசமயம் மனித நடத்தைக் கோலங்களையும் உள்ளத்தின் தொழிற்பாட்டினையும் மேம்படுத்துவதற்கு இந்துமதத்தின் தேவார, திருவாசக திருமுறைகள் உதவுகின்றன.

இந்துக்கள் தம் வாழ்வில் நாடோறும் செய்யவேண்டிய கடமைகள் நித்திய கருமங்கள் எனப்படும். காலையும் மாலையும் அனைவரும் கடவுளை வணங்கவேண்டும். சிவ தீட்சை பெற்றோர் அனுட்டானம் பார்த்தல் வேண்டும். காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். போசனம்

செய்யும் போது அதனை இறைவனுக்கு அர்ப்பணித்து அதன் பின் உண்ண வேண்டும். சூரியன் மறைந்ததும் கை, கால், முகம்கழுவி, வீபூதி தரித்துச் சிவபெருமானை வணங்கித் தோத்திரச் செய்யவேண்டும். மீண்டும் இறைவனைத் தியானித்துச் சிவசிந்தனை யோடு நித்திரைக்குச் செல்லுதல் வேண்டும் இச்செயற்பாடுகள் மனித மேம்பாட்டிற்கு வழிவகுப்பதைக் காணலாம்.

வீபூதி, உருத்திராக்கம் என்பன மூலம் அகத்தூய்மையும் புறத்தூய்மையும் ஏற்படுகிறது. "நீறில்லா நெற்றி பாழ்" என திருநீறு தரிப்பதன் அவசியத்தை ஔவையார் விளக்குகிறார். சம்பந்தர் பாண்டியனின் வெப்புநோயை தீர்த்து திருநீற்றை மகிமைப்படுத்துகிறார். சம்பந்தர் திருநீற்றுப்பதிகத்தில் திருநீறு அணிவதால் அழகு, செல்வம், நித்தியவாழ்வு, இன்பம், பக்தி, மனத்தூய்மை என்பன கிடைக்கும் எனக்கூறுதலிலிருந்து எமது வாழ்க்கையிலுள்ள அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞானமாகிய மேலான செல்வத்தை தருவது திருநீறு ஆகும்.

பூக்களைக் கொண்டு செய்யும் வழிபாடே பூசையாகும். பூமாலை கட்டி வழிபடுவது சிறப்பான வழிபாடாகக் கொள்ளப்படுகின்றது. பலவகையான மலர்களால் இறைவனுக்கு மாலை சாத்தி வழிபடுவதால் மனதுக்கு சாந்தியும் அமைதியும் கிடைக்கிறது. சைவ சமயப்பண்பாட்டில் அழகியல் உணர்வின் வெளிப்படையாக அமைவது கோலக் கலையாகும். அரிசிமா, மஞ்சள் மா முதலியவற்றால் கோலம் போடும்போது அவை எறும்பு முதலியவற்றிற்கு உணவாகின்றன. இதனால் கோலக்கலையானது ஜீவகாருண்யப் பண்பையும் வளர்க்க உதவுகின்றது.

இந்து மதத்தில் தமிழ் வேதம் எனப் போற்றப்படும் திருமந்திரம் ஒரு யோகநூலாக, வைத்தியநூலாக, தத்துவ நூலாக, வாழ்க்கை நூலாக எல்லாம் பரிமளிக்கின்ற ஞானத் திருநூல் ஆகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல் கருத்துக்கள் பல திருமந்திரத்திலே காணப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் செய்யக்கூடிய அடிப்படை அறங்களைத் திருமந்திரம் எடுத்துவிளக்குகின்றது.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை.." என்ற திருமந்திரப் பாடலானது வாழ்வின் எளிமையை எடுத்து இயம்புகின்றது. தினந்தோறும் பூஜையில் ஒரு பச்சிலையை எடுத்து இறைவனுக்கு அர்ச்சனை செய்வது எளிய காரியமாகும். பசுவிற்கு ஒரு பிடி உணவு கொடுப்பது யாரும் செய்யக்கூடிய எளிய அறமாகும். பிறருக்கு ஒரு பிடி உணவைத் தானமாகக் கொடுப்பது அறங்களில் சிறந்த அறமாகும். பிறரிடம் கடுஞ்சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் செய்யக்கூடிய அறம் ஆகும். இவ்வாறு இந்துப் பண்பாட்டின் அடிப்படை அறங்கள் அனைத்தையும் திருமந்திரம் கூறுகின்றது.

இந்துசமயம் கூறுகின்ற ஆச்சிரம தர்மங்களில் இல்லறமும் ஒன்றாகும். உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கு காற்று எவ்வாறு அவசியமோ அவ்வாறே மற்றைய ஆச்சிரம நெறிகள் நிலைத்து நிற்பதற்கும் இல்லறத்தானின் பங்களிப்பு அவசியம் என மனுதர்ம சாஸ்திரம் கூறுகின்றது. எனவே ஒவ்வொரு இந்துவும் சமய சாஸ்திர விதிப்படி முறைப்படி வாழ்ந்து, இந்துசமய பெருமைகளை உலகறியச் செய்து இன்புற்று வாழ்வோம்.

'மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்'

# அறநெறிப்பாடசாலையின் தோற்றம்

திரு கு. பொன்னுத்துரை
ஓய்வுநிலை ஆசிரியர்
சுழிபுரம்

அறநெறி என்பது எங்கள் பாரம்பரிய சமயத்தின் ஊடாக மாணவர்களை எல்லா நிலையிலும் வளப்படுத்துவதாகும். ஆரம்பத்தில் 'குரு குலம்' மாணவர்களுக்குத் தேவையான எல்லாக் கலைகளையும் வழங்கியது. எண், எழுத்து தொடக்கம் போர் பயிற்சி வரை (வில்வித்தை) யாவும் இதற்குள் அடங்கும். இப்பயிற்சியை முனிவர்கள் வழங்கினார்கள். இன்றைய பிள்ளைகள் முனிவர்கள் என்றால் யார் என்று கேட்பார்கள். இப்போது நாம் நவீன காலத்தில் வாழ்கின்றோம். நம் பிள்ளைகளையும் அவ்விதம் வளர்த்துவிட்டோம்.

முனிவர்கள் துறவறம் பூண்டவர்கள் அநேகமாக இவர்கள் காட்டில் ஆச்சிரமம் அமைத்து அங்கு வாழ்வார்கள். சிலர் கிராமப் புறத்திலும் வாழ்வதுண்டு. பெற்றோர் மிகவும பயபக்தியுடன் முனிவரின் ஆச்சிரமத்துக்குச் சென்று குருவை வணங்கித் தம்பிள்ளைகளைக் கல்வி பயில்வதற்கு அவரிடம் ஒப்படைப்பார்கள். பிள்ளைகளும் குருவுடன் ஆச்சிரமத்தில் இருந்து குருவுக்குப் பணிவிடை செய்து மிகவும் பயபக்தியுடன் அவரிடமிருந்து சகல கலைகளையும் கற்பார்கள். வருடங்கள் பல செல்லும். ஒரு தனி மனிதனது சமூகவாழ்வியலுக்கு ஏற்ற வகையில் எல்லாக் கலைகளையும் கற்று தேர்ச்சி பெற்று குருவின அனுமதியுடனும் ஆசியுடனும் தம்தம் இருப்பிடம் சென்று மாம் கற்ற கல்வியூடாக வளமான ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து அறிவாளியாக, பண்பாளனாக பிறருக்கும் ஏற்ற வகையில் மிகவும் எளிமையாக வாழ்வார்கள்.

இரண்டாவது வகை 'திண்ணைப் பாடசாலை' இதில் வீட்டில் பிள்ளைகளைத் திண்ணையில் இருத்திக் கற்பிப்பதாகும். கல்வி அறிவு ஒழுக்கத்தில் மேம்பட்ட பெரியோர் இத்திண்ணைப் பாடசாலையை நிர்வகித்தனர். கிராமத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளையும் அழைத்துத் திண்ணையில் இருத்திக் கற்பிப்பர். இதில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு கிடைக்காது. எல்லாப் பிள்ளைகளையும் இத்திண்ணையில் இருத்தி கல்வி, ஒழுக்கம் போன்ற பல கலைகளையும் பிள்ளைகள் கற்றுக் கொள்வர். இங்கே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்வி கேள்வி போன்ற விடயங்களில் தன்நிறைவு பெற்று பொறுமைசாலிகளாக இருப்பர். அத்துடன் சமுதாயத்தில் பெருமதிப்புக்குரியவராகவும் ஏனையோர் மதிக்கத்தக்க முறையில் மனித நேயமுடையவராகவும் விளங்குவர். இவையாவும் இலவசப் பணியாகவே நடக்கும்.

மேற் குறிப்பிட்ட கல்விநிலை இப்போது கிடையாது. அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பாடங்களைப் படிப்பர். இதன் நோக்கம் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார் படுத்துவதாகும். பிள்ளை ஐந்து வருடங்கள் பெற்றோருடன் இருந்து விட்டுப் பாடசாலைக்கு வருகிறது. இங்கு பிள்ளைகள் ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படு கிறார்கள். இங்கே பிள்ளைகளுக்குக் கல்வியோடு ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்கள். இங்கே ஏதும் பிசகு ஏற்பட்டால் பிள்ளையின் தலை விதியே மாறிவிடும். அந்தளவுக்கு முக்கிய மானது பாடசாலையும், ஆசிரியரும், சகமாணவர்களும், ஆசிரியரின் வழிகாட்டல், 'வாழ்ந்து காட்டல்' சரியாக அமையாது விட்டால் பிள்ளைகள் தறிகெட்டு விடுவார்கள்,

இன்றைக்கு நம் தமிழ் மண் படும் அவலத்தைத் தணிக்க அறநெறிப் பாடசாலைகள் மிகமிக அவசியமாகும். அத்துடன் அது தரமாகவும் பிள்ளைகளைக் கவரக்கூடியதாகவும் இயங்கவேண்டும். அத்துடன் இங்கு கல்விப்போதனையில் ஈடுபடும் ஆசிரியர்களும் மிகவும் முக்கியமானவர்கள். ஏனென்றால் ஆசிரியரைத்தான் மாணவர்கள் பின்பற்றுவார்கள். பொதுவாக ஆசிரியரின் நடை, உடை, பாவனை, பேச்சு யாவும் மிக உயர் நிலையில் இருக்கவேண்டும்.

நாங்கள் தமிழர்கள் எங்களுக்கென்று ஒரு கலை, கலாசாரம், சமூகப் பண்பாடுகள் உண்டு. எங்கள் மரபைப் பின்பற்றுதல் எங்கள் மூதாதையர் தாய் தந்தையரைப் பின்பற்றுதல், சமயப் பெரியார்களைப் பின்பற்றுதல் அண்மையில் வாழ்ந்து மறைந்த எங்கள் வழிகாட்டிகளான சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், மேன்மைக்குரிய தனிநாயகம் அடிகள், நாம் சமயப் புத்தகத்தில் படிக்கும் சமய குரவர்கள் போன்றோர் எம் இனத்தின் வழிகாட்டிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக எம் கண் கண்ட தெய்வங்களாகிய பெற்றோர், அந்தக் காலத்திலேயே சொல்லிவைத்துவிட்டார்கள் எம்மூதாதையர் 'தாயில் சிறந்த கோவிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' இத்தெய்வங்களின் சொற்களை நாம் மதியாததினால் எம் இனம் இன்று அல்லோல கல்லோலப் படுகிறது. அழிவுப் பாதையில் போய்க் கொண்டிருக்கின்றது.

சுயநலம், ஆசை மனிதனைப் பிடித்த ஒரு பேய் பிடித்த அறிவாளிகள் அதற்குள் அகப்படமாட்டார்கள். இன்று நம் நாட்டில் நடக்கும் கொலைகள், வாள் வெட்டுகள், வழிப்பறி, கொள்ளை, களவு தெய்வங்களாக மதிக்கவேண்டிய தாய்க்குலத்தை இம்சைப் படுத்துதல் போலியான வாழ்க்கை வாழுதல், பொய் பேசுதல், மூப்பு இளமை இல்லாத்தன்மை, முதியோரை மதியாமை, கற்றவர்களுக்கு மதிப்புக் கொடாமை போன்றவை மலிந்து கொண்டு செல்கின்றன,

ஒருகுடும்பம் தமது குடும்பக் கௌரவம் குறையாமல் இருக்கவேண்டுமானால் அவர்கள் பெற்றோர் கனவான்களாக வாழ்ந்து பிள்ளைகளுக்கு வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். அதேபோல் கற்பித்தல் தொழிலில் ஈடுபடும் சகல ஆசிரியர்களும் நேர்மையுடனும், விசுவாசத்துடனும் தனது கற்பித்தல் தொழிலைக் கல்விச் சமூகம் மெச்சக் கூடிய வகையில் செய்து சமூகத்துக்கு வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். வார்த்தைகளால் வழிகாட்டுவதைவிட உண்மையாக வாழ்ந்து காட்டுகின்றபோது தான் சிறப்பான வழிகாட்டலாகும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நாமாக வாழ்ந்து காட்டுவோம் சமூகம் தானாக மலர்ந்து பிரகாசமாக விளங்கும் என்பது திண்ணம்.

எமது வருங்காலச் சந்ததி இளைஞர்கள் சிலர் திசை திரும்பிவிட்டனர். இவ்விளைஞர்களை நேரியபாதைக்குக் கொண்டு வரவேண்டிய பாரிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உண்டு. இதில் அறநெறிப்பாடசாலையும் தனது பங்கை முன்னோடியாகச் செய்ய வேண்டியது காலத்தின் கட்டளையாகும். கிராமங்கள் தோறும் புதிய பல அறநெறிப் பாடசாலைகளைத் திறந்து பிள்ளைகளை அழைத்துக் கற்பித்துத் தூய உள்ளங்கொண்ட இளம் சந்ததியை உருவாக்கவேண்டும். இத்தருணத்தில் இதை நாம் செய்யத் தவறுவோமாயின் தமிழ்த்தாயின் சாபத்திற்கு ஆளாவோம்.

# சைவ சித்தாந்தம் எடுத்துக்காட்டும் இவ் உலக மோட்சநிலை வழிகாட்டிகள்

**திரு கா. அழகரத்தினம்** J.P
ஓய்வுநிலை அதிபர்
மாதகல்

சித்தாந்தம் என்பது தத்துவரீதியானது. காரண காரியத் தொடர்பானது. இப்படி வாழ்ந்தால் அதன் விளைவு இவ்வாறுதான் என விளங்குகிறது.

உலகவாழ்க்கை என்பது உடம்பு எடுத்த உயிர்களாகிய மனிதப் பிறவிகள் பற்றியும், மோட்ச நிலை என்பது ஆன்மாவின் முத்தி நிலையையும் குறிக்கிறது.

**வினைகள்**

சஞ்சித வினை, பிரார்த்துவ வினை. ஆகாமிய வினை எனப்படும். நாம் முன்னைய பிறப்புகளில் வாழ்ந்த காலத்தில் செய்த வினைகளின் (நல்வினை, தீயவினை) தொகுப்பே சஞ்சித வினையாகும். வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பிறப்பிலே சஞ்சித வினையின் முழுவதையுமோ, அல்லது ஒரு பகுதியையோ அனுபவிக்கின்றோம். இதுவே பிரார்த்துவ வினை எனப்படும். அத்துடன் வினைகளையும் செய்கிறோம். இவ்வாறு அனுபவிக்கின்ற வினைகளையே யோகசுவாமிகள் எப்பவோ முடிந்த காரியம் என்றார். முற்பிறவியில் எம்மால் செய்யப்பட்ட நல்வினை, தீவினைகளை இப்பிறப்பிலே அனுபவிப்பதற்கு நாமே காரணம் என்பதாகும். இதனையே திருக்குறளிலும் 'ஊழிற் பெருவலியாவுள' என குறிப்பிடப்பட்டுள்ளது. முற்பிறப்பிலே செய்தவினைகளை முழுமை யாக அனுபவியாமலும் இப்பிறப்பிலே செய்த வினைகளை இப்பிறப்பிலேயே அனுபவியாமலும உள்ள வினைகள் ஆகாமிய வினை எனப்படும்.

**செய்கின்ற வினைகளும் அதன் செயற்பாடும்**

சடப்பொருட்கள் தாமாக இயங்காது. இதனை இயக்க, இயங்க வைக்க இதன்படி, செயல் நடைபெற இயங்கும் சக்தி தேவை. சடப் பொருளான நல்வினை, தீவினைகளை உடம்பெடுத்த ஆன்மாக்கட்கு அவை அனுபவிக்க சேர்த்து வைப்பது இறைவனின் திருவருள் சக்தி என சைவசித்தாந்தம் கூறுகிறது. இறைவன் அனைவர்மீதும் தனது கருணைப் பார்வையை செலுத்திக்கொண்டிருக்கிறார். எவருக்கும் தீமை செய்வதல்லை. நன்மையே செய்பவர். நடுவுநிலமையானவர் இன்ப வாழ்வு வாழும்போது மகிழ்வடைகிறோம். துன்ப வாழ்வு இடம்பெறும் போது அறியாமை காரணமாக மற்றையவர்களையும், இறைவனையும் குறைகூறுகிறோம். இதற்கு நாமே காரணமாக இருந்தோம் என (செய்த வினைகள்) நினைக்கத் தவறுகிறோம்.

நாம் செய்கின்ற வினைகள் இறைவன் பொருட்டு செய்பவை, உலகின் மக்கள் பொருட்டுச் செய்பவையாகும். இவை நல்வினையாகவும் இருக்கலாம். தீயவினையாகவும் இருக்கலாம். இறைவன் பொருட்டுச்செய்யும் நற்செய்கை என்பது ஆலயம் அமைத்தல் உதவுதல், விழாக்கள், ஆலயம் சார்ந்த பணிகள்

யாவையும் உள்ளடக்கும். இது பதிநல்வினையாகும். பதி தீவினைகளாவன ஆலயத்தில் குழப்பம் விளைவித்தல், களவு, கிரியைகளில் இடைஞ்சல் உருவாக்குதல் போன்றன.

பசுநல்வினை என்னும்போது உயிர்கட்கு நன்மை செய்தலாகும். தனிப்பட்ட முறையிலும் நிறுவனங்கள் ஊடாகவும் மேற்கொள்ளும் பணிகளாகும். அங்கவீனர், சிறுவர்க்கு உதவுதல், முதியோர் பராமரிப்பு இல்லங்கள், அறநெறிப் பாடசாலைகளிற்கு பங்களித்தல் போன்றன.

பசு தீவினைகள் என்பன உயிர்கட்கு தீமை செய்தலாகும். கொலை, தவறான காமச்செயல்கள், பழிவாங்கல்கள், களவு போன்றன.

இப்பிறப்பிலே நன்மை செய்பவர்கள் துன்பம் அனுபவிப்பதும், தீமை செய்பவர்கள் சிறப்பாக வாழுகின்றார்கள் என்றால், முற்பிறப்பிலே செய்த வினைகளே காரணமாகும். ஆகவே, மேற்கூறப்பட்ட சைவசித்தாந்தத்தின் கோட்பாட்டை உணர்ந்து நல்வினைகளைச் செய்துவாழ்வோம்.

அடுத்த நிலையில் பற்றுடன் செய்கின்ற, பற்றற்ற நிலையில் செய்கின்ற வினைகள் பற்றி நோக்குவோம். பற்றுடன் செய்யும் வினைகள் என்னும் போது முன்பு குறிப்பிட்ட நல்வினைகளை யார் செய்தார்கள் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில், ஏனையோரும் அறியும் விதத்தில் செய்கின்றவையாகும். இந்த செயலிற்கு மறுபிறப்பில் சிறப்புடன் வாழ்வர்.

பற்றற்ற நல்வினைகள் என்னும் போது விருப்பு, வெறுப்பு அற்ற மனப்பக்குவத்துடன் எல்லாம் சிவன் செயலே என பலனை எதிர்பார்க்காது செய்வதாகும். பேச்சுவழக்கில் வலது கை கொடுப்பதை இடது கை அறியப்படாது என்பர். பகவத்கீதையின் கர்ம யோகப் பகுதியில், கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனிற்கு உபதேசிக்கையில், உன் கடமையாகிய கர்மத்தை செய்; பலனை என்னிடம் விடு என்றார். அதர்மத்தை இல்லாது செய்து தர்மத்தை நிலைநாட்ட கடமைசெய்; உறவினர் என்ற பந்தபாசத்திற்கு உட்படாது, இராச்சியத்தைப் பெறவேண்டுமென்றும் விருப்பத்துடன் செய்யாது விருப்புவெறுப்பற்ற நிலையில் செய்யும்போது சீவாத்மா, பரமாத்மாவை அடையும் என்பதும் உட்பொருளாகும்,

**வினைகளை நீக்குபவன் இறைவனே**

உடம்பு எடுத்த உயிர்களது வினைகளை சேர்த்து வைத்த இறைவனாலேயே, வினைகளை நீக்க முடியும். நாம் செய்த தீய செயல்களை மனதார உணர்ந்து தூய்மையான மனதுடன் பக்தி பரவசத்துடன் வழிபட்டால் எங்கள் தீயவினைகளை நீக்குவார். சிவபுராணத்தில் அல்லல் பிறவி அறுப்பானே எனப்பாடினார் மாணிக்கவாசகர்.

பக்திநிலையில்நின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவில் ஞானவழியே நின்று இறைவனை அடைவர் எனக் கூறுகிறது சைவசித்தாந்த கருத்தைக் கூறும் திருமூலரின் திருமந்திரம். ஞானம் ஒன்றே முத்திக்கு காரணம் என எடுத்துக் காட்டுகிறது சைவசித்தாந்த மெய்கண்ட சாத்திரங்கள்.



# ஒண் சுடரில் தோன்றும் உயிர்

மருத்துவர் சி.யமுனாநந்தா
யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலை

அமெரிக்காவில் North Western பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மனிதனில் கருத்தரிக்கும்போது ஒளிச்சுடர்கள் உருவாவதை அண்மையில் அவதானித்து உள்ளனர். எல்லா உயிரியல் செயற்பாடுகளும் விந்து முட்டையுடன் இணையும்போதே ஆரம்பிக்கின்றன. இக்கண்டுபிடிப்பானது மருத்துவ உலகில் முக்கியமானதாக கருதப்படுகின்றது. செயற்கைமுறைக் கருத்தரிப்பின் போது ஆரோக்கியமான கருவினைத் தெரிவு செய்ய கருவுறும்போது உருவாகும் ஒளியில் பிரகாசம் கருத்தில் எடுக்கப்படுகின்றது. கூடிய பிரகாசமான ஒளியினை வெளிவிடும் கரு மிகவும் ஆரோக்கியமானதாக இருக்கும். இது செயற்கை முறைக் கருத்தரிப்பில் தற்போது ஏற்படும் 50 % பலனின்மையினை நிவர்த்தி செய்யும்.

அடுத்ததாக கருக்கலைப்பு தவறானது என்பதும் சமய ரீதியில் நோக்க வைக்கும். கருவுருவாகும்போது ஒளிச்சுடர் உருவாவது விந்து சுரோணிதத்துடன் (முட்டை) இணையும்போது சுரோணித்தினுள் செல்லும் கல்சியம் அயன்களின் செறிவு சுரோணிதத்தின் உள்ளிருந்து நாக (Zn) அயன்களை வெளியே பாய்ச்சுகின்றது. இவை ஒளிச்சுடர்கள் உருவாக ஏதுவாக அமைகின்றன. ஒளிச்சுடர்களின் உருவாக்கத்தின்போது ஐதரசன், ஹீலியம் ஆகிய அணுக்கள் உருவாகின்றன. இவையே உயிரின் முதல் அணுக்களாக அமைகின்றன.

கரு உருவாகும்போது உள்ள ஒண்சுடரினை மனிதரில் மட்டுமல்லாது ஏனைய உயிரினங்களிலும் விஞ்ஞானிகள் அவதானித்து உள்ளனர்.


இவை எமது ஆன்மீக சிந்தனையை மிகவும் கெட்டியாகக் கொள்ள வைக்கின்றன.

உடம்பு உருவாதலைத் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

"சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்று மவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும் எண் சாணது வாகுமே"

(திருமந்திரம் 464)

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும் என கரு உருவாகும்போது தெரியும் ஒளியினை இன்றைய விஞ்ஞானிகள் the dim after glow of thar seminal light எனவும் Genesis in microwave background எனவும் விபரிக்கின்றனர். உண்மையில் ஆத்மாவின் பௌதீக உயிரியல் பரிமாணத்தை சிந்திப்பவர்களுக்கு இக்கண்டுபிடிப்பு ஒரு திறவுகோலாக அமையும், ஆனால் இவை யாவும் சைவசித்தாந்த உண்மைகளாக எமது தெய்வத் தமிழில் உள்ளன. "தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்ற திருமூலரின் வாசகங்கள் மெய்யுணர்வை எமக்கு ஊட்டுகின்றன. இதனையே இன்றைய விஞ்ஞானமும் எடுத்துக் காட்டுகின்றது.



# மானிடமும் சோதிடமும்

**சோதிடர் வ. தருமலிங்கம்**
பறாளாய் வீதி
சுழிபுரம்

ஆண்டவன் படைப்பில் தேவர்கள் முதலாகவும் மானிடர் இரண்டாவதாகவும் மற்றவை படிப்படியாக அறிவில் குறைந்தவைகளுமாவன.

மானிடர்களும் இப்பிறவியில் வினைப்பயன்படி வாழ ஆண்டவன் வகுத்துள்ளான். எம் மூதாதையர் தலை எழுத்து என்பர். மக்கட் பிறவியில் பிரமச்சரியம் கிரகாஸ்ரமம் வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு இரண்டாவதான கிரகதாஸ்ரமம் மேலானது. கிரகதாஸ்ரமம் பற்றி வடமொழியில் "குணாஜ பந்தரூபேனா பசு பத்தினி சதா வர்ஷா" என்ற வாக்கியப்படி பூமியில் உள்ள இல்லறத்தவர்களுக்கு பூர்வஜென்மத்தில் செய்துகொண்ட- புண்ணியத்தின் அளவாய் பசு பத்தினி பிள்ளை வீடு முதலிய அமைவதாகும். அவை நல்லகுணம், லட்சணம், பதிவிருத்தம், ஒழுக்கம், சற்புத்திரம் அளவுப்பிரமாண சாஸ்திரவிதி முறைப்படி அமைதலாகிய சுகுண லட்சணங்களையுடையதாய் இருந்தால் மாத்திரம் இவர்களுக்கு குறைவின்றி நிறைவான பெறுபேறுகளுடன் தனு கரண புவன போகங்களை இம்மையிலும் மறுமையிலும் பயன் அடையமுடியும். அறம், பொருள், இன்பம் வீடு என்பவை நல்ல சகுணலட்சணங்களுன்ற் அமைய முயற்சிப்பது ஒவ்வொருவருடைய முதற்கடமையாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு யாவும் ஆன்மா நல்ல கதி அடைய துணையாக இருப்பவை பசு, பத்தினி, பிள்ளை இம்மூன்றையும் அனுபவிக்க வீடு முதற்காரணமாக இருக்கிறது.

வீட்டில் இருந்து அறம் செய்யலாம். பொருளீட்டலாம், இன்பம் அனுபவிக்கலாம். வீடு என்று சொல்லும்போது மனிதனுக்கு மூன்று வீடு அமையும். ஒன்று உடம்பு இரண்டாவது வசிக்கும் இல்லம். மூன்றாவது ஆலயம் (ஊரில் உள்ளது)

பெற்றதாய் இம் மூன்று வீட்டையும் அறிமுகப்படுத்துவாள். எச்சமயத்தவராகிலும் என்னிலையில் உள்ளவராகிலும் எவ்வாற்றல் படைத்தவராகிலும் இம்மூன்று வீட்டிலும் வாசம்செய்து இறைவன் பாதம் அடைய முடியும். ஆண்டவன் மனிதனையும் சகல ஜீவராசிகளையும் சடப்பொருள்களையும் படைக்கும்போது குணங்குறிகளுடன் படைத்தான். அக்குணங்களையும் குறிகளையும் வெளிப்படுத்துவது சாதகமாகும். (ஜனனக் குறிப்பு)

பூமியில் எந்த அசைவும் மாற்றமும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் வெளிப்படுந் தன்மை உடையது சோதிடம். பூமியில் உயிர்களோ அன்று சடப்பொருட்களோ தோன்றும் போது (ஜனிக்கும் போது) உள்ள நேரத்தை கொண்டு கணிக்கப்படுவது. ஜனனத்தில் சகல நன்மையும் வாழ்வின் நிலைபாடும் வாழும்

முறையும் வாழும் காலமும் அவரவர் செய்த பூர்வ ஜன்ம நன்மை தீமைக்கு ஏற்றவாறு வகுத்துக்காட்டி சிவப்பேறு அடையச்செய்யும்,

பூமியில் வாழும மானிடர் தாம் அறிந்தவை உண்மை என்றும் அறியாதவை நம்பமுடியாது என வாழ்வர். பூமியில் எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் எவருக்கும் கிடையாது. காலம் காணாது.

'அறியும் அறிவும் அவன் அருளே' எனவே எல்லாம் அறிந்தவன் என்று யாரும் இல்லை. வாழ்க்கை பூராக மனிதன் கற்றுக்கொண்டே இருப்பான். நாம் நலமுடன் நன்றாக வாழ நம்பிக்கை அவசியம். சோதிடம் உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டும் கண்ணாடி. சோதிடம் கணிப்பவரும் பலன் சொல்பவரும் சரியாக கணித்து கூறுவார்களேயாகில் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்த முடியும்.


ஆண்டவன் படைப்பில் எல்லாமனிதரும் ஒரேதன்மை குணங்கள் செயற்பாடுகள் இருக்கமுடியாது. கோடானுகோடி ஆன்மாக்களுக்கும் வேறு வேறு நிலைப்பாடுடன் தான் ஆண்டவன் படைத்தான். ஒருவருடன் ஒப்பிடுவதால் தான் நாங்கள் கவலை. சந்தோஷம் அடைகிறோம். திருத்தமற்றது. நம்பிக்கையுடன் வாழ ஒப்பிட்டு வாழாதே.

மனிதன் நலமுடன் சகல செல்வங்களும் பெற்று வாழ இறைவன் பாதம் தினமும் பணியவேண்டும். சிவனடியார்களுக்குமட்டும் கோள்கள் ஒன்றும் செய்வதில்லை என ஞானசம்பந்த சுவாமிகள் கூறியுள்ளார்.

"வேயுறு தோழி பங்கன்" என்னும் தேவாரம் பாடியுள்ளார்.

ஒவ்வொரு மானிடரும் இம்மையில் மட்டுமல்ல. மறுமையிலும் நல் சகுண லட்சணங்களுடன் வாழ ஆண்டவன் பாதம் பணிவோமாக.

அறநெறிப்பாடசாலை அமைத்து விழா கொண்டாடும் நிலைக்கு ஆக்கிய மதிப்புக்குரிய தொண்டர் ஐயா அவருக்கும் அவரின் மகனின் ஞாபகார்த்தமாக மலர் வெளியீடு செய்வதற்கும் முன்னின்று நடாத்தும் அதிபருக்கும் நிர்வாகத்திற்கும் எனது அன்புகனிந்த நன்றியையும் வணக்கத்தையும் கூறிப் பாராட்டுகின்றேன்.



# இலங்கையில் இந்துசமய மறுமலர்ச்சி

**திரு ஆ. கனகரத்தினம்**
ஓய்வுநிலை ஆசிரியர்
கலாபூஷணம், சைவப்புலவர்

1560ம் ஆண்டுக்குப் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தமையால் எமது நாட்டில் இந்து சமய கலாசாரா விழுமியங்கள், சுதந்திரம் ஆகியன அடக்கி ஒடுக்கப்பட்டு தடை செய்யப்பட்டன.

இந்து சமயமானது கி.மு 5000 வருடங்களுக்கு முந்திய பழமையும், பெருமையும், சிறப்பும் வாய்ந்த சமயமாகும். இது மட்டுமன்று இந்து சமயத்தின் தொன்மைக்குச் சான்றாக சிவபிரானால் அருளிச் செய்யப்பட்ட வேதங்களும், ஆகமங்களும் அமைகின்றன. நாயன்மார்கள், அருளாளர்களால் அருளிச் செய்யப்பட்ட 12 திருமுறைகள், 14 சித்தாந்த சாத்திரங்கள், 18 புராணங்களும் சிவபெருமான் அருளிய திருவிளையாடற் புராணமும் சான்று பகருகின்றன.

புரட்சி ஒன்று ஏற்படும்போது தான் அதன் உண்மைத் தன்மை வெளிப்படும். 6ம், 7ம் நூற்றாண்டில் சமணர்களால் இந்து சமயத்திற்கு இடையூறு ஏற்பட்டது. அவ்வேளையில் நாயன்மார்கள் தோன்று அனல் வாதம், புனல் வாதம் செய்து தேவார, திருவாசகங்களைப் பாடி எமது சமயத்தை உண்மைச் சமயமென நிலைநாட்டினர். அதேவேளையில் நாயன்மார்கள் தோன்றி அனல் வாதம், புனல் வாதம் செய்து தேவார, திருவாசகங்களைப் பாடி எமது சமயத்தை உண்மைச் சமயமென நிலைநாட்டினர். அதேவேளை புத்த மதத்தவர்களை ஊமைகளாக்கினர். பிறப்பில் இருந்தே ஊமையாக இருந்த பிள்ளையைப் பேச வைத்தனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூவரும் கிறிஸ்தவ சமயத்தை சார்ந்தவர்களாக இருந்தமையால் இந்து சமய வழிபாட்டுச்சுதந்திரம் முற்றும் முழுதாக மறுக்கப்பட்டது. அழிந்து போகின்றவேளையில் தான் சுவாமி விபுலானந்தர், இராமகிருஷ்ணர். சுவாமி விவேகானந்தர் அவதரித்து சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்தனர்.

இவர்களுள் 5ம் குரவர் எனப் போற்றப்படும் ஆறுமுக நாவலர் ஆற்றிய பங்கு அளப்பரியது. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆறுமுக நாவலர் தோன்றியிருக்காவிட்டால் இன்று நாம் சைவ சமயத்தவர் என்று வாழ முடியாது. இதை வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையின் கூற்றின்மூலம் அறியலாம். "நல்லைநகர் ஆறுமுக நாவலர் தோன்றிலரேல் சொல்லு தமிழ் எங்கே, சுருதி எங்கே, எல்லவரும் ஏத்தும் புராண ஆகமங்கள் எங்கே, அத்தன் அறிவு எங்கே என்று அறி.'"

சைவசமயத்தவர்கள் உத்தியோகத்திற்காகவும் உயர் கல்விக்காகவும் அந்நிய கத்தோலிக்கரின் மாயவலையில் அகப்பட்டு சிக்கித் தவித்து மதின் மேல் பூனைகளாக இருந்தனர். இவ்வேளையில் நாவலர் பெருமான் தானும் தனது மாணவர்களின் உதவியுடன் தடைசெய்யப்பட்ட சைவசமயத்தை இரவு நேரங்களில் இலவச வகுப்புக்களை நடாத்தி புத்துணர்ச்சி கொடுத்தார். சமயச்சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், புராணபடலங்கள் மூலம் சைவத்தின் தொன்மை, சிறப்பு, மேன்மை, நன்மைகளை மக்களுக்கு அறிய வைத்தார். கிராமங்கள் தோறும் சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவி சைவ பிள்ளைகளை மதம் மாறவிடாது எமது சமய பாடங்களை படிப்பித்தால் பாலபாடம், சைவ்வினாவிடை போன்ற நூல்களை தாமே ஆக்கி அச்சடித்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளார். மூத்தவர்கள் சமயம் மாறாதிருக்க சமயதீட்சை பற்றி விழிப்புணர்வைக் கொடுத்துள்ளார். பசு

வதையினால் உண்டாகும் தீமைகளையும் எடுத்துக் கூற மறுக்கவில்லை. அத்துடன் சிவசின்னங்களின் பெருமையையும் திருநீற்றின் சிறப்பையும் திருஞான சம்பந்தர் அருளிய 'மந்திரமாவது நீறு' என்ற தேவாரங்களைத் தனது பிரசங்கத்தில் வலியுறுத்தியதுடன், சமயதீட்சையை எல்லோரும் பெற வைத்தார், புலால் உண்பதை ஒழித்தது மாத்திரமன்றி சைவ ஆலயங்களில் பூசை வழிபாடுகளை ஒழுங்கமைத்து மக்களை வழிபட வைத்தார். முதியோர்கள் பயன்பெறும் பொருட்டு கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். எமது சமயத்தை கொச்சைப் படுத்திய கத்தோலிக்கருக்கு கண்டனங்கள் எழுதி வெளியிட்டார். குறிப்பாக முருகனுக்கு இரண்டு மனைவிமார் என்று கொச்சைப்படுத்தி கந்தபுராண தூசணம்" என கத்தோலிக்கர் எழுதி வெளியிட்டனர். இதையறிந்த நாவலர் பெருமாற் கொதித்தெழுந்து அதற்கு எதிராக, "கந்த புராண தூசண பரிகாரம் என்னும் நூலை எழுதி வெளியிட்டு கத்தோலிக்கரை வாயடைக்கச்செய்தார். இப்படியாக பற்பல சேவைகளை செய்து, இந்து சமய மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்தார். இன்று நாம் சைவசமயத்தவர்களாக வாழ வழிவகுத்த நாவலர் பெருமானுக்கு நன்றியுடையவராக இருக்கவேண்டும்.

அந்நியரின் வருகையால் எமது சமயம் நலிவுற்றிருந்தபோது வடக்கில் ஆறுமுக நாவலர் தொண்டாற்றியது போல கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்டிதர் மயில்வாகனம் எனும் இயற்பெயர் கொண்ட சுவாமி விபுலானந்தர் இந்து சமய மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்தார். 1925ம் ஆண்டு கிழக்கு மாகாண பாடசாலைகளைப் பொறுப்பேற்று சமயக் கல்வியைக் கற்பித்தும் சமூக தொண்டுகளைச் செய்தும் சமூகத்தில் சைவசமய விழிப்புணர்ச்சி ஏற்பட பணியாற்றினார்.

சேர் பொன் இராமநாதனின் தந்தையார் ஆகிய பொன்னம்பலம் முதலியாரால் கொழும்பு மாநகரில் கற்றளி என்ற பெருமையோடு பொன்னம்பலவாணேஸ்வரம் எனும் ஆலயத்தை நிர்மாணித்தார். இது இன்றும் சைவ மக்களுக்கு ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது.

இந்து சமய மறுமலர்ச்சி செய்தவர்கள் என்ற வரிசையில் சைவப் பெரியார் சிவபாதசுந்தரார் ஆற்றிய தொண்டினை மறக்கமுடியாது. இவர் சமய சொற்பொழிவு செய்தும் சமய நூல்களை வெளியிட்டும் பணியாற்றியுள்ளார். திருவருட்பயன் சைவக் கிரியை விளக்கம், கந்த புராணம், திருப் பெரு வடிவம், திருவாசக மணிகள், சைவ சித்தாந்த சமய சாரம் என்னும் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அந்நியரால் சேதப்படுதப்பட்ட திருக்கேதீஸ்வர ஆலயத்தை புனருத்தாரணம் செய்த பெருமையைப் பெற்றுள்ளார். இதனால் அன்று சுந்தரமூர்த்தி நாயனாரால் புகழ்ந்து பாடப்பட்ட தலம் இன்றும் சைவ மக்களின் வழிபாட்டிற்குரிய தலமாக விளங்குகின்றது.

அந்நியரின் வருகையால் எமது சமயத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும், சைவ சமயத்திற்கு எதிராக மேற்கொண்ட நிந்தனைகளை முறியடிக்க காசிவாசி செந்திநாத ஐயர் கந்தபுராண நவநீதம், தேவாரம் வேதசாரம் என்னும் நூல்களை வெளியிட்டு உதவினர்.

சைவபரிபாலனசபை 1888ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு பலசமயப் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இந்து சாதனம், போன்ற பத்திரிகையை வெளியீடு செய்தமை குறிப்படத் தக்கது. இன்றும் சிவதொண்டன் மாத இதழ் வெளிவருகின்றது. அத்துடன் சைவ்வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற நிறுவனங்கள் மூலம் சமய விழுமியங்கள், கலாசாரங்கள், கலைகள் என்பவற்றின் உணர்வை மக்களிடையே மேம்படுத்தி வருகின்றது. எமது சமய மறுமலர்ச்சிக்குத் தொண்டு செய்தவர்களை என்றும் நினைவிருத்து வணங்குவோம்.

# அறநெறிப்பாடசாலை
# அறிவக பெட்டகம்
## அமரர் யோகி. க கார்த்திகேசு ஞாபகார்த்த கல்வி களஞ்சியம்

சுழிபுரம்

அறிஞர் சாமி அப்பாத்துரை

இன்றைய வடமாகாணம் ஈழத்திருநாட்டில் வற்றிய ஆற்றுப்படையாய், பச்சைபசேலென வானளாவ வளர்ந்த காட்டில் கரிகிய மரங்களை தன்னகத்தே கொண்டதாக மாறும் நிலையில் காலடி பதிக்கின்றதா? என்பது புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரிடன் ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வாறான நிலையில் மாணவர்கள் மத்தியில் முன்னைய சந்ததியிடம் காணப்பட்ட உந்துசக்தி, உற்சாகம். தணிவுற்று இருப்பது போல தெரிகிறது. 'ஒழுக்கம் என்பதன் கனம் கரைந்துவருகிறது. இப்படித்தான் வாழவேண்டும் என்பதன் இறுக்கநிலை இழகிவருகிறது.

இவற்றிற்கு இன்றைய சந்ததியை குறைகூறுவது என்பது மூலகாரண சக்தியை மறந்துவிடுவதுபோல இருக்கிறது. இன்றைய பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் அசாதாரண நெருக்கடியான சூழலில் கருவாகி உருவாகிவந்தவர்கள். நெருக்கடியான சூழலே அவர்களுக்கு சாதாரண நிலையாக காணப்பட்டது. அவர்களது உள்ளத்தில் பயம், பீதி, ஏக்கம் என்ற நிலைகள் வெகுவான பாதிப்பை ஏற்படுத்தியது. அப்படியான வேளை தொலைநோக்கு கண்டு, நாளைய நீண்ட காலநலனை குறிவைத்து இன்றைய வாழ்வை அதன் அத்திவாரமாக போட முடியவில்லை,

மனிதநேயம் ஒருபுறம் கருகியது; மறுபுறம் வளர்ந்தது. ஈவிரக்கமின்றி யாதும் அறியாத அப்பாவி மக்கள் தண்டிக்கபட கொல்லப்பட ஓர் கவலை.. மறுபுறம், சமூக அந்தஸ்து வேறுபட்டு வேலைகளை களைந்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் வாழ்வு ஓரளவு ஆரம்பமானது.

இவ்வேளை இயல்புநிலை உருவாகும் என்ற ஆசை பிறந்திருக்கிறது. அதில் மீண்டும் அறநெறி கண்டு, கல்வியில் முதலிட வேண்டும். பயிரில் முதலிடுவது பருவகால அறுவடை தரும். கல்வி முதலீடு பலதலைமுறைக்கும் பலன் தரும்.

இவ்வகையிலே தமிழன் வரலாற்றில் சோழர்காலம் பொற்காலம். தரணியாண்டவன் தமிழன் அவன். இமயத்தில் கொடி பொறித்தவன். பர்மா, யாவா, இந்தோனேசியா, கம்போடியா, மலேசியா, கொறியா, யப்பான் வரை தன் அறிவியல் ஆற்றலால் ஆண்டனன். இன்றும் யப்பானிய மொழியில் ஆயிரம் தமிழ்ச் சொற்கள் வழக்கில் உள்ளன. கொறிய மொழியில் ஐநூறு தமிழ் சொற்கள் உள்ளன. இந்தோனேசிய மொழியில் நாற்பது வீதம் தமிழ்ச்சொற்கள் உள்ளன

அக்கால கட்டத்தில் சோழர் செல்வாக்கில் தனக்கென தனியிடத்தை ஈழத்திருநாட்டில் தக்கவைத்த இடம்தான் இன்று சுழிபுரம் என மருவிவந்த சோழியபுரமாகும். அங்கு சைவமும் தமிழும் இருகண்களாகத் திகழ்ந்தன. சைவத்தில் தமிழும், தமிழில் சைவமும் இரண்டற கலந்திருந்தன.

இங்குதான் பண்பும் திறனும் அறிவும் கல்வியின் முக்கண்களாக திகழ்ந்தன. அவ்வேளை தாம் பெற்ற கல்வியின்பத்தை வையகம் பெறவேண்டும் என தம் வளங்களை, சொத்துகளை கல்விநிலையங்களில் முதலிட்டனர்.

அவ்வழிவந்த பெருமக்கள், பண்பாளர், பொதுப்பணி செம்மல், ஒழுக்கசீலர் அமரர் யோகி க. கார்த்திகேசு அவர்கள். அவரது விதை முளைத்து இன்று விருட்சமாகி பலருக்கும் பயன்படுகிறது. இப்பணியில் உழைப்பவர்கள், ஆர்வலர்கள், ஆண்மையுளைப்பை நல்குபவர்களுக்கு நன்றி. கனடாவில் பெருமிதத்துடன் அல்லும் பகலும் அயராது உழைக்கும் மதிப்பிற்கு உரிய தொண்டர் கந்தசாமி அவர்கட்கும் நன்றி.

# சுருக்க விளக்க வரலாறு

கு.வி.கந்தசாமி

உலகின்கண், தென் ஆசியாவின், இலங்கை தீபகற்பம் சிறந்த இயற்கைவளம் மிகுந்த நாடாகும். இலங்கையின் வடபால் யாழ்ப்பாணம் தமிழ்பேசும் மக்களின் குடாநாடாகும். இங்கு வடமேற்கு எல்லைப்பகுதியே, வலி- மேற்குவட்டம்- பண்டையவரலாற்றுச்சிறப்புமிக்க சம்பில்துறைபட்டினம் திருவடி நிலை சமுத்திர தீர்த்தத்தலம், திகழ்ந்த இடமாகும். கிராமத்தின் பழையபெயர் சோழபுரம். பின்னாளில் மருவி, சோழியபுரமானது. இக்காலம் சுழிபுரமாகி, இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், ஆறு கிராம அதிகாரிகளின் சிற்றூர்களாகி இருப்பதாகும்.

முற்காலத்தில் சுழிபுரம் மேற்கு, வடக்கு பிரதேசங்களில் வாழ்ந்து வந்தவர்கள், (பொதுவில்) சைவச்செட்டியார்களாகும். பண்டைக்காலம் தொட்டு, சிறந்த வணிகராகவும், ஆலயப்பூசகராகவும், நிலச்சுவாந்தாராகவும், சோதிட சாத்திர மேதைகளாகவும், இருந்து வந்த இந்த எச்சங்கள், இன்றும் தென்படுவதைக்காணலாம்,

இவைநிற்க, இன்று, 17.07.2016ம் திகதி அனைவரும் கூடியிருக்குமிடம், ஆத்மீகத்திற்கும் அதிசய வரலாற்றிற்கும் உரிய இடமாகும்.

இங்கு எழுந்தருளியிருக்கும் சிவாலயம் 2500 ஆண்டுகளுக்குமுன்பு சிறந்துவிளங்கிய, சம்பில்துறை பட்டினத்தின் துறைமுகத்தை அலங்கரித்திருந்த, சம்பு நாதேஸ்ரரர் ஆலயத்தின் எச்சமாகும். பண்டைக்காலம் இந்து சமுத்திரம் கொந்தளித்து, காவிரிப்பூம்பட்டினத்தை கடல், ஏப்பமிட்டபோது, சம்பில்துறை முகமும் சமுத்திரத்தில் மாண்டுபோக நேர்ந்துவிட்டது. அப்போதிருந்த செட்டியார் வம்சாவழியினரே, சமுத்திரக்கரையை அண்டியிருந்த வயல்கரையில், ஆதி மூலத்தை (கட்டிடம்) வயிரக்கல்லாலும், பிற கட்டிடங்களை முருங்கைகல், சுண்ணாம்புகொண்டும் கட்டிவழிபாடு செய்துவந்தனர். 1995இல் இலங்கையில் ஏற்பட்ட மிகக்கொடிய இனச்சண்டையின்போது, ஆலய கட்டிடம் எறிகணை குண்டுத்தாக்கத்தால் முற்றாக சேம்மாகியது.

பரம்பரையாக ஆலயத்தையும் சூழ இருக்கும் காடு கரம்பை, பெரும்பகுதி நெல்வயல்களையும் ஆண்டு அனுபவித்துவந்த செட்டியார் வம்சத்தினர், ஊர்மக்களிடம் எஞ்சியிருந்த கோவில் சொத்துக்களோடு, அறுதிஉறுதி முடித்து கையளித்துள்ளனர்.

தற்போது அருள்மிகு பஞ்சமுக சுயம்பு நாதேஸ்வரி சமேத சுயம்புநாதேஸ்வரர் சிவாலயமாக மறுமலர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது.

இந்த ஆலயம் பரம்பரையாக ஆண்வழி தனிக்குடும்ப சொத்தாக இருந்து வந்ததால், என்றேனும் பிரபலமாக திகழமுடியவில்லை. இலங்கைத் தீவின் பண்டைய வரலாற்றில் விஜயனும் பரிவாரங்களும் இலங்கையை அடைந்த பின்பு ஐந்து ஈஸ்வரங்களை புதுத்தோற்றத்தில் அமைத்து கொடுத்ததாக இலங்கை வரலாறு கூறுகின்றது. அவற்றுள் தொண்டேஸ்வரம் என்பது, இக்கோவிலன்றி, வேறேதும் குறிப்பிடவே முடியாது. இது, பண்டைகால, பதின் எண் புராணங்களுள் பேசப்படுவதை, ஆலய வரலாற்றில் படித்து அறியலாம்.

வருங்காலத்தில், தனிச்சிறப்புடன் இந்த நிலப்பகுதி விளங்குவதற்கு, ஆலய முன்றலில் இருக்கின்ற ஆத்தும பலம் நிறைந்த, அமரர் யோகி.க. கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையின் வருங்காலத்து பொதுநலப் பணிகளின் வளர்ச்சி மூலம் நிருபணமாகும்.

இந்த கார்த்திகேசர்யார்? என்பதை விரித்துரைக்கின் பெரும் சிறந்த ஆத்மீக சக்தியின் வீரியத்தை உணரமுடியும். ஆத்மீக சக்திப்பிரவாகத்திற்குமுன்பு, எந்த அணுகுண்டோ, ஏவுகணையோ! வெற்றிகாணமுடியாது. ஆனாலும் மறைமுகமாக, ஆத்துமாக்களின் சாதனைகளின் பயனே,

உலக ஓட்டத்தின், இயற்கை நியதியாகும்.

# வெற்றியின் இரகசியம்

செல்வி வ. மனோராணி
அறநெறி ஆசிரியை
(ஓய்வுநிலை ஆசிரியை)

ஒரு தொழிலின் மதிப்பு அதனுடைய குணத்தையும் தன்மையையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறதே தவிர அதனுடைய அளவினால் அல்ல. செயலின் தன்மை உலகில் பணிபுரியும் ஒரு மனிதனை வழிகாட்டி ஊக்குவிக்கும் குறிக்கோள்களையே சார்ந்திருக்கிறது. குறிக்கோள் உயர்ந்தும் சிறந்தும் இருப்பின் ஒருவருடைய செயலின் அழகும் திறமையும் அதிகரிக்கின்றன. மகோன்னத வெற்றிகளைக் குவிக்கும் மாமனிதர்கள் எல்லோரும் இப்படிப்பட்ட குறிக்கோள்களினால் ஊக்கமடைந்து உலகில் சீர்மிகுந்த செயல்களை அற்புதமாகப் படைத்திருக்கிறார்கள். அவர்களுடைய செயல்களின் பலன்களை அவர்களைத் தொடரும் தலைமுறையினர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

இன்றைய உலகில் மனிதன் தன்னுடைய செயல்களை அணைப்போட்டு அரவணைத்துச் செல்ல ஒரு தெளிவான குறிக்கோள் இல்லாமல் இருக்கிறான். அவன் சுயநல பாவனையுடன் செயலாற்றுகிறான். இன்னமும் சிறப்பு மிக்க செயல்களை மேற்கொள்ளத் தூண்டும். ஒரு இலட்சியமோ ஒரு தெலை நோக்கோ அவனிடமில்லை. ஒரு காரியாலயத்தில் ஊழியனாகவோ அல்லது ஒரு அமைப்பின் நிர்வாகியாகவோ அவன் எந்த ஒரு வேலையை மேற்கொண்டாலும் அதில் ஒரு செயலையே தொடர்ந்து செய்யும் மனச்சோர்வையே அனுபவிக்கிறான். அவன் அலுவலகத்தையடைந்து வேலையைத் தொடங்கிய உடனேயே ஓய்ந்து விடுகிறான். மாலை வீடு திரும்புவதற்குக்கூட அவனிடம் சக்தியில்லை. இச்சூழ்நிலையில் அவன் செய்யும் வேலை மதிப்பற்றதாகி அவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகி விடுகிறான்.

எதையும் விட்டுவிடாத நிலையான ஆராய்ச்சிக்கு பிறகு இத்தகைய சோர்வுக்கான காரணங்களை கடந்த காலத்தின் மேன்மை பொருந்திய தலைவர்கள் கண்டு பிடித்து அவற்றை சமாளிக்கும் வழியையும் நமக்குக் காட்டியுள்ளனர். இதன்படி நம்முடைய செயல்களின் தரத்தையும் அழகையும் அதிகரித்து இப்புவியில் உண்மையான கலகலப்பையும் சந்தோசத்தையும் தருவிக்கலாம். நம்முடைய அறியாமையினால் நாமே வரவழைத்துக் கொள்ளும் மனச்சுமையும் மன அலட்டலுமே நம் வேலையினால் நமக்கேற்படும் சோர்வுக்குக் காரணம் என்பதை மாமேதைகள் உணர்த்தினார்கள். இந்த புற உலக ஆசைகளையும் ஆவல்களையும் நம்முள் இருக்கும் வாழ்க்கைச் சக்தியையே உறிஞ்சி நம்மை சக்தியற்றவர்களாக சரியவைக்கிறது.

வாழ்க்கையில் ஒரு தீர்மானமான அற்புதமான குறிக்கோள் அல்லது இலக்கைத் தேர்ந்தெடுத்து அதனுடைய சாதனையிலேயே கருத்தூன்றி முழு அர்ப்பணத்துடன் சலிப்பின்றி உழைத்து இப்படிப்பட்ட மனச் சிதறல்களை அடக்குவதிலே வெற்றியின் இரகசியம் புதைந்திருக்கிறது. தன்னல மற்ற சமர்ப்பண பாவனையுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்கள் வாழ்க்கையில் ஒரு ஊக்கத்தையும், மன அமைதியையும், ஒருபடிப்பையும், மகிழ்ச்சியையும் இடைவிடாது தந்து நம்மை திறமைக்கும் வெற்றிக்கும் வழிநடத்துகின்றன.

இப்படியாக படிப்படியாக ஒரு பரந்த நோக்கை நாம் வளர்த்துக்கொள்ள மதம் உதவுகிறது. நம் குறுகிய காரியங்களைவிட உன்னதமான காரணங்களுக்கு வேலை செய்யும் பழக்கத்தை வளர்த்து நம் வேலையிலேயே ஊக்கத்தை அடையும் வழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். உலகப் பொருள்களை உடைமையாக்குவதாலும், வெறும் புலனின்பங்களாலும் வரும் நிரந்தரமற்ற சுகத்தைவிட ஒரு நல்ல வேலையை தன்னலமின்றி முடிக்கும்பொழுது வரும் மனத்திருப்தி பன்மடங்கு உயர்ந்தது; சுகமானது.

ஒருவரின் உள்ளத்திலேயே வாழ்க்கையின் வெற்றி அடங்கி யிருக்கிறது. புற உலகில் அல்ல மதம் இதற்கு வழி அமைக்கிறது.

# அறம் செய விரும்பு

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
(முந்தைய தலைவர், நுண்கலை/இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
செயலாளர், வாழும் கலை யாழ். மாவட்டம்)

"அறம் செய விரும்பு" என்பது ஔவையின் பெருவாக்கு. மனிதன் மனிதனாக வாழ வேண்டும். விருப்புடன் உளமாரச் செய்யும் செயலே தனக்கும் பிறருக்கும் நலத்தை விளைவிப்பது. அறு என்ற வினை அடியுடன் அம் என்ற சாரியையும் சேர்ந்தே அறம் என்ற சொல்லாகும். வயற்காணி மண்ணை அறுத்து வரம்பை ஒழுங்காக்குவது போன்று மனிதனது ஒழுக்கத்தை நேர்ப்படுத்தும் செயலே அறமாகும். புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறியாகிய ஒழுக்கம் பேணலே நாம் நன்னெறியாகிய அறவழியில் பயணிக்கமுடியும். அறவழியில் பயணிப்பவரே அகத்திலும் புறத்திலும் சாந்தியும் சமாதானமும் பெறுகின்றனர்.

எங்கே நிம்மதி எங்கே நிம்மதி என்று தேடும் மனிதனை இங்கே நிம்மதி என்று நெறிப்படுத்தும வகையில் "அறம் செய விரும்பு" என்று தெளிந்த அறிவாகிய ஞானம் கைவரப்பெற்ற ஔவை மூதாட்டி வழிப்படுத்துகின்றார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாக்கை
பண்பும் பயனும் அது என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அன்புள்ளம் கொண்ட பண்புடையாரின் மனதாரச் செய்யும் செயல்கள் அனைத்தும் அறங்களே.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" அத்தகைய அரிய உயர்ந்த மனிதப்பிறவிக்கு அர்த்தத்தைக் கொடுப்பது அறவாழ்வே. அறவாழ்வு என்பது அன்பின் வழிப்பட்ட செயல்களே.

ஒரு குழந்தையின் பிறப்பும் வளர்ப்பும் பெற்றோர்களாலும் குடும்பத்தாலும் சமூகத்தாலும் நாட்டினாலும் இயற்கையினாலும் சர்வதேச உதவியினாலும் நடைபெற்று வருகின்றது. இவ்வுதவிகள் எல்லாம் மானிட தேயத்தின் பாற்பட்ட அறங்களே. நான் மட்டும் வாழவேண்டும் என்ற சுயநலத்தைக் கொண்ட செயல் அறத்தின் பாற்பட்டதன்று. பெற்றோர்கள், குடும்பத்தினர், உறவினர், சமூகம், நாடு அனைத்தின் நலத்துக்காகவும் அன்பு வழியில் செயற்படுவதே அறமாகும்.

தமிழில் அறம் என்று கூறப்படும் சொல்லுக்கு ஒத்ததாக வடமொழியில் தருமம் என்ற சொல் உபயோகப்படுத்தப்படுகின்றது. வடமொழியில் "திறு" என்ற வினையடி தாங்குவது என்ற பொருளைத் தருவது. உலகத்தை தாங்கி இருக்கும் சக்தி எதுவோ அதையே தர்மம் என்பர். எனவே பிரபஞ்சத்தைத் தாங்கிச் செயற்படுத்தும் சக்தியாக விளங்குவது தருமம். அத்தகைய சக்தியை "அறம்" என்ற சொல்லும் வெளிப்படுத்தி நிற்பதனாலேயே திருக்குறளில் "அறவழி அந்தணன்" அறக்கடலாகிய செந்தண்மையுடையவன் இறைவன் என்று கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. இந்த உலகை இயக்கும் சக்தியாகிய அறத்தை முதலில்

அறிந்து பின்பு அதனைப் புரிந்துணர்ந்து அதைச் செய்ய விரும்பும் செயலே மனிதனை மேம்பாடடையச் செய்கின்றது. எனவேதான் "அறம் செய விரும்பு" என உடன்பாட்டு நிலையில் எடுத்துக் கூறப்பட்டது. இதைச் செய்யாதே என்று எதிர்மறை நிலையில் கூறாது உள தத்துவத்திற்கு ஏற்ற வகையில் கூறி இருப்பது சிந்திக்கப்பட வேண்டியது.

பிரபஞ்ச ஒழுங்காகிய அறத்தைப் பேணும் ஒருவனை அவ்வறமே துணை நின்று இரட்சிக்கின்றது. இருளில் இருந்து ஒளிக்கும் சாவினின்று சாவாமைக்கும் அறியாமையிலிருந்து அறிவிக்கும் இட்டுச் செல்லும் பேராற்றல் அறத்திற்கே உண்டு. அறம் என்ற தெய்வீக ஆற்றல் மனிதனைப் புனிதனாக்கி தெயவமாக்குகின்றது. இவ்வகையில் வேற்றுமைகளைக் கடந்த ஒளியான பேரறப் பெரும் பொருளை அடைந்து அனுபவிக்கும் பேரானந்தம் பெற அறம் செயவிரும்ப வேண்டும்.

"அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்கும் பேற்றைத் தரவேண்டும்" என்ற காரைக்கால் அம்மையாரின் வேண்டுதல் அறவடிவான இறைவனை அடைவதற்கு அம்மையார் பக்தி கொண்ட செயலைக் காட்டுவது. யாழ்ப்பாண மண்ணுக்கு ஆன்மிக ஒளியை ஊட்டிய யோகர் சுவாமிகள் "நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே" என்பதாகும். தருமம் செய்பவரை தருமம் காக்கும் என்பதனாலேயே "தர்மம் தலை காக்கும்" என்ற தொடர் மக்களிடையே வழங்கப்பட்டு வருகின்றது. எனவே அறத்தைச் செய்ய விரும்புவது என்பது அறம் என்ற உலக அசைவியக்கத்துடன் இணைதல் என்பதாகும். இத்தகைய தொடர்பை முதலில் விரும்பவேண்டும். விரும்பிய வழியில் செயல் இடம்பெற வாய்ப்புண்டு. அறம் என்னும் பெரும் சக்தியின் இணைப்பும் பிணைப்புமே அறவாழ்வாகும்.

## படி, படி 'பண்பு' மலர்

நம் வாழ்வில் புகழ் பெற
நம் வாழ்வில் சிறப்பு ஓங்க
நம் வாழ்வில் கீர்த்தி விளங்க
நம் வாழ்வில் பிறர் போற்ற
நம் வாழ்வில் வெற்றி பெற
நன்றாகப் படி

படிப்பதற்கு நல்ல நூல்
தினமும் ஆய்ந்து தேடி
நூல்கள் மட்டுமல்ல
பண்பு வளர் கட்டுரைகள்

அள்ளித் தரும்
'பண்பு' மலரினை
நன்றாகப் படி

உன் விழுமியம் துலங்க
உகந்த நூலாம் எம் பள்ளி
பதினெட்டாம் ஆண்டுமலர்
நம் கலாசாரம் மேம்பட
நுண்மதியும் சிறக்கப்படி
"பண்பு" மலரை படிக்க மறந்திடாதே

# அறநெறியும் ஆன்மீக அறிவும்

**கணபதிப்பிள்ளை கனகரத்தினம்,**
பணிப்புலம், பண்டத்தரிப்பு

மானிட வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய அறிவுசார் நெறிமுறைகளையும், ஆன்ம ஈடேற்றத்திகாக செய்ய வேண்டிய ஆன்மீக கடமைகளையும் எடுத்தியம்புவதே அறநெறியும் ஆன்மீக அறிவுமாகும்.

வளர்ந்துவரும் இளம் சந்ததியினரை; அறநெறி கல்வி மூலம் சமுக பண்பாடு, கலை, கலச்சாரம், கொண்டவர்களாகவும்; அன்பு, பண்பு, அறிவு, ஆற்றல் உள்ளவர்களாகவும் உருவாக்கி எமது சமுதாயம் சீரோடும், சிறப்போடும் வாழவேண்டும் என்ற நல்நோக்குடன் 1998 ஆண்டு எம்மூர் சமூகத் தொண்டன் விசுவலிங்கம் கந்தசாமி அவர்களின் பெருமுயச்சியினால் சுழிபுரம் கிழக்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் முதன்முதலில் ஸ்தாபிக்கப் பெற்றது.

அதன் பின்னர் 17.07.2011ம் அன்று கனடாவில் **"ஜலசங்கமம்"** ஆகிய **"சங்கர்"** என அழைக்கப்பெற்ற **"கந்தசாமி விமலன்"** அவர்களின் நினைவாக அவரின் குடும்பத்தினரின் பங்களிப்புடன் சாத்தாவோலை சம்புநாதீஸ்வரர் ஆலய வளாகத்தில் தனிக் கட்டிடம் அமைக்கப் பெற்று; "ஜோகி" கார்த்திகேசு ஐயா ஞாபகார்த்தமாக அவர் வாழ்ந்த இடத்திலேயே "ஜோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை" என பெயர் சூட்டி அப்பாடசாலைக்கு பெருமையும் சேர்த்தனர்.

நிலையில்லா மாய உலகில் நிலையற்ற மானிடனாக பிறந்த மனிதன் தனது ஊனக் கண்களால் நிலையான கடவுள், உயிர் ஆகியனவற்றை காண முடிவதில்லை. அவற்றை உணர மட்டுமெ முடிகின்றது . ஆனால் சித்தர்கள், ஞானியர், முனிவர்கள் தங்கள் ஞானக் கண்களினால் அவற்றை காண்கின்றனர்.

சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் எம்மோடு வாழ்ந்து சிவபதம் எய்திய "யோகி" கார்த்திகேசு ஐயா அவர்கள் அறநெறி தவறாத இறைவழிபாடும், தவமுறையில் தியானமும், செய்து ஆசார சீலராக பிரமச்சாரிய விரதத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்து "சித்தர்" ஆகினமையால் இறைசக்தி அவரை அணைத்து "ஜோகி" யாக வாழ வைத்து பரகதிக்கு செல்லும் பரிசையும் வழங்கியது.

இறைவியின் ஞானப்பால் உண்டமையால் ஞானம் பெற்ற திருஞானசம்பந்தர் தனது மூன்றாம் வயதினில் தேவாரம் பாடியதுபோல்; மூன்றாம் வகுப்பு வரையுமே கல்வி பயின்றிருந்த "யோகி" கார்த்திகேசு அவர்கள் இறையருளால் தாம் முற்பிறப்பில் பெற்றிருந்த கல்வி ஞானத்தைபெற்று; பண்டிதர்களும், வித்தகர்களும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாத கந்தபுராணத்திற்கு உரையும் எழுதி; யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற பல ஆலயங்களில் கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றிக்கு பயன் கூறுவதிலும் முதன்மையாளனாக விளங்கினார்.

அத்துடன் அவர் தங்கி இருந்த ஆலயத்தில் தம்மை நாடிவரும் சீடர்களுக்கு சைவசமய நெறிமுறைகளையும், அனுட்டானங்களையும், தத்துவங்களையும், புராணத்திற்கு பயன் சொல்லும் விதிமுறைகளையும், வேத ஆகமங்களையும், அவரவர் தரத்திற் ஏற்ப போதித்து சமயப் பற்றுள்ளவர்களாகவும், ஆசார சீலர்களாகளாகவும் வாழ வழி சமைத்தார்.

பணிப்புலத்தில் வசிக்கும் திருவாளர் செல்லையா. சிவபாதம் அவர்களும், சுளிபுரத்தில் வசிக்கும் திருவாளர் தி. பொன்னம்பலவாணர் அவர்களும், பண்ணாகத்தில் வசிக்கும் திருவாளர் மா. மார்க்கண்டு அவர்களும் புராணங்களுக்கு பயன் சொல்லும் பணிகளைத் தொடர மூல காரணகர்த்தாவாகவும் குருவாகவும் அவர் விழங்கியதுடன்; எமது ஊரின் அறநெறி புகட்டும் முதல் ஆசானாகவும் திகழ்ந்தார்.

வளர்ந்துவரும் இளம் சந்ததினரின் எதிர்காலம் சுபீட்சமாக திகழ "அறநெறிப் பாடசாலை" யை உருவாக்கியதுடன் அங்கு பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக வருடம்தோறும் பல லட்சம் ரூபாய்களை அங்கு பயிலும் மாணவர்களுக்கு பரிசில்களாக வழங்கி வருவதுடன் இலைமறை காய்போல் திகழும் திறமைசாலிகளை முன்னிலைப் படுத்தியும் வருகின்றனர்.

இப் பாடசாலையை நல்முறையில் நெறிப்படுத்தி நடாத்திவரும் நிர்வாக குழுவினர்க்கும், கல்வி புகட்டுவதில் பலகால அனுபவம் மிக்க அதிபர் திருமதி. சரோஜினிதேவி கனகரத்தினம் அவர்களின் தலைமையில் கல்விபுகட்டும் ஆசிரியர்களையும் எமது ஊரார் சார்பில் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

சம்புனாதீஸ்வரரின் பேரருளினால் அறநெறிப் பாடசாலையின் சேவை மேலும் பல நூற்றாண்டுகள் சிறப்புடன் செயல்பெற ஊர்மக்களுடன் இணைந்து பிரார்த்திக்கின்றேன்.

# நம்பிக்கை

**நந்தவனம் சந்திரசேகரன்**
திருச்சி இந்தியா

அந்த வானம்
இருண்டு விடவில்லை
நட்சத்திரங்க்ள
வழிகாட்டுகின்றன.

சின்னச் சின்ன
தோல்விகளுக்காக
அவள்
துவண்டுவிடுவதில்லை
நம்பிக்கை
நட்சத்திரங்கள்
பூத்துக் கிடக்கின்றன.
அந்த
மேகங்களைப் போல
கலைந்து போகக்கூடியவை

அவள் கவலைகள்
நிலவின் குளிர்மையில்
தென்றல் தழுவுகின்றது.
அவள் நம்பிக்கை ஏணி
வலுவடைகின்றது.

ஆழ்மனக் கடலில்
நங்கூரமாய்
ஆசை வற்றியிருக்கும்
அவள் திசைகள்
விடிகின்றன.
தடைகள் தாண்டியும்
இறகு விரிக்கின்றாள்.
வெற்றிப்பபாதையில்.



# பாரிசவாத நோய் நாடல் பாரிசவாத நோய் முதல்நாடல் பாரிசவாத நோய் தணிக்கும் தணிக்கும் வாய்நாடல்

மருத்துவர் சி. யமுனானந்தா

மனித உடலின் மிகவும் பிரதானமான உறுப்பபுக்களில் மூளையும் ஒன்றாகும். இது உடற்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுடன் எமது எண்ணங்கள், கற்றல், உணர்தல், தொடர்பாடல் முதலிய உளத்தொழிற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றது. மூளைக்குத் தேவையான முக்கியமான போசனைப் பொருட்களும் ஒட்சிசனும் குருதியின் மூலம் மூளைக்குத் தொடர்ச்சியாகக் கடத்தப்படுதல் அவசியமாகும். மூளைக்குக் குருதிச் சுற்றோட்டம் இல்லாதுவிடின் மூளைக்கலங்கள் பழுதடைந்துவிடுகின்றன அல்லது அழிவடைந்து விடுகின்றன. மூளையின் குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதனால் அதன் ஒரு பகுதி பாதிக்கப்பட்டு உடலின் ஒரு பகுதி தனது செயலை இழக்கும் நிலை பாரிசவாதம் (stroke) ஆகும். உதாரணமாக உடலவயங்களைக் கட்டுப்படுத்தும் மூளையின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டு பாரிசவாதம் ஏற்படின் அவ்வவயங்களின் தொழிற்பாடு பாதிக்கப்படும் அல்லது செயலிழந்துவிடும்,

பாரிசவாதம் இரு வகைகளில் ஏற்படலாம். அவையாவன:

1. மூளைக்குரிய குருதிக்குழாய்கள் அடைபட்டு குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம். ( "ischaemic" stroke) .
2. மூளைக்குரிய குருதிக்குழாய்கள் வெடித்து இரத்தக்கசிவு ஏற்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம் ("haemorrhagic" stroke).

1. குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம். ( "ischaemic" stroke) .

குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதனால் ஏற்படும் பாரிசவாதத்தில் ("ischaemic" stroke) இரத்தக்கட்டியொன்று (thrombus) குருதிக்குழாய்களை அடைப்பதனால் மூளைக்குச் செல்லும் குருதி தடைப்பட்டு மூளைக்கலங்கள் பாதிப்படைகின்றன. இதுவே பொதுவாக ஏற்படும் பாரிசவாதமாகும். 80% அதிகமானோர் இவ்வகைக்குரிய பாரிசவாதத்தினாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

- இரத்தக்கட்டியானது வெவ்வேறு இடங்களில் தோன்றலாம்.
- இரத்தக்கட்டியானது மூளையின் பிரதான குருதிக்குழாயைத் தடை செய்யலாம்.
- இரத்தக்கட்டியானது இதயத்தில் அல்லது கழுத்துப்பகுதியிலுள்ள பெரிய குருதிக்குழாய்களில் ஏற்பட்டு குருதிச்சுற்றோட்டத்தின் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு மூளையிலுள்ள சிறிய குருதிக்குழாய்களை அடைக்கலாம். இது "embolism" எனப்படும்.
- இரத்தக்கட்டியானது மூளையின் உள்ளீட்டிலுள்ள மிகச் சிறிய கருதிக்குழாய்களையும் அடைக்கலாம். இது (Lacunar Stroke) எனப்படும்.

2. குருதிக்குழாய்கள் வெடித்து இரத்தக்கசிவு ஏற்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம் ("haemorrhagic" stroke).

குருதிக்குழாய்கள் வெடித்து குருதிக்கசிவு ஏற்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம் ("haemorrhagic" stroke) ஆகும். இது 15% மானவர்களில் காணப்படுகின்றது. குருதியமுக்கம் சடுதியாக அதிகரிக்கப்படுவதனால் குருதிக் குழாய்கள் வெடித்து மூளையினுள் குருதிக்கசிவு

ஏற்படும். இங்கு கசிவடையும் இரத்தத்தின் அமுக்கவிளைவு மூளைக்கலங்களைப் பாதிப்படையச் செய்கின்றது.

சிறியளவிலான பாரிசவாதம் 'mini stroke' என்பது

தற்காலிகமாக சிறிய நேரத்திற்கு குருதிச்சுற்றோட்டம் தடைப்படும்போது ஏற்படும் தாக்கம்-( transient ischaemic attack/ TIA)

சிறியளவிலான பாரிசவாதம் (mini stroke) என்பது சிறிது நேரத்திற்கு குருதிச்சுற்றோட்டம் தடைப்பட்டு ஆனால் மீண்டும் உடனடியாக குருதிச்சுற்றோட்டம் சீராகும்போது தற்காலிகமாக பாரிசவாதத்திற்குரிய குணங்குறிகள் தோன்றி மறையும் செயற்பாடாகும். இது பாரிசவாதத்தைப் போன்றது. ஆனால் சில நிமிடங்கள் அல்லது மணித்தியாலங்கள் நிலைத்திருந்து மறைந்துவிடும்.

பாரிசவாதத்தின் உடனடிப் பாதிப்புக்கள்

◊ முகம், கை, கால்களில் ஏற்படும் விறைப்பு அல்லது பலவீனம் குறிப்பாக உடலில் ஒரு பக்கத்தில் ஏற்படும்,
◊ கதைப்பதில் அல்லது விளங்கிக் கொள்வதில் மாறாட்டம் அல்லது சிரமம் ஏற்படும்.
◊ ஒன்று அல்லது இரண்டு கண்களிலும் பார்வையிழப்பு ஏற்படும். அனேகமாகத் தாம் பார்க்கும் பொருட்களில் அரைப்பங்கையே காண்பார்கள். சில வேளைகளில் பொருட்கள் இரண்டாகத் தென்படும்.
◊ நடப்பதில் சிரமம், தலைச்சுற்று, சமநிலை ஒருங்கிணைத்தல் தொழிற்பாடுகள் பாதிக்கப்படல், விழுங்குவதில் கடினம் என்பன ஏற்படும்.
◊ சடுதியான, உக்கிரமான தலையிடி ஏற்படலாம்.

எமது உடலின் வலது பக்கத்தை இடதுபக்க மூளையும், இடது பக்கத்தை வலது பக்க மூளையும் கட்டுப்படுத்துகின்றது. மூளையின் வெவ்வேறு பகுதிகள் உடலின் வெவ்வேறு பகுதிகளில் செயற்பாடுகளையும், உளத்தொழிற்பாடு களையும் கட்டுப்படுத்துகின்றது.

எனவே இடது பக்க மூளை பாதிக்கப்படும்போது உடலின் வலது பக்கம் பாதிக்கப்படுகின்றது. வலதுபக்க மூளை பாதிக்கப்படும்போது உடலின் இடது பக்கம் பாதிக்கப்படுகின்றது.

எமது சகல செயற்பாடுகளையும் மூளையே கட்டுப்படுத்துகின்றது. உதாரணமாக எமது அசைவு, சமநிலை, உணர்வு, கேட்டல், பார்த்தல், சிந்தித்தல், விளங்கிக் கொள்ளல், ஞாபகப்படுத்தல் என்பவற்றை மூளையே கட்டுப்படுத்துகின்றது.

அதிகமானோரில் மொழி-பேச்சு, விளங்கிக்கொள்ளுதல், வாசித்தல், எழுதுதல் என்பன இடதுபக்க மூளையின் கட்டுப்பாட்டில் உள்ளது. வலதுபக்க மூளையானது உணர்வுகளுக்குரிய பயிற்றப்பட்ட செயற்பாடுகளுக்கும் (பார்த்தல், கேட்டல், தொடுகைக்கான துலங்கல்). கணிப்பீட்டுக்குரிய செயற்பாடுகளுக்கும் (அளவு, வேகம், தூரம் அல்லது வெளியில் நிலையைக் கணித்தல்) பொறுப்பானது.

இடதுமூளையின் கதைப்பதற்குப் பொறுப்பான பகுதி பாதிப்படையின் நோயாளிக்குக் கதைக்க முடியாதிருக்கும். ஆனால் விளங்கிக் கொள்வதற்கான பகுதி பாதிப்படையவில்லையாயின் அவரினால் மற்றையவர்கள் கதைப்பதினை விளங்கிக்கொள்ள முடியும்.

பாரிசவாதத்தினை விரைவாக அடையாளங்கண்டு விரைவாகச் சிகிச்சையளித்தல் அவசியமாகும். (Act "FAST")

F– Facial weakness முக அசைவுகளின் பலவீனம்

சிரிக்கமுடியாதிருத்தல், வாய் ஒரு பக்கத்திற்கு இழுக்கப்படுதல்

A– Arm weakness அவயவங்களின் பலவீனம்

கைகளை உயர்த்த முடியாதிருத்தல், கால்களை உயர்த்த முடியாதிருத்தல், ஒரு பக்க அவயவங்கள் பலவீனமுறல் அல்லது ஒரு பக்கத்திற்கு இழுக்கப்படுதல்.

S– Speech weakness தெளிவாகப் பேசமுடியாதிருத்தல்.

கதைப்பதனை விளங்காது இருத்தல்

T– Test all three function

மேற்குறித்த மூன்று தொழிற்பாடுகளையும் பரிசோதித்து ஏதாவது வேறுபாடு காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

சிகிச்சை முறைகள்

குருதிக்குழாய்களில் குருதிக்கட்டிகள் படிவடைவதனால் ஏற்படும் பாரிசவாதத்திற்கு குருதிக்கட்டிகளைக் கரைக்கும் ஆர் ரி பி ஏ (rtPA– recombinant tissue Plasminogen Activator) ஊசிமருந்தைப் பயன்படுத்தலாம். rtPA மருந்தானது அதன் சிறந்த, விளைவைப்பெற, பாரிசவாதம் ஏற்பட்டு 4½ மணித்தியாலங்களுள் வழங்கப்படல் வேண்டும்.

இம்மருந்தை ஏற்றுவதற்கு முன்னர் குருதிச்சீனியளவு, ஐ என் ஆர் INR,குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை, கணணிய மூளை ஊடுகதிர்ப்படங்கள் (CT Scan) என்பன பரிசோதிக்கப்படும்.

மேலும் ஆர். ரி. பி. ஏ (rtPA- recombinant tissue Plasminogen Activator) என்பது மூளைக்குரிய குருதிச்சுற்றோட்டத்தினை தடைசெய்யும் குருதிக் கட்டிகளைக் கரைக்கும் மருந்துவகையினை குருதிச்சுற்றோட்டம் தடைப்பட்டு மூளை பாதிப்படைவதற்கு முன்னர் குருதிக் கட்டிகளைக் கரைப்பதற்கு பயன்படுத்தலாம். இதன்மூலம் நிரந்தரமாக மூளைக்கு ஏற்படக்கூடிய காயத்தைக் குறைத்து தொடர்ந்து ஏற்படக்கூடிய இயலாமையைத் தவிர்த்துக்கொள்ளலாம். எனவே பாரிசவாதத்திற்குரிய முதற்குணங்குறிகள் தென்பட்டவுடனேயே வைத்தியசாலைக்கு விரைதல் மிகவும் முக்கியமானதாகும். விரைவான சிகிச்சையினால் பாரிசவாதத்தின் பாதகமான பின் விளைவுகளைத் தவிர்க்கலாம்.

பாரிசவாதத்திற்கு சிகிச்சை அளிக்க அல்லது தடுக்க சத்திரசிகிச்சை சிலவேளைகளில் பயன்படுகின்றது. மூளையினுள் பாரிய குருதிப்போக்கு ஏற்பட்டிருப்பின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணரினால் குருதிக்கட்டியானது அகற்றப்படும்.

பாரிசவாத நோயாளிகளிற்கான தாதிய பராமரிப்பு

தாதியர்கள் பாரிசவாத நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்குவது மட்டுமல்லாது அவர்களுடைய பொது ஆரோக்கியம், போசணை, மலசலங்கழித்தல் தொழிற்பாடுகளையும் கவனித்துப் பராமரிப்பர். சுயநினைவற்ற தீவிரமான இயலாமையையுடைய, விழுங்குவதில் சிரமமுள்ள, தொடர்பாடலில் சிரமமுள்ள, மலசலங்கழித்தலில் சிரமமுள்ள நோயாளிகளுக்கு இப்பராமரிப்பு மிகவும் அவசியமாகும். நோயாளிகள் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாதவர்களாக, கூறுவதனை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருப்பின் அவர்களைப் பராமரிப்பது சிக்கலாகி விடுகின்றது.

சுயநிணைவற்ற நோயாளி நேராக நிமிர்ந்து படுத்திருப்பின் நாக்கு பின்புறம் மடிந்து தொண்டையை அடைத்து மூச்சுவிடக் கடினமாக இருக்கும். எனவே நோயாளியைப் பக்கவாட்டிற்குத் திருப்பி வாய்க்குள் சேரும் திரவப் பதார்த்தங்களை ஒரு பக்கமாக வழியவிடப்பட்டு அகற்றுதல் வேண்டும். இதன்மூலம் இத்திரவப் பதார்த்தங்கள் மூச்சுக் குழாயினுள் சென்று நுரையீரலை அடைவது தடுக்கப்படும்.

ஒரு நாளைக்கு மூன்றுமுறை வாயைச் சுத்தமாகப் பராமரித்தல் தாதியர்களின்

இன்னொரு கடமையாகும். வாயைச் சுத்தப்படுத்துவதற்கு சுத்தமான துணியினால் சுற்றப்பட்ட பற்தூரிகை அல்லது இடுக்கி, வாய் கழுவும் திரவம் அல்லது உப்பும் எலுமிச்சம்பழச்சாறும் கலந்தநீர் என்பன பயன்படுத்தப்படும். கிளிசரீனை வாய் உட்பரப்பிலும், உதடுகளிலும் பூசுதல் வாய் வரட்சியடைந்து தோல் உரிவதனைத் தடுக்கும்.

மூன்றிலொன்றிற்கும் அதிகமான பாரிசவாத நோயாளிகள் விழுங்குவதில் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர்.

சுயநினைவுடைய நோயாளி சாப்பிடும்போது அவருக்குச் சரியாக விழுங்க முடியாதுவிடின் சுவாசப்பையினுள் உணவு அல்லது நீர் உட்சென்று சுவாசப்பைகளை அடைத்துவிடும். இதனால் சுவாசப்பையில் தொற்று ஏற்பட்டுவிடும். எனவே இவர்களுக்கு குழாய் மூலம் உணவூட்டல் தேவைப்படும்.

விழுங்குவதில் சிரமம் காணப்படும் நோயாளிகளுக்குத் திரவப்பதார்த்தங்கள் கடினமாகத் தோன்றும். ஏனெனில், திரவப் பதார்த்தங்கள் வாயினுள் விரைவாக அசைந்து செல்வதனால் பலவீனமடைந்த குரல்வளை மூடிக்கு, ஒருங்கிணைந்து தொழிற்பட்டு சுவாசப்பாதையை மூடுவதற்கு நேரம் போதாதிருக்கும். ஆனால் தடிப்பான உணவுப் பதார்த்தங்கள் மெதுவாக அசைந்து செல்வதனால் குரல்வளை ஒருங்கிணைந்து செயற்பட நேரம் போதுமானதாக இருப்பதனால் விழுங்க முடிகின்றது. இதனாலேயே சில நோயாளிகளுக்குத் திரவத்தைக் கட்டியாக்கக்கூடிய பதார்த்தங்களைக் கலந்து ஆரம்பத்தில் சில காலங்களுக்கு உணவூட்டப்படும்,

**உணவைப்பாதுகாப்பாக விழுங்குவதற்கான நுட்பங்கள்**

- ◊ உணவுவேளையில் அமைதியாகவும், தளர்வாகவும் இருக்குமாறு ஒழுங்குபடுத்துங்கள். நோயாளியை அவசரப்படுத்த வேண்டாம்.
- ◊ நோயாளிக்கு அடிக்கடி சிறியளவில் உணவு ஊட்டலாம்.
- ◊ ஒருதடவையில் ஒரு தேக்கரண்டி நிரம்பிய உணவைக் கொடுத்து மறுகரண்டி கொடுக்குமுன் முன்னர் கொடுக்கப்பட்ட உணவை முழுதாக விழுங்கிவிட்டாரா என உறுதிப்படுத்தல் வேண்டும்.
- ◊ உணவையும், நீரையும் ஒரே தடவையில் ஒன்றாகக் கொடுக்க வேண்டாம்.
- ◊ உணவுண்ணும்போது நோயாளியைக் கதைக்கவிட வேண்டாம்.
- ◊ உணவுண்டபின் நோயாளியை ½ மணித்தியாலங்களுக்கு நிமிர்த்தி நேராக இருத்தி வைத்திருத்தல் வேண்டும்.

அரைத் திண்மப் பதார்த்தங்களான ஜெலி, மசிக்கப்பட்ட பப்பாசிப்பழம், தடித்த சூப் என்பன அவர்களுக்கு இலகுவில் எடுக்கக்கூடியதொன்றாகும்.

நோயாளியின் பலவீனமடைந்த அவயத்தின் சரியானநிலையில், மேலும் பாதிப்படையாமலும், நோவுண்டாகமலும் பராமரிக்கவேண்டும். நோயாளி படுக்கையிலேயே இருப்பாராயின் அவருக்குப் படுக்கைப்புண் ஏற்படுவதைத் தடுக்கவும், குருதிக் குழாய்களினுள் இரத்தம் உறைவதனைத் தடுக்கவும் அவரை ஒழுங்காக இரு மணித்தியாலங்களுக்கு ஒரு

தடவை பக்கத்திற்குப் பக்கம் திருப்பி விடுதல் வேண்டும். இதற்காக காற்று மெத்தை அல்லது நீர்மெத்தை போன்ற விசேட மெத்தைகளையும் அமத்தி அணியப்படும் காலுறைகளையும் பயன்படுத்தலாம்.

வயது, தந்தைவழிப் பரம்பரை இயல்பு, குடும்பத்தில் யாருக்காயினும் பாரிசவாதம் அல்லது மாரடைப்பு ஏற்பட்டிருத்தல் என்பன மாற்றப்பட முடியாத பாதகமான காரணிகளாகும். ஆயினும் ஏனைய பாதகமான காரணிகளைக் கட்டுப்படுத்துவதன்மூலம் பாரிசவாதம் ஏற்படுவதற்கான மொத்த அபாயத்தைக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைக்க முடியும்.

பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்க மேற்கொள்ள வேண்டியவை.

- ◊ உயர்குருதி அமுக்கம் சலரோகம் அல்லது அதிக கொலஸ்ரோல் இருக்கின்றதா என அறிந்து அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும்.
- ◊ புகைத்தல் தவிர்க்கப்படவேண்டும்.
- ◊ மதுப்பழக்கத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.
- ◊ ஒழுங்காக உடற்பயிற்சி செய்தல் வேண்டும்
- ◊ மனதை நெருக்கீடு இல்லாதுவைத்திருத்தல்.
- ◊ பழவகைகள் மரக்கறி நிறைந்த உப்பு, கொழுப்புக் குறைவான ஆரோக்கியமான உணவு வகைகளை புசிக்க வேண்டும்.

80%மான பாரிசவாதம் வருமுன் தடுக்கப்படக்கூடியது. எமது வாழ்க்கை முறையை ஆரோக்கியமாக மாற்றியமைத்தல் பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறிப்பிடக் கூடியளவிற்குக் குறைக்கும். பாதகமான காரணிகளையும், குறிப்பட்ட மருத்துவநிலைகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், பாரிசவாதம் உருவாகும் சந்தர்ப்பத்தைக் குறைப்பதில் உதவும்.

# உயர் குருதி அமுக்கம் (HYPERTENSION)

Dr.T. பேரானந்தராசா
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

சாதாரணமான ஒருவரின் குருதியமுக்கத்தின் அளவு 120/80 ஆகும். குருதியமுக்கம் இரு எண் பெறுமானத்தில் குறிப்பிடப்படுகின்றது. மேல் உள்ள எண் பெறுமானம் (systolic) அதாவது குருதிக் குழாய்களில் உள்ள அமுக்கமே இதயம் சுருங்கும் போதும் கீழ் உள்ள எண் பெறுமானம் (Diastolic) அதாவது குருதிக் குழாய்களில் உள்ள அமுக்கம் இருதயம் தளர்ச்சியடையும் போதும் ஆகும். உயர் குருதியமுக்கம் என்றால் ஒருவரின் இரத்தநாடிகளில் உள்ள குருதியமுக்கம் 140/90 என்ற பெறுமானத்திலும் அதிகமானதாகும். எனவே ஒவ்வொருவருக்கும் குறிப்பாக 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தங்கள் குருதியமுக்கத்தை வருடத்தில் ஒரு தடவையாவது அளந்து குறித்து வைத்திருக்கவேண்டும், குருதியமுக்கம் 140/90 மேல் இருப்பின் வைத்தியரிடம் சென்று மேலதிக சோதனைகள் அவற்றிற்குரிய மருந்துகள் பற்றி கலந்தாலோசித்து ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் வைத்தியரிடம் ஒழுங்காகச்சென்று பரிசோதிக்கவேண்டும்.

குருதியமுக்கம் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிடின் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டு சடுதியான மரணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே குருதியமுக்கம் ஏன் ஏற்படுகின்றது, அதை எவ்வாறு கட்டுப்படுத்துவது அதைக்கட்டுப்படுத்தாவிடில் ஏற்படும் பாரதூரமான விளைவுகளைப் பற்றி நாங்கள் அனைவரும் அறிந்து கொள்வதுடன் அவற்றை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். இதையே நான் இக்கட்டுரையில் கேள்வி பதில் வடிவில் உங்களுக்கு கூற விரும்புகின்றேன்.

1.How common is High blood pressure? எவ்வளவு பேர்கள் உயர் குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்?

எமது நாட்டில் 20-25% மான மக்கள் உயர்குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என தரவுகள் கூறுகின்றன.

2.உயர் குருதியமுக்கம் எப்படியானவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு அதிகம்?

01.அதிகூடிய நிறையுடையவர்கள் பொதுவாக ஆண்களில் உடல் திணிவு எண் இற்குமேலும் (BMI>25) பெண்களில் 23இற்கு மேலும் (BMI>23) உடையவர்களுக்கு.
02.அதிக உப்புச்சேர்த்த உணவு உட்கொள்வோர்கள்.
03.போதுமான அளவு காய்கறிகள். பழங்கள் உட்கொள்ளாதவர்கள்.
04.போதுமான அளவு உடற்பயிற்சி செய்யாதவர்கள்
05.அதிகளவு கொழுப்பு உணவு அருந்துபவர்கள்.
06.அதிகளவு கோப்பி அல்லது மதுபானம் அருந்துபவர்கள்.

3.யார், யார் தங்களது குருதியமுக்கத்தை அளக்கவேண்டியவர்கள்?

I.வயது வந்தவர்கள் (40வயதிற்கு மேற்பட்டவர்கள்
II.சலரோகம் உள்ளவர்கள்.
III.பரம்பரையில் உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் (30 வயதிற்கு மேல்)
IV.அதிக உடல் பருமன் உடையவர்கள்.

V.புகைப்பிடப்பவர்கள்.

VI.மதுபானம் அருந்துபவர்கள்.

VII.உடற்பயிற்சி செய்பவர்கள்

4. உயர் குருதியமுக்கத்திற்கான அறிகுறிகள் இல்லாத விடத்து இதனால் என்ன பிரச்சினைகள் ஏற்படும்?

சாதாரணமாக குருதியமுக்கம் உள்ளவர்களுக்கு குணம் குறிகள் பொதுவாக ஆரம்ப நிலையில் தெரிவதில்லை. ஆனால் குருதியமுக்கத்தை நாம் மேலே கூறியவாறு உள்ளவர்களுக்கு அளந்து பார்க்காமல் இருப்பின் அவர்களுக்கு சடுதியாக பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றது.

அவையாவன:

1)மாரடைப்பு (Heart attack / Angina)

2)பாரிசவாதம் (Stroke)

3)சிறுநீரகங்கள் பழுதடைதல்

4)இதயம் பலவீனமாதல் (Heart failure)

5)கால்களுக்குச் செல்லும் இரத்த நாடிகள் தடிப்படைந்து நடக்கும் போது கால்களில் நோ ஏற்படுதல். (Intermittent claudilcation)

எனவே நாங்கள் எங்கள் குருதியமுக்கத்தை 35-40 வயதின் பின் குறைந்தது வருடம் ஒரு தடவையாவது அளக்கவேண்டும். குருதியமுக்கம் 140/90 மேல் வரும் போது உங்களுடைய வைத்தியரிடம் சென்று அதற்கான சிகிச்சைகளைப் பெற வேண்டும். சிகிச்சையின் பின் உங்கள் குருதி அமுக்கம் 140/90 குறைவாக வந்த பின்னும் தொடர்ந்து உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உங்கள் மருந்துகள் குறித்தும், குருதிப்பரிசோதனைகள் ஒழுங்காக செய்தும், மருந்துகளை பாவிக்கும் அளவு பற்றியும் அறிந்து நடக்க வேண்டும். ஒருபோதும் எங்கள் குருதியமுக்கம் (நோமல்) குறைந்து விட்டது என்று மருந்துகளையோ உணவுக்கட்டுப்பாட்டுக்களையோ உடல் பயிற்சிகளையோ நிறுத்தக் கூடாது. இதனால் பல பின் விளைவுகளுக்கு ஆளாக நேரிடும்.

5.Risk factor for cardio vascur disease

குருதியமுக்கம், இருதய வருத்தம், குருதிக்குழாய்களில் ஏற்படும் தடைகள் (Athero sclerosis) போன்றவற்றுக்கான அபாயகரமான காரணிகள் எவை என்று பார்ப்போம்.

1)Life stule risk factors that can be prevented or changed] வாழ்க்கை முறையில் ஏற்படும் பயங்கரமான காரணிகள்

1. புகைத்தல் (smoking)

2.உடற்பயிற்சியின்மை( lack of physical activity sedentary life style)

3.உடல் பருமல அதிகரிப்பு(obesity)

4.Unhealthy diet (உப்பு, இனிப்பு, கொழுப்பு கூடிய உணவுகள்)

5.மதுபானம் (alcohol)

2) Treatable or party tretable rick factors
(சிகிச்சை அளிக்கக் கூடிய பாதகமான காரணிகள்)

1.High blood pressure(உயர் குருதியமுக்கம்)

2.High cholesterol blood level (குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்தல்)

3.Diabeties (நீரிழிவு/ சலரோகம்)

4.Kidney diseases that affect kindey function

3) Fixed risk factors– one's that you can not alter
(மாற்றம் செய்யமுடியாத பாதகமான காரணிகள்)

I)பரம்பரையில் காணப்படும் நோய்கள். சலரோகம் hypertension heart attack போன்றன தாய், தகப்பன் அல்லது மாமா, மாமிக்கு இருப்பின் பிள்ளைகளுக்கு இந்நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். எனவே இவர்கள் குறைந்த வயதில் இருந்தே 30-35 இருந்து தங்கள் குருதியமுக்கத்தை அளத்தல் வேண்டும்.

II)Being male-(ஆண்களாக இருத்தல்)

III)An early menopause in woman (குறைந்த வயதில் மாதவிடாய் தடைப்படல்)

IV)Age—வயது அதிகரித்தல்

V)Ethnicgroup- ஆசியாவில் பிறந்தவர்கள்.

6) Do I need any further test?

ஏனக்கு உயர்குருதியமுக்கம் இருப்பின வேறு என்ன பரிசோதனைகள் தேவை?

1 Urine test to check protein or blood in urine

2A blood test to check that your kidneys are working fine and to check your cholesterol level and glucose level.

3A heart– tracing called an electro cardio gram (ecg)

The purpose of the examination and test is to
Rule out or diagnose a secondary cause of high blood pressure such as kidney disease.
To check to see if the high blood pressure has affected the heart.
To check for other risk factors such as a high cholesterol level or diabetic.

07) How can blood pressure be lowered?

(எனது உயர்குருதியமுக்கத்தை எவ்வாறு குறைக்கலாம்.)

இரண்டு முறைகளில் குருதியமுக்கத்தை குறைக்கலாம்.

1)வாழ்க்கை முறையில் மாற்றத்தை கொண்டு வருதல்.

2)மருந்துகள் பாவிப்பதன் மூலம்.

வாழ்க்கை முறையில் செயல்படுத்தக்கூடிய முறைகள் பற்றி பார்ப்போம்.

1. உங்கள் நிறையை உங்கள் உயரத்திற்கு ஏற்றவாறு வைத்தல் உதாரணமாக உங்கள் உயரம் 160cm எனின் அதில் இருந்து 10ஐ அழப்பதன் மூலம் உங்கள் நிறை 60 kg-5kg ஆக இருத்தல் நன்று அல்லது BMI 23/25 க்குள் இருத்தல் தன்று.

2 ஒழுங்கான தேகப்பயிற்சி

குறைந்தது 30 நிமிடங்கள் கிழமையில் 5 நாட்கள் அல்லது 60 நிமிடங்கள் குறைந்தது 3 நாட்கள் செய்யலாம்.

உ+ம்: 1 விரைவாக நடத்தல்

2 நீந்துதல்

3 விளையாடுதல்

4 சைக்கிள் ஓடுதல்

3. Eat a healthydiet

(உடலுக்கு உகந்த உணவு வகைகளை உண்ணல்)

A At least five portions of varirety of fruit and vegetable per day/

ஒரு நாளைக்கு குறைந்தது 250gram மரக்கறிகளும் 150gram பழவகைகளும் ஒருவர் உணவில் சேர்த்தல் நன்று.

அ) கோதுமை மா, அரிசி மா, உணவுவகைகளை தவிர்த்து மா, குரக்கன் மா. கடலைவகைகள், தானிய வகைகள், உழுந்து என்பவற்றில் உணவுகளை தயாரித்து

அருந்துதல் நன்று.

ஆ) கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தல்

இ) 2-3 portion of fish per week.

ஈ) If you eat mear it is best to eat lean meat

உ) நல்லெண்ணை, சூரிய காந்தி எண்ணெய்களை பாவித்தல் (பொரிப்பதை தவிர்த்து வதக்கி உணவுகளை ஆக்கி உண்ணல்)

ஊ) உப்பின் அளவைக் குறைந்தளவு குறைத்தல்.

குறிப்பு– (உப்பு அதிகமாக உணவில் சேர்வதால் உயர் குருதி அமுக்கத்தை குறைப்பது கடினம்)

எ) கோப்பி, தேநீர் அருந்துவதை குறைத்தல்.

ஏ) மதுபானம், சிகரட் பாவனைகளை முற்றாக தவிர்த்தல்.

4. மருந்துகள் மூலம் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துதல் ஒருவருடைய குருதியமுக்கம் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தின் பின்னரும் அதிகமாக இருப்பின் (>140/90 மருந்து வகைகள் பாவிக்கவேண்டி வரும் உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை ஒழுங்காக எடுக்கவேண்டும்.

8. உங்கள் குருதியமுக்கத்தை எவ்வளவுக்கு குறைவாக வைத்தல் வேண்டும்?

சாதாரணமாக உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் தங்கள் குருதியமுக்க அளவை 140/90 குறைவாகவும் சலரோகம் உள்ளவர்கள் 130/ 85 குறைவாகவும் சிறுநீரக பாதிப்புள்ளவர்கள் 120/80 குறைவாகவும் வைத்திருப்பது நன்று. (வைத்திய ஆலோசனையைப் பெறவும்.

9. எவ்வளவு காலம் மருந்துகள் எடுக்கவேண்டும்?

அநேகமாக உங்கள் வாழ்க்கை காலம் முழுவதும் நீங்கள் மருந்துகள் உணவுக்கட்டுப்பாடுகள் அப்பியாசங்கள் செய்தல் வேண்டும்.

உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி நடக்கவும். இவற்றுடன் நாங்கள் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியது என்னவென்றால் மன அழுத்தத்தை குறைத்தல் வேண்டும். இதற்காக கோயிலுக்கு குடும்பமாகப் போதல், தியானம் செய்தல், நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல், மனதை அமைதியாகவும் இறைசிந்தனையுடனும், நல்ல எண்ணங்களுடனும் வாழப்பழகுவோமானால் உயர் குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்து பாதகமான பக்க விளைவுகளில் இருந்து விடுபட்டு நலமாக வாழமுடியும்.

# புற்று நோய்

வைத்திய கலாநிதி த. சுசிதரன்
சிரேஷ்ட மருத்துவ அதிகாரி,
தெல்லிப்பளை பாதை புற்றுநோய் வைத்தியசாலை

புற்றுநோய் ஒரு தொற்றா நோயாகும். இந்நோயின் அதிகிரிப்பு தற்போதய காலகட்டத்தில் கணிசமாக உள்ளதற்கு எம்மிடையே காணப்படும் தவறான பழக்கவழக்கங்களும் சூழலியல் காரணிகளுமே மிக முக்கிய காரணமாகின்றது.

புற்றுநோய் எனப்படுவது; உடல் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தன்னிச்சையாக குறிப்பிட்ட காலத்தினுள் அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் ஆகும். புற்றுநோயானது எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

ஆண்களில் புற்றுநோயானது வாய்க்குழி, தொண்டைப்பகுதியில் அதிகூடிய அளவிலும் இரண்டாவதாக நுரையீரல் பகுதியில் அதிகமாக ஏற்படுகின்றது. பெண்களில் அதிகூடிய அளவிலும் இரண்டாவதாக கருப்பை கழுத்துப் பகுதியிலும் ஏற்படுகின்றது.

புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணங்களாக; வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்ர மதுபானம் அருந்துதல், புகையிலை பாவித்தல், பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றவற்றை வெற்றிலையுடன் உட்கொள்ளல், உடலிற்கு தீங்குவிளைவிக்கும் உணவுப் பழக்கவழக்கங்கள், போதைப்பொருள்ப் பாவனை, கட்டுப்பாடற்ற முறையில் பீடைநாசினிப்பிரயோகம், தொழிற்சாலைகளில் வெளியேற்றப்படும் இரசாயன பௌதீக கழிவுகளின் தாக்கம் அணுக்கதிர் தாக்கம், பரம்பரை அலகுகளில் ஏற்படும் மாற்றங்கள் என்பன காரணமாக அமைகின்றன.

புற்றுநோயின் அறிகுறிகள் அது ஏற்படும் இடத்தினைப் பொறுத்தும் வகையினைப் பொறுத்தும் மாறாத இருமல், குரலில் ஏற்படும் சடுதியான மாற்றம். குணமடையாத புண் தோல், தசைகளில் ஏற்படும் கட்டிகள், தோலில் ஏற்படும் மாற்றங்கள், பெண்களின் பிறப்பு உறுப்பின் ஊடாக ஏற்படும் அசாதாரண இரத்தப்போக்கு அல்லது வெள்ளைப் போக்கு, மலத்துடன் இரத்தம் வெளியேறல், மலம் கழித்தலில் ஏற்படும் அசாதாரண நிலைமை, சலப்போக்கில் ஏற்படும் அசாதாரண நிலைமை, சலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள், உணவு விழுங்குவதில் ஏற்படும் சிரமம், வயிற்றின் மேற்பகுதியில் ஏற்படும் நோவு, காரணமற்ற நீண்ட காய்ச்சல் திடீரென முரசில் அல்லது தோலின் கீழான இரத்தக்கசிவு ஆகும். தவிர பசியின்மை, உடலில் அதிக அளவில் மெலிவடைதல், அதிகமாக சோர்வடைந்திருத்தல் என்பன குணங்குறிகளாக அமைந்திருக்கின்றன. எனினும் மேற்படி அறிகுறிகள் புற்றுநோய் தவிர்ந்த வேறு நோய்களுக்கும் ஏற்படுவதனால் உடனடியாக வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறுவதே சிறந்தது.

புற்றுநோய்க்கான சிகிச்சை முறைகள் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வருகின்றது. புற்றநோயின் தாக்கத்திற்கு உள்ளாவோர் எல்லோரும் உடனடியாக மரணமடைவதில்லை. தகுந்த சிகிச்சையினை பெற்று பலர் சுகதேகிகளாக வாழ்ந்துவருகின்றனர்.

புற்றுநோய் பற்றிய போதிய அறிவின்மை காரணமாக நோயின் தாக்கம் அதிகரித்த நிலையில் மிகவும் பிந்திய நிலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் தெரிந்தவுடனேயே வைத்தியரிடம் ஆலோசனை பெற்று துரிதமாக சிகிச்சையிருப்பின் புற்றுநோயின் கணிசமான அளவு குணப்படுத்த கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இதற்கென விசேடமாக "தெல்லிப்பளை பாதை புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது. புற்றுநோய்யான பெரும்பாலான சிகிச்சைகள் இங்கேயே வைத்திய நிபுணர்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

# பௌராணிக வித்தகர் யோகி கார்த்திகேசு அவர்களின் வாழ்க்கைச்சுருக்கம்

**திரு. ஆ. கனகரத்தினம்**
கலாபூஷணம், சைவப்புலவர்,
ஓய்வுநிலை ஆசிரியர்
சுழிபுரம்

வைசியர் குலத்தவரும் செட்டிகுறிச்சியில் வாழ்ந்தவருமான இராமலிங்கம் கந்தையா, பூதவேலாயுதர் செல்லப்பா புதல்வி அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது புதல்வராக யோகியார் 1908ம் ஆண்டு அவதரித்தார். இவர் தனது கல்வியை யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலையில் கற்றுக் கொண்டார். யோகியாரின் தந்தையும் ஒரு பௌராணிக வித்தகர். வட்டுக்கோட்டையில் வசித்த சிங்கப்பூர் பென்சன்காரர்கள் ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும் நல்ல பொழுது போக்கிற்காகவும் வட்டுக்கோட்டையில் உள்ள கோயில் மடங்களில் ஒன்று கூடியிருந்து தாம் புராணப்பாடல்களை வாசிக்க யோகியாரின் தந்தை பயன் சொல்வது வழக்கம். இப்படியாக தந்தை செல்லும் போது யோகி அவர்களும் தந்தையுடன் செல்வது வழக்கம்.

இதனால் யோகி அவர்களுக்கு புராண படனத்தில் ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. அதனால் தந்தையின் வழிநடத்தலினாலும் தனது முயற்சியினாலும் யோகி அவர்களும் ஒரு புராணபடன உரை ஆசிரியராக வரக்கூடிய வாய்ப்பு உண்டானது.

இத்துடன் இவர் ஒரு பிரமச்சாரியாக இருந்தமையினால் இலக்கணம், இலக்கியம், புராணங்கள், இதிகாசங்களைக் கற்று பாண்டித்தியம் பெற்றார். இதனால் இவர் கந்த புராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், காசிகாண்டம் போன்ற பதினொரு புராணங்களுக்கும் உரை சொல்லக்கூடிய சிறப்புடன் விளங்கினார். யோகியர் உரை சொல்லும் போது கேட்போரைக் கவரக்கூடியவகையில் தத்துவப் பொருள் விளங்க உரை சொல்வதனால் எல்லோரதும் பாராட்டைப் பெற்றார்.

யோகி அவர்கள் கந்தபுராணம் யுத்தகாண்டத்தில் சிங்கமாசுரன் வதைப்படலம் முதல் தேவர்கள் மீட்சிப்படலம் வரையிலான பகுதிக்கு உரை எழுதி கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தபோது இதை அறிந்த கொழும்புத்துறை ஆசிரிய பயிற்கிசக் கலாசாலையின் அதிபர் திருவாளர் விஸ்வலிங்கத்தின் அனுசரணையுடன் இந்துமாமன்ற ஆசிரிய மாணவர்களின் முயற்சியினால் அச்சிட்டு நூல்வடிவாக்கப்பட்டு 1971ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் பிரதி ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டது. அதைப் பார்த்த பல்கலைக்கழக நிர்வாகத்தினர் யோகி அவர்களை அழைத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இத்துடன் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும் இவரது உரையின் சிறப்பை புகழ்ந்து பாராட்டியுள்ளார். இவரது புராணபடன சேவை

யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் இடம்பெற்றுள்ளது. இதில் பெரும்பகுதி சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆயுள் பரியந்தம் நீண்டகாலம் இச்சேவையைச் செய்துள்ளார்.

இத்துடன் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் காசிகாண்ட உரையாசிரியராக இருந்தார். அன்னப்பிள்ளையின் ஒரு சகோதரர் புராணபடன உரையாசிரியராக இருந்தார். அவர் பெயர் வெற்றி விநாசித்தம்பி.

இத்துடன் யோகி அவர்கள் தனக்குப்பிற்காலத்திலும் இது அழியாமல் இருக்க புராணபடன உரை ஆசிரியர் பரம்பரையை உருவாக்கியுள்ளார். அவர்களில் குறிப்படத்தக்கவர்ள் உரையாசிரியர் மா. மார்க்கண்டு, உரையாசிரியரும் பண்டிதருமான திரு. தி. பொன்னம்பலவாணர் சித்தாந்த பண்டிதரும் உரை ஆசிரிய ஆசிரியருமான திரு செ.சிவபாதம் திரு பொ.சித்திரம் என்போர் குறிப்படத்தக்கவர்கள்.

கந்தபுராணம் தேவகாண்டத்திற்கு உரை எழுதி கையெழுத்துப்பிரதியாக வைத்திருந்தபோது அவரது மாணவருள் ஒருவரான திரு. செ. சிவபாதம் அதை தனது சொந்தச் செலவில் அச்சேற்றி நூல் வடிவாக்கி 1988ல் வெளியிட்டார்.

யோகி அவர்கள் கந்தர் அனுபூதிக்கு எழுதிய உரையின் கையெழுத்துப் பிரதியை 1980ம் ஆண்டு வழக்கம்பரை அம்பாள் பசனைச்சபையினர் அச்சேற்றி வெளியிட்டனர்.

யோகி அவர்கள் ஒரு நைட்டிகப் பிரமச்சரிய வாழ்க்கையை சுழிபுரம் வடக்கு சாத்தோவோலை சிவன் ஆலயத்தின் முன்புறத்தில் தெற்குப் பக்கமாக அமைந்திருந்த மடத்தில் இருந்து தவவாழ்வு வாழ்ந்து 1986ம் ஆண்டு தேகவியோகம் ஆனார்.

அவரது சேவையை எதிர்காலத்தில் வரும் சமூகத்தவர் அறிவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு யோகி அவர்களின் பெயரில் அந்த ஆலயவளவில் ஓர் அறநெறிப்பாடசாலையை தொண்டர் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் திரு கு. வி. கந்தசாமி அவர்கள் 1998ம் ஆண்டு ஆரம்பித்து அதற்கென ஒரு தனிக்கட்டடமும் அமைத்துக் கொடுத்துள்ளார். இப்பாடசாலை சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அற்நெறிப்பாடசாலைகளுள் முன்னணியில் நிற்கின்றது குறிப்பிடத்தக்கது.

2014ல் பரிசு
கனிஷ்டப் பிரிவு கவிதைப்போட்டி பரிசு
பெற்றமை

# ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் இலக்கியமும் கலையும்

வானகம் தந்து வையகம் அமைத்து
மனிதன் வாழ்வினை வளமாக்க
ஐம்பூதங்களையும் படைத்து காத்து
ஞாலத்தில் சிறந்து வாழ்ந்திடவே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஆறு அறிவோடு பேறு பதினாறும் தந்து
மனிதருக்காய் பூவுலகைப் படைத்தான் ஈசன்
பத்திரமாக சீரிய சிந்தனைகளை நூல்வடிவாக்கவே.

வாழும் உலகில் காணும் யாவும்
மனித வாழ்வின் இனிய கோலங்கள்
கல்வியோடு இணைந்த இலக்கியங்கள்
வாழ்வோடு பின்னிப் பிணைந்த கலைகளே.

சொல்லுமே வீர சாகசங்களை
வெல்லுமே காதல் காவியங்களை
பகருமே அரச வரலாறுகளை
பக்தி சொட்டுமே தெய்வாம்ச தொகுப்புக்களை.

இலக்கியப் பெருங் காப்பியங்கள்
தர்மத்தை, வாய்மையை, பதிபக்தியை
அனைத்திற்கும் மேலாக அன்பினை
எடுத்துச் சொல்லி மனிதர்களை உருவாக்குமே!

சுந்தரத் தமிழ் மொழியிலமைந்த பெரும்
மந்திர இலக்கியங்கள் தன்னாலே
சிந்தையில் உருவாகும் சீரிய எண்ணங்கள்
மென்மை உணர்வையும் மன வன்மையையும்
ஆக்கிடுமே மனிதவாழ்வில்.

வேதங்களும் அதன் வழிவந்த நாதங்களும்
சாதனை பகன்றே உள்ளத் தூய்மையில் உறைந்தே
போதனை செய்யும் சான்றோர் சொல்வதும்
நாதன் வழிவந்த கலைச் செல்வங்கள் தானே.

இலக்கியமும் கலையும் இணைந்த நிலையில்
உணர்வலைகள் உள்வாங்கப்படும் இதயங்களில்
ஆக்க பூர்வமான செயல்பாடுகள் உருவாகுமே
ஆனந்த நிலையும் கலந்திடுமே.

இதயத்தில் உருவான தர்மத்தின் சுருதியை மீட்டி
உதயத்தில் உணர்வான விழுமியங்களைக் காட்டி
ஆக்க பூர்வமான செயலூக்க மனிதர்களை நாடி
ஊக்கத்துடன் இலக்கியம் கலை படைத்திடுவோம்
தேடி

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
பெற்றது பெருவாழ்வு, பெறாதது ஞான நிலை
வாசித்தலின் மூலம் இலக்கியங்கள் ஆய்ந்து
உருவம் கொடுப்போம் வாழ்வின் தேடலுக்கு
நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
என்றே மொழிந்து அனைவர்க்கும் படைத்திடுவோம்.

ம. காஸ்மிகா
கனிஸ்ட பிரிவு

# ஆக்கபூர்வமான படைப்புக்களால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம்

ஆக்கம் டிலாஜினி இரத்தினசிங்கம்

காலத்தால் அழியாத கோலங்கள்
ஞாலத்தில் சிறந்திடும் வண்ணங்கள்
சீலத்தில் உருவாகும் எண்ணங்கள்
மூலமாய் வித்திடும் உருவாக்கங்கள்

சித்திரக் கோலமாய் குமிழியிட்ட சிந்தனைகள்
முத்திரை பதித்ததே மனமெனும் மண்டபத்தில்
பத்திரமாகவே தொகுத்தெடுத்து புத்தகமாய்
வித்தகரானோர் வழங்கினர் சமுதாயத்திற்கே.

இதயத்தின் ஓட்டங்கள் சுருதியைக் கூட்ட
உதயத்தின் விழுமியங்கள உணர்வினை ஊட்ட
பதமாகவே விழுந்த உயர்நிலை கருத்துகள்
இதமாக என்றும் உலவுமே சமுதாய வீதியிலே.

கண்ணிலே காணும் காட்சிகள் யாவும்
மண்ணிலே மணம் வீசும் படைப்புகளாக பரவுமேய
விண்ணிலே பரவிடும் காற்றோடு அதன் புகழ்
பண்ணிலே பரதத்தில் அருங்காட்சியாகுமே.

கனவோடு உருவாக்கும் இன்றைய படைப்புகள்
நனவாக மலர்ந்திடும் சமுதாயமீதிலே
வனப்போடு வளமான களத்தினை உருவாக்கி
முனைப்போடு பேணுவோம் இன்றையஇளையோரை.

மழலைகள் அவரின் மனதினை ஈர்க்க
நிழலாக வந்திடும் நினைவினில் பதிந்திடும்
சுழல்கின்ற புவிவாழ் மக்களின் எதிர்காலம்
வனமாக உருவாகிடும் என்றும் நலமாக

தீந்தமிழில் தேன்பால் சுவையெடுத்து
பாந்தமுடன் கவியியற்றி மதுரமாக இசைத்து
காந்தமென கவர்ந்திடும் படைப்புகள் அணியில்
வேதமென முழங்கிடும எதிர்கால சிற்பங்களே

மறைவேத வல்லுநர்கள் மனமார வாழ்த்தி
துறைசார்ந்த படைப்புகள் அகிலமதில் கமழ
நிறைவான வாழ்த்துகள் நினைவினில் முதிர
முறையாக உலகிற்கு அளித்தனரே கவிஞர்களே

இன்றைய இளைஞர்கள் எதிர்கால மாந்தர்கள்
பன்முக உருவாக்கம் சமுதாய எழுச்சிதர
தன்நிலை உணர்ந்த தவநிலை தோன்றல்கள்
முன்னிலையான எழுச்சியை உருவாக்குவர்.

பூவாடை போர்த்த புதுமைப் படைப்புகளை
பாலாடை போலவே மனதினில் படிந்ததுமே
சீரான ஊடகமாம் பள்ளிகளில் உணர்விடமாய்
பேரான விளைவினை சமுதாயம் கண்டிடுமே.

# வாய்மையின் சிறப்பு

க.கஸ்தூரி

"புறத்தூய்மை நீரினால் அமையும் அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்பது பொய்யாமொழிப் புலவருடைய வாக்கு, பஞ்சமா பாதகங்களில் ஒன்று. பொய்சொல்லுதல் அல்லது வாய்மை தவறுதல் ஆகும். ஒருவருடைய உள்ளம் தூய்மையுடையதாக இருக்குமானால் அவன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டான்.

இதை ஔவையார் தனது நாலு கோடி பாடலில் ஒருவரியில் ஒரு கோடிக்கு பெறுமதியாக "கோடானுகோடி கொடுப்பினும் நாக்கோடாமை கோடிபெறும்." என்று கூறி வைத்துள்ளார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வாய்மையில் சிறந்து விளக்கிய உதாரணபுருசராக விளங்கியவர் அரிச்சந்திர மகாராசட் அரிச்சந்திரன் வாய்மை காப்பதற்காக நாடுநகரம் இழந்து மனைவி மக்களை இழந்து சுடுகாட்டில் பிணம் சுடும் தொழில் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். இது மட்டுமா அரிச்சந்திரனது ஒரே ஒரு மகன் இராச குடும்பத்துப் பிள்ளை எவ்வளவு சொகுசாக எவ்வளவு வசதியாக வாழ்ந்த வாழவேண்டிய பிள்ளை கூலி வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு வீட்டு எசமானிட் கட்டளைப்படி காட்டிற்குச் சென்று தர்ப்பை கொய்யவேண்டியதாயிற்று. அப்போ அந்தப்பிள்ளை பாம்பினால் கடியுண்டு இறந்த தாய் அந்தப் பிள்ளை பாம்பினால் கடியுண்டு இறந்தது. அந்தப் பிள்ளையை ஈமைக்கிரியை செய்ய கொண்டு சென்ற போது தனது மனைவி தனது பிள்ளை இறந்து ஈமைக்கிரியைக்கு கொண்டுவந்துள்ளார் என்பதை அறிந்தும் கூட சுடலைக் கூலி செலுத்தாமல் பிணம் சுட அனுமதிக்காதவன் அரிச்சந்திரன். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விதிவசத்தால் மனைவி கொலைகாரி என்று குற்றம் சுமத்தப்பட்டு சிரைச்சேதம் செய்யவேண்டிய கடமையும் அரிச்சந்திரனுக்கு இடப்பட்டபோது சந்திரமதி சொல்லுகிறாள் கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம். தனது கணவனிடம் கூறி அவனது கடமையை செய்யும்படி சொன்னபோது அரிச்சந்திரன் தனது மனைவியின் கழுத்தை வெட்டினான். அது மாலையாக விழுந்தது. இரண்டாம் முறையும் வெட்ட முற்பட்டபோது சிவபெருமானே நேரில் வந்து அவனது கையைப் பிடித்து தடுக்கிறார். தடுத்து உன் புகழை உலகம் அறியச் செய்யவே உன்னைச் சோதித்தோம் என்று கூறி நாடு நகரம் மனைவி இறந்த மகளையும் உயிர்ப்பித்து அனைத்தையும் கொடுத்து மீண்டும் அரசாட்சி செய்யும் படி பணிக்கப்பட்டான்.

இந்த நாடகத்தை பார்த்த மகாத்மாகாந்தி இந்திய தேசத்தின் விடுதலைக்காக அகிம்சை வழியில் சத்தியாகிரகம் செய்து சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார். இது மட்டுமன்றி தான் தனது வாழ்க்கையில் சிறுவயதில் விட்ட பிழைகளையும் சத்தியத்தின் மேன்மையையும் சத்தியசோதனை என்ற நூலில் எழுதியுள்ளார். சத்தியத்தை கடைப் பிடித்தபோது, எத்தனையோ சோதனைகளைத் தான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது என்று சத்திய சோதனையில் குறிப்பிட்டுள்ளார். இதனையே கவிஞர் கண்ணதாசன் வாய்மையே வெல்லும் என்றும் அதன்வழியே நாமும் செல்வோமடா என்று பாடியுள்ளார். எனவே சத்தியம் எப்போதும் வெல்லும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆகையினால் நாமும் வாழ்க்கையில் பொய் பேசாமை ஆகிய விரதத்தை அனுட்டித்து எமது பெற்றோருக்கும் எம்மைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது உறவினர்களுக்கும் பெருமை சேர்த்து கொடுக்க சத்தியநெறியில் சென்று வாய்மையின் சிறப்பைப் பெற்று வாழ்வோமாக.

# இன்றைய காலத்தில் அறநெறிப் பாடசாலையின் முக்கியத்துவம்

இ. விதுஷா தரம் 10

இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்ததற்குரிய பயனை அடையவேண்டுமானால் மனித வாழ்விற்குரிய வரைவிலக்கணத்திற்கு அமைய வாழவேண்டும். அதற்கு எமது சமயம் வழிகாட்டுகிறது.

குறிப்பாக அன்பு, அறம், பெரியோரைக் கணம் பண்ணுதல், பிற உயிர்களுக்கு இரங்குதல், பெற்றோரை மதித்து நடத்துதல் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிதல், விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் உடையவர்களாய் இருத்தல், பிறர் கருத்திற்கு மதிப்பளித்தல், இறை பக்தியுள்ளவர்களாக இருத்தல், தன்னால் இயன்ற உதவியை இயன்றவரை பிறருக்குச் செய்தல் போன்ற இன்னோரன்ன பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து வாழப்பழகுதல் என்பவையாகும்,

இந்த விழுமியங்களை அறநெறிப்பாடசாலைகளின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளலாம். இவற்றைப் பின்பற்றி வாழப்பழகினால் வாழ்க்கையில் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த பெரியோர்கள், அதவாவது கல்வி அறிவு, ஒழுக்கத்தில் சிறந்தவர்கள், சான்றோர்கள் ஆக வாழ்ந்த திருவள்ளுவர், ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர், சுப்பிரமணிய பாரதியார், அண்மையில் மறைந்த எமது நாட்டில் வாழ்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், மாமனிதர் சொக்கலிங்கம் போன்றவர்கள் ஒருசிலராகும். இவர்களைப்போல தம் பெற்றோர்கள் கற்பித்த ஆசிரியர்கள் படித்த பாடசாலை, பிறந்த ஊர், இனம், மொழி, சமூகம், நாடு என்று எல்லோருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாமனிதர்களைப் போல வாழ்வதற்கு வழிவகுக்கும்.அறநெறிப்பாடசாலையில் நாம்பெறும் கல்விப்பயன்.

இந்த உலகில் பிறக்கின்ற நால்வைத் தோற்றம், எழுவகைப் பிறப்பில் தோன்றும் எண்பத்து நான்கு இலட்சம் யோனிபேதம் சீவராசிகளிலும் மனிதப்பிறவியே மேலானது ஆகும். இந்த மனிதனின்தோற்றம் அதாவது உருவம் மாத்திரமல்ல வாழ்க்கைமுறைகூட வேறுபட்டது. மனிதன் தன்னுடைய வாழ்வோடு மட்டும் நின்றுஇடாது ஏனைய உயிரினங்களுக்கும் உதவுபவன். மனித சமூகத்தில் கூட வறியவர்கள், அநாதைகள், முதியவர்கள், பிச்சைகாரர்கள், ஊனமுற்றவர்கள் பிறப்பிலேயே குறைபாட்டுடன் பிறக்கும் அங்கம் குறைந்தவர்கள். இவர்களுக்கு வாழ்வளிப்பதற்கு வேண்டிய ஒழுங்கு முறைகளை சரீரரீதியாகவும் பணஉதவி, பொருள்உதவி என்பவற்றை செய்தும் அவர்களையும் இவ்வுலகில் வாழும்காலம் வரை துன்பப்படாமல் வாழ்வதற்கு வேண்டிய ஒழுங்குமுறைகளைச் செய்து உதவுதல்,

அடுத்து எமது வயதில் குறைந்த இளையோருடனும் கீழோராயினும் தாழ்வுரை என்ற முது மொழிக்கு ஏற்ப அறிவில் குறைந்தவர்களாக உள்ள பாமர மக்களாக இருந்தாலும் அவர்களுடனும் பண்பாட்டுடன் பழகுதல் நடந்துகொள்ளல், அவர்களை நல்வழிப்படுத்தி சமூகத்தில் மதிக்கத்தக்க நல்ல பிரசைகளாக வரவேண்டிய வழிக்கு கொண்டு வருதல் போன்ற இன்னோரன்ன பணிகளை இவர்களுக்குச் செய்தல் அறநெறிப்பாடசாலையில் போதிக்கப்படும் சமயக் கல்வியின் ஊடாகவும் ஒழுக்கப் போதனைகள் ஊடாகவும் ஒழுக்கப் போதனைகள் ஊடாகவும் செயற்பாடுகளின் மூலமும் அங்கு கற்கும் மாணவர்களிடமும் உயர்ந்த சிந்தனையும் செயல்களும் இடம்பெறும் களமாக அமைகின்றது. இத்துடன் இலங்கையில் அனைத்து அறநெறிப் பாடசாலைகளினாலும் அறிமுகம் செய்யப்பட்ட பரீட்சை இந்துசமயவரலாறு, இந்து சமய இலக்கியம், இந்துசமய மெய்யியல், இந்து சமய வாழ்வியல்

என்னும் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் சமய விழுமியங்களினூடாக மாணவர்கள் சமூகத்தில் நல்லபிரஜைகளாய் மிளிர வாய்ப்பு ஏற்படுகின்றது.

இத்துடன் வருடாந்தம் கலை கலாசார அமைச்சினால் நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டிகளில் அறநெறிப்பாடசாலை மாணவர்களை தயார்ப்படுத்தி பங்குகொள்ளச் செய்வதன்மூலம் ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை செய்யும் ஆற்றலையும் கோவில்கள் மற்றும் பொது இடங்களில் பஞ்சபுராணம் ஓதும் நிகழ்ச்சியில் பங்குபற்றும் தகுதியையும் பெறுகின்றனர்.

அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மேல்வகுப்பு மாணவர் களுக்கும் இந்துகலாசார அமைச்சினால் பயிற்சிப்பட்டறை நடாத்தப்படுவதனால் அதன் மூலம், மாணவர்கள் ஒரு சமய விழாவை எப்படி நடத்துவது என்பது பற்றிய அனுபவத்தையும் அறிவையும் பெறுகின்றனர்.

அறநெறிப்பாடசாலைகளில் பிரதேசத்தின் கலை கலாசார பிரிவினருடன் இணைந்து நால்வர் குருபூசைகள் தைப்பொங்கல்விழா, புதுவருடப்பிறப்பு பண்டிகை, நவராத்திரிவிழா என்பன கொண்டாடுவதன் மூலமும் இங்கு கற்கும் மாணவர்கள் சமய விழுமியங்களை அறிவதுடன் விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கம் அவற்றின் பயன் என்பவற்றையும் பெறுகின்றனர்,

அடுத்ததாக இந்து கலாசார அமைச்சின் கிளைகளாக விளங்கும் பிரதேச செயலகங்களில் உள்ள கலை கலாசார பிரிவினர் வருடாவருடம் அற நெறிப்படாசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பண்ணிசைப் போட்டி, வில்லுப்பாட்டுப் போன்ற கலைகளில் மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர். இதன்மூலம் சில மாணவர்கள் தொடர்ந்து கலைகளில் ஈடுபாடுடையவராய் மிளிர்ந்து பிற்காலத்தில் சிறந்த கலைஞர்களாக மிளிரக் கூடிய வாய்ப்புகளையும் ஏற்படுத்தும்.

இன்னும் ஔவையார் சொல்லிவைத்த 'அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், ஐயமிட்டு உண்' என்பனபோன்ற தர்ம சிந்தனையுடையவர்களாக எதிர்காலத்தில் மிளிர அறநெறி கல்விப் பாடவிதானம் பெரிதும் உதவும். மனிதன் மனிதனாக வாழ கல்வி அவசியம். அதிலும் அறநெறிக்கல்வி இதற்கு உருதுணையாய் இருக்கும் என்பதை உணர்ந்தே அரசாங்கம் நாடுபூராவும் எல்லாப் பகுதிகளிலும் இந்த அறநெறிப்பாடசாலைகளை நிறுவி அதற்குரிய தளபாடங்கள், பாடநூல்கள், மாணவர்களுக்குச் சீருடைகள் என்பவற்றை இலவசமாகக் கொடுத்து சேவை செய்கின்றது. நாமும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமூகத்திற்கேற்ற நற்பிரஜைகளாக வாழ்வோமாக.

# ஆறுமுக நாவலர் செய்த சமயப் பணிகள்

செல்வி ஜெ. யதுர்சனா
தரம் 10

"தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க ஆறுமுகநாவலர் நல்லூரில் பசுக்கொலைக்கு அஞ்சி பாரததேசம் சென்ற ஞானப்பிரகாசர் பரம்பரையில் வந்த கந்தப்பிள்ளை சிவகாமி அம்மை தம்பதிகளின் ஆறாவது பிள்ளையாக 1822 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி அவதரித்தார்.

இவர் தனது கல்வியை 5ம் வயதில் ஆரம்பித்து சுப்பிரமணிய உபாத்தியாயர் வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர் என்போரிடம் மரபு ரீதியாக குருகுல முறைப்படி தமிழ்க்கல்வியைக் கற்று தேர்ச்சியடைந்தார். பின்னர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நிகண்டு முதலிய நூல்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

நாவலர் தனது 12 வயதில் பார்சிவல்துரையின் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலம் கற்று தேர்ச்சியடைந்தார். நாவலருடைய தமிழ் புலமையைக் கண்ட பார்சிவல்துரை நாவலரிடம் தமிழ்க் கல்வியைக் கற்றார். திருமுறைகளையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் கற்று தேர்ச்சிபெற்றார். இதோடு நின்றுவிடாது வேதம்,ஆகமம் என்பவற்றைக் கற்கவேண்டும் என்று விரும்பினார். இந்நூல்கள் வடமொழியில் சமஸ்கிருதத்தில் இருந்தமையால் சமஸ்கிருதத்தையும் கற்றுத்தேறி மும்மொழிப் புலமை யையுடையவர் ஆனார்.

போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் வருகையால் அவர்களின் ஆட்சியில் எமது சமயத்தின் சுதந்திரம் மறுக்கப்பட்டதால், சைவசமயம் வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது. இதனை நாவலர் மனம் பெரிதும் துன்பப்பட்டார். கிறிஸ்தவ சமயத்திற்கு பார்சிவல் துரை தொண்டு செய்வதைக் கண்ட நாவலர் தானும் சைவ சமயத்திற்கு தொண்டு செய்ய எண்ணினார்.

சைவசமயத்தில் கருத்துக்களையும் உண்மைகளையும் மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு யாழ்ப்பாண சிவன் கோயில் மண்டபத்தில் மக்கள் கூடியிருக்கும் வேளைகளில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பிரசங்கம் செய்வார். இவர் முதல்முதலாக 31.12.1847ம் ஆண்டு முதலாவது பிரசங்கத்தை செய்ய ஆரம்பித்தார். நாவலருடைய பிரசங்கத்தின் உட்பொருளாக சைவசமயத்தின் தொன்மை, மேன்மை, உலகவாழ்வின் நிலையாமை, பஞ்சமா பாதகங்கள் செய்வதனால் ஏற்படும் தீமைகள் என்பனவும் பசுவதையின் கொடுமையைப் பற்றியும் பசுவின் சிறப்பைப் பற்றியும் பசுவின் சிறப்பைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

நாவலரின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் வாயிலாக நாளுக்குநாள் கோயிலுக்குச்செல்லும் மக்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தது. அத்துடன் புலால் உணவை கைவிட்டனர். கிறிஸ்தவ சமயத்திற்கு மாறுகின்றவர்கள் சைவசமயிகளாகவே வாழவிரும்பினர். சமயதீட்சையின் சிறப்பினை கேள்வியுற்றவர்கள் சமய தீட்சையைப் பெற்றுக்கொண்டனர் அக்காலத்தில் பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கப்படுவதிலை. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய இரவு வேளைகளில் தானும் எமது சமயத்து ஆசிரியர்களின் உதவியோடும்

சமயவகுப்புக்கள் நடத்தினர். இதுமட்டுமன்றி சைவப் பிரகாச வித்தியாசாலை என்றபெயரில் கோப்பாய், மாதகல், மூளாய், யாழ்ப்பாணம் சிதம்பரத்திலும் கூட ஆரம்பித்தார். இதனால் நாவலர் ஆரம்பித்த பாடசாலைகளில் சைவசமயமும் கற்பிக்கப்பட்டது.

இவ்வளவில் நின்றுவிடாது சைவ ஆலயங்களில் சிவபூசைக்கு வேண்டிய பூமாலை, பூ என்பனவற்றைப் பெறுவதற்காக கோயில்களில் நந்தவனம் அமைத்தல் ஆலயங்களில் திருமுறை ஓதுவதற்கும் பசனை பாடுவதற்கும் குரலினிமையும், இசையார்வமும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்து ஓதுவார்களாக பயிற்றுவித்து திருமுறை ஓதச்செய்தார். கோயில்களில் தகுதியான ஆசிரியர்களை நியமித்து கேட்போர் பயன்பெறத்தக்கவகையில் சொற்பொழிவு செய்வித்தார். சமயகுரவர், சந்தான குரவர்களுக்கு குருபூசை செய்யும் நடைமுறையை ஆரம்பித்தார். சமயதீட்சை பெறுதல், அன்னதானம் செய்தல், சமயப் பரீட்சைகள் நடாத்துதல் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டமும் பரிசிலும் வழங்கும் ஏற்பாடுகள் செய்தார். சமயப் பணி செய்யும் தொண்டர்களை உருவாக்கினார்.

அடுத்து அக்காலத்தில் ஏட்டுச்சுவடிகளில் இருந்த சைவ சமய நூல்களை நூல் வடிவில் அமைப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சியந்திரசாலையை நிறுவி அதன் மூலம் திருமுருகாற்றுப்படை, கோயிற் புராணம், பெரிய புராண வசனம், கந்த புராண வசனம். தனது கல்வி அறிவினால் தானாகவே சிலநூல்களை எழுதி வெளியிட்டார். அவையாவன சைவ வினாவிடை, மாணவர்களுக்கான பாலபாடம், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, நித்திய கருமவிதி, குருசிஸ்ய .கிருமம், சிரார்த்த தர்ப்பணம், நல்நூல் காண்டிகையுரை, சிறுவர்களுக்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களை வெளியிட்டு உதவினார்.

நாவலருடைய இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும். இவர் மடைதிறந்த வெள்ளம்போல பேச்சாற்றல் உடையவர். ஒருமுறை இந்தியா சென்று திருவாவடுதுறை ஆதீனத்தில் பேசியபோது அவர்கள் இவரது பேச்சு வன்மையைக் கண்டு இவருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

இவர் யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் என்னுமிடத்தில் கந்த புராண படனம் செய்தமையால்தான் அந்த இடத்திற்கு இப்பெயர் வழங்குகின்றது. கந்தபுராண கலாசாரத்தை முதல்முதலில் ஆரம்பித்த பெருமை நாவலரையே சாரும்.

அந்நியர் வருகையால் எமது பழமை வாய்ந்த பாடல் பெற்றதும் ஆகிய தலங்களாவன கீரிமலை, நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்கள் இடிந்து சிதைக்கப்பட்டிருந்ததைக் கண்ட நாவலர் பெருமான் மனம் வருந்தி இவற்றைக் கட்டி பழைய நிலைக்கு கொண்டுவந்து புனருத்தாரணம் செய்து கும்பாபிசேகம் செய்த பெருமையும் நாவலரையே சாரும்.

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே- எல்லவரும் ஏத்து புராணாக மங்களெங்கே யிரசங்கம் எங்கே ஆத்தன் அங்கே அறை"

இவ்வாறாக நாவலர் எமது சமயத்திற்கு ஆற்றிய பணிகள் அளவிடமுடியாதவை. இதனால் சைவ சமயத்தவர்கள் நாவலர் பெருமான் ஐந்தாம் குரவர் எனப் போற்றுகின்றனர். இவர் தனது 65ம் வயதில் கார்த்திகை மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

# சமய குரவர்களின் சமயப் பணிகள்

பா.அஜந்தா

சமய குரவர்கள் தமது ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு சமயத் தொண்டுகள் செய்தனர். சமய குரவர்களில் முதன்மை வாய்ந்தவர்களாக விளங்கும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், மணிவாசகர் என்போர் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளில் நின்று தொண்டு செய்தனர்.

சமய குரவர்கள் இறைவன் மேல் வைத்த பக்தியினால் பாடிய பாடல்கள் சைவத்திருமுறைகளில் உள்ளன. அப்பாடல்களினால் சைவ சமயத்தவர்களாகிய நாம் இறைவனைத் துதித்துப்பாடி பக்தியை வளர்க்க உதவுகின்றது.

மழையில்லாமல் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உணவளித்தமை சமண சமயத்தவர்களால் எமது சமயத்தவருக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டபோது இறைவன் திருவருள் துணையோடு வாதிட்டு திருஞானசம்பந்தர் பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கியமை அனல்வாதம் புனல் வாதம் செய்து எமது சமயத்தின் உண்மையை நிலைநாட்டியமையினால் சமணசமயத்தைச் சார்ந்திருந்த பாண்டிய மன்னனும் மக்களும் மீண்டும் சைவசமயத்திற் சேர்ந்தமை.

திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவம் திறக்க அப்பர் சுவாமிகள் பாடினார். கதவு திறக்கப்பட்டது. சம்பந்தர் திருக்கதவம் அடைக்கப்பாடியும் அங்கு பூசைகள், வழிபாடுகள் நடைபெற அருளிச்செய்தனர். திருநாவுக்கரசர் உழவாரத்தொண்டு செய்து சரியைத் தொண்டின் சிறப்பினை எல்லோரும் அறியவும் பின்பற்றவும் செய்தார். இத்துடன் சரியைத் தொண்டின் சிறப்புப் பற்றிய பாடல்கள் குறிப்பாக "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன் முன் அலகிட்டு மெழுகிட்டு பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி சங்கரா சயபோற்றி என்பன போன்ற பாடல்களைப் பாடி தொண்டின் சிறப்பை வெளிப்படுத்தியமை.

பிறருக்குத் துன்பம் வரும்போது அவர்களுக்காக இறை அருள் துணையோடு அவர்களது துன்பத்தை நீக்கியமை குறிப்பாக சம்பந்தர் பூம்பாவையின் சாம்பரை மீண்டும் பூம்பாவை ஆக்கியமை. பாம்பு தீண்டி இறந்த வணிகனை சடையாய் எனுமால் சரண் நீ எனுமால் என்னும் பாடலைப்பாடி உயிர்ப்பித்தமை கொல்லிமளவன் என்ற வணிகனின் மகளுக்கு முயலகன் நோயை நீக்க துணிவளர் திங்கள் என்னும் தொடக்கத்தினையுடைய பாடலைப்பாடி நோய் நீக்கியமை. திருப்புக்கொலியூரில் உள்ள தலவழிபாட்டிற்கு சுந்தரமூர்த்திநாயனார் செல்லும் போது ஒரு வீட்டில் மங்கல ஒலியும் எதிர்வீட்டில் அமங்கல ஒலியும் கேட்டபோது அமங்கல ஒலி கேட்டவீட்டிற்கு சென்றார். சுந்தரர் அவரகளின் துயரைப் போக்க முதலையுண்ட பிள்ளையை மீட்க குளக்கரைக்குச் சென்று சிவன் அருளை வேண்டி ஏற்றான் மறக்கோன் என்னும் பதிகத்தைப் பாடி முதலையுண்ட பாலகனை தற்போதைய வயதிற்கேற்ற உரிய வளர்ச்சியுடன் உயிர் பெற்று முதலையே பிள்ளையை கரையில் கொண்டுவந்துவிட்டமை.

திங்களூரில் உள்ள அப்பூதியடிகளின் இல்லத்திற்கு நாவுக்கரசர் சென்றபோது அங்கு நாவுக்கரசருக்கு திருவமுது அளிக்க ஏற்பாடு நடைபெற்றது. அப்போது வாழைக்குருத்து வெட்டப்போன அப்பூதியடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்தபோது நாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்தபோது நாவுக்கரசர் அவ்வூரில் உள்ள சிவத்தலத்தில் சென்று ஒன்றுகொலாம் அவர் சிந்தை என்னும் பதிகத்தைப்பாடி அப்பூதி அடிகளின் மகனை

உயிர்பெற்றெளச் செய்தமை போன்ற எத்தனையோ சமயப் பணிகளை பொது நன்மைக்காக செய்துள்ளனர். இப் பணிகளினால் எமது சமயம் இன்னும் நிலைநிறுத்தப்பட் டுள்ளமையும் அதனால் சைவ சமயத்தவராகிய நாம் சைவ சமயத்தவர் என்று சொல்லிப் பெருமைப்படவும் கூடியதாய் உள்ளது. எனவே சமய குரவர்களுக்கு நாம் என்றும் நன்றி யுடையவர்களாக இருந்து அவர்கள் காட்டியவழியில் சென்று சிவன் கழல் சேர்வோமாக!

# அறம் செய விரும்பு

க. தர்மிதா தரம் 3

அறம் செய விரும்பு ஆறுவது சினம் என்று ஔவையார் கூறியுள்ளார். ஔவையாரின் கூற்றின்படி தருமத்தை விரும்பிச் செய்யவேண்டும். என்று கூறியுள்ளார். நாம் ஒரு கருமத்தைச் செய்யும் போது அதை விருப்பத்தோடு பற்றோடு செய்யவேண்டும். அப்படிச் செய்வதால்தான் அதில் பயன் கிடைக்கும். ஔவையார் இன்னும் ஒரு பாடலில் ஐயம் இட்டுண் என்று கூறியுள்ளார்.

இதனைத் திருமூலர் இன்னொரு வகையாக கூறுகிறார். யாவர்க்குமாம் இறையர்க்கு ஒரு பச்சிலை என்ற பாடலில் யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி என்று கூறிவைத்துள்ளார். கவிஞர் கண்ணதாசனும் ஒரு பாடலில் தர்மம் தலைகாக்கும் என்று பாடியுள்ளார்.

தாயிற் சிறந்த தொரு கோயிலில்லை. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற முதுமொழிப்படி நாம் சிறு வயதில் இருந்தே பெற்றோரை தெய்வமாக மதித்து வாழப்பழகினால் அவர்களின் அறிவுரைப்படி கேட்டு ஆசிரியர்களின் சொல்படி நடப்போமேயானால் நாம் தர்மநெறி பிசகாமல் வாழக் கற்றுக்கொள்ளலாம். இப்படிவாழும் போது எங்களை எல்லோரும் விரும்புவர். கடவுளும் எங்களை விரும்புவார். அதனால் எங்கள் வாழ்க்கையில் எந்தவித குறையும் வராது. இதனைப் பார்த்த மற்றவர்களும் எம்மைப்போல தாமும் வர முற்படுவர். இதனால் எல்லோரும் ஒற்றுமையாகவும் ஒருவரிடம் மற்றவர் அன்புள்ளவராயும் வாழமுடியும். இதனைப் பாரதியார் கூட அன்பென்று ஒட்டு முரசே என்று பாடியுள்ளார். கொடையில் சிறந்த கொடை அன்பை கொடுப்பது தான். எனவே அன்புள்ளவன்தான் மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு இரங்குவான். அவன்தான் மற்றவர்களுக்கு ஏதாவது கொடுக்கும் சிந்தனையுடையவனாக இருப்பான். எனவே அன்பு, இரக்கம், கருணை இவையெல்லாம் எமது மனதில் குடிகொள்ளவேண்டும் என்றால் கடவுள் பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும் ஒருவனுக்கு பிச்சை கொடுப்பதுதான் தர்மம் என்று நினைக்ககூடாது. உபகாரம் கருதாமல் நாம் மற்றவர்களுக்கு செய்யும் உதவி எல்லாம் தருமம் தான். தருமத்தை பலவகையில் செய்யலாம். நாம் ஒவ்வொருவரும் எங்களால் இயன்ற உதவியை மற்றவர்களுக்குச் செய்து தருமத்தைச் சேர்க்கவேண்டும். இது எங்களுடன் கூட வருவது. எனவே நாம் தருமம் செய்து வாழ்க்கையைப் பயனுள்ளதாக வாழ்வோமாக!

# திருமுறைகளின் பெருமை

திகழினி தரம் 7

திருமுறைப்பாடல்கள் திருவருட் செல்வர்களாகிய செயற்கரிய செயல்களைச் செய்த சிவனடியார்களால் பாடப்பெற்றது. இறைவனைப் பூமாலை சூட்டி வழிபடுதல் போலவே பாமாலையால் ஏத்திப் பாடி வழிபடுவதற்குரிய பாடல்களே திருமுறைப்பாடல்கள் ஆகும்.

திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றில் முதல் ஏழுதிருமுறையில் உள்ள பாடல்களும் ஒருவகையினைச் சார்ந்தவை. அப்பாடல்களை பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் முதன்மை வாய்ந்தவர்களாக விளங்கும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரால் பாடப்பெற்ற தேவாரப்பாடல்கள் ஆகும்.

திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றில் முதல் ஏழு திருமுறையில் உள்ள பாடல்களும் ஒருவகையினைச் சார்ந்தவை. அப்பாடல்களை பெரியபுராணத்தில் சொல்லப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் முதன்மை வாய்ந்தவர்களாக விளங்கும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார் ஆகியோரால் பாடப்பெற்ற தேவாரப்பாடல்கள் ஆகும். தேவாரம் என்பதனை சான்றோர்கள் வேதசாரம் என்று பொருள் கொள்வர்.

அடுத்தாற்போல வருகின்ற எட்டாம்திருமுறையில் உள்ள திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்றது. இப்பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மைவாய்ந்தவை. இதன் சிறப்பினை அருளாளர்கள் திருவாசகத்திற்கு உருகாதார், ஒருவாசகத்திற்கும் உருகார் என்று கூறுவர்.

ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைச் சேந்தனார் முதல் கருவூர்த்தேவர் ஈறாக ஒன்பது அருளாளர்கள் பாடியுள்ளனர். இதில் திருவிசைப்பா இறைவனின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுவதாகவும், திருப்பல்லாண்டு பாடி இறைவனைப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்திப் பாடுவதாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக சிதம்பரத்தில் ஒருமுறை தேர் வீதிவலம் வர இருந்த நேரத்தில் ஓடாமல் நின்றபோது சேந்தனார் என்னும் அருளாளர் திருப்பல்லாண்டு பாடிய போது தேர் உருண்டோடியது. இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த பாடல் ஆகும்.

அடுத்து பத்தாம் திருமுறையில் உள்ள திருமந்திரப் பாடல்கள் திருமூலர் என்னும் யோகியினால் பாடப்பெற்றது. திருமூலர் தியானத்தில் 300 வருடம் இருந்து விழித்தவுடன் ஒரு பாடலைப்பாடிவிட்டு மீண்டும் அவர் தியானத்தில் அமர்ந்துவிடுவார். ஒருவருடத்தின் பின் விழிக்கும் போது பாடுவார். இவ்வாறாக ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் ஒன்பது தந்திரங்களாக கொண்டது. இம்மைக்கும் மறுமைக்கும் உரிய எல்லாவகை உபாயங்களும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அடுத்து பதினொராம் திருமுறையில் உள்ள பிரபந்தப்பாடல்கள். காரைக் கால் அம்மையார், பட்டினத்தடிகள், திருவாலவாய் இறைவன் முதலாக பன்னிரண்டு அரு ளாளர்களினால் பாடப்பெற்றது. இப்பாடல்களைப் பாடிய அருளாளர்கள் சீவன் முத்தர்களாக இருந்து இறையருள் பெற்றவகையினையும் திருவருளின் சிறப்பினையும் இறைவன் அவர்களை ஆட் கொண்டவகையினையும் எடுத்தியம்புகின்றன.

பன்னிரண்டாம் திருமுறையில் உள்ள பெரியபுராணம் ஆனது செயற்கரிய செயல்களைச் செய்த பெரியார்களது வரலாற்றினைக் கூறுவதனால் தான் பதினெண் புராணங்களிலும் பெரியபுராணம் முதன்மை பெற்றது என்று சொல்லப்படுகின்றது.

பன்னிரண்டு திருமுறைகளையும் இருபத்தேழு அருளாளர்கள் பாடியுள்ளனர்.

86 ஆம் பக்கம் பார்க்க

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

ஜெ.ஜனனி
தரம் 8

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'

என்பது பொய்யாமொழி புலவர் வாக்கு. உயிர்களைக் கொன்று அதன் ஊனை உண்ணாமல் இருப்பவனைக் கண்டால் எல்லா உயிர்களும் அவனைக் கைகூப்பி வணங்குமாம்.

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்
செகுத்து உண்ணாமை நன்று"

இந்தக் குறளின் படி ஒரு மனிதன் வாழ்நாள் முழுவதும் ஓர் உயிரையும் கொல்லாமலும் ஊன் உணவை உண்ணாமலும் சைவ உணவை உண்பவனாக இருந்தால் அவன் ஆயிரம் யாகங்கள் செய்த பயன் அவனுக்குக் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றத்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே."

என்னும் திருமந்திர பாடலின்படி அறிவில்லாதவர்கள் அன்பு வேறு சிவம் வேறு என்று எண்ணுகின்றனர். பிற உயிர்களிடத்தில் காட்டும் அன்புதான் சிவனை அடையச் செய்யும் வழி என்பதையும் அறிவற்றவர்கள் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் பிற உயிர்களிடத்தில் காட்டும் அன்புதான் சிவனை அடையச் செய்யும் வழி என்பதை அறிந்தவர்கள் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டி வாழ்பவர்கள் சிவனைப் போலவே அருளுடையவர்களாய் இருப்பர்.

வீட்டில் வளர்க்கும் பிராணிகள் பறவைகள் மிருகங்களிடம் அன்புடன் பழகி உணவளித்து பராமரித்து வளர்ப்பதன் மூலம் சிறு பிள்ளைகள் ஜீவகாருண்யம் உள்ள மனப்பாங்குடையவர்களாக வருவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார் என்பு
தோல் போர்த்த உடம்பு"

அதாவது ஒருவருடைய உடம்பில் உயிர் இருந்தால் அவர் பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துபவராக இருப்பார். அப்படி இல்லாமல் பிற உயிர்களிடத்தில் அன்பு செய்யாமல் இருப்பவராயின் அவரின் உடம்பில் உயிர் இல்லை என்பதுதான் அர்த்தம். அவர் பிணத்திற்கு சமம் என்று சொல்லப்படுகிறது.

"வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில் பட்டுரும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப் பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் எனும் ஒளவையாரின் பாடலின் படி பார்க்கும்போது அன்பான பண்பான பேச்சை ஒருபோதும் கடினமான பண்பில்லாத பேச்சு வெல்லமாட்டாது. ஓர் அம்பை எய்து விட்டால் யானையின் இந்தப் பக்கத்தில் பட்டு மறுபக்கத்தால் பீறிக்கொண்டுபோகும். ஆனால் அந்த அம்பை ஒரு பஞ்சுச்சாக்கில் எய்துவிட்டால் தைத்தபடி முன்பக்கத்திலேயே நின்றுவிடும். ஒரு பெரிய கற்பாறையின்மேல் நீண்ட ஒருபெரிய அலவாங்கை எடுத்து நான்கு பேர் தூக்கிப்போட்டபோதில் அதில் ஒரு சிறிய குழிமட்டும்தான் ஏற்படுகின்றது. ஆனால் அந்தச் சிறுகுழியில் கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறிய ஆலம்வித்து விழுந்து முளைத்து வளர்ந்து மரமாக வரும்போது அந்தக்கற்பாறையையே பிரித்துவிடுகிறது. இப்படித்தான் அன்பினால்

எந்த முரட்டுச் சுபாவம் உடையவர்களிடத்திலும் உள்ள திறமைகளின் மூலம் நல்ல பயனைப் பெறமுடியும்.

பஞ்சமா பாதகங்களில் ஒன்று கொலை செய்தல் ஆகும். உயிர்களிடத்தில் அன்புள்ள ஒருவர் ஓர் உயிரையும் இம்சைப்படுத்தி கொல்லமாட்டார். பொருள் இல்லாதவர்களுக்கு இந்த உலக வாழ்க்கை நரகம், அதே போல் அருள் இல்லாதவர்களுக்கு மறுபிறப்பு நரகம் ஆக அமைந்துவிடும். "தன் ஊன் பெருகுதற்கு தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள் என்ற குறளின்படி தன்னுடைய உடம்பை வளர்ப்பதற்கு பிற உயிரைக் கொன்று அதன் ஊனை உண்டால் அவருக்கு அருள் எப்படிவரும். வராது.

"ஓடிவிளையாடுபாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது. பாப்பா கூடிவிளையாடு பாப்பா ஒரு குழந்தையையும் வையாதே பாப்பா கொத்தித் திரியும் அந்தக்கோழி அதை கூட்டிவிளையாடு பாப்பா எத்தித் திருடும் அந்த காக்கை அதற்கு இரக்கப் படவேணுமடி பாப்பா'

என்ற பாரதியாரின் பாடலின் மூலம் சிறு பிள்ளைகளாகிய நீங்கள் மற்றப் பிள்ளைகளையும் சேர்த்து ஒற்றுமையாக விளையாடவேண்டும் என்றும் மற்ற பிள்ளைகளை ஏசக்கூடாது என்னும் உணவைத் தன் சொண்டினால் கொத்தித் தின்று உயிர்வாழும் கோழியைக்கூட நீ உன்னுடன் சேர்த்து கூட்டி விளையாடு என்றும் பிள்ளைகள் கையிலே வைத்து ஏதாவது உணவை உண்ணும் போது பின்பக்கத்தால் வந்து எத்தித்திருடும் காண். அதற்கும் எங்களது உணவில் ஒரு சிறிய பகுதியைப் போட்டு அதன் பசியையும் போக்க உதவ வேண்டும். என்று பாப்பாப்பாட்டில் பாரதியார் கூறி வைத்துள்ளார். நாம் எமது பெற்றோர் சகோதரர்களிடம் எவ்வளவு அன்பாக இருக்கின்றோமோ அதேபோல் மற்றவர்களிடமும் ஏனைய உயிர்களிடத்திலும் அன்புள்ளவராக இருக்க வேண்டும். ஏனெனில் இறைவன் எல்லா உயிர்களிடத்திலும் உயிருக்கு உயிராக கலந்திருக்கின்றார். நாம் பிற உயிர்களிடத்தில் காட்டும் இதையே இறைவன் விரும்புகின்றார். எனவே நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்பானவர்களாக இருப்போமாக.

84ம் பக்கத்தொடர்...

முதல் மூன்று திருமுறையிலும் உள்ள தேவாரங்களில் திருஞானசம்பந்தர் இயற்கை அழகில் இறைவனைக் கண்டு களித்துப் பாடப்பெற்றவை சம்பந்தர் கிரியை நெறியில் நின்று இறைவனை தனது தந்தையாகப் பாவனை செய்து பாடிய பாடல்கள் குறிப்பாக திருமுறைகள் பாடல்பெற்ற சந்தர்ப்பங்களைப் பார்க்கும் போது மற்றவர்களுடைய துன்பத்தைப் போக்குவதற்காகவே பாடப்பெற்றமை ஒரு தனிச்சிறப்பாகும். அடுத்து புறச்சமயத்தவர்களின் கொடுமைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் எமது சமயத்தின் உண்மைகளை நிலைநாட்டவும் பாடப்பெற்ற பாடல் களில் திருநீற்றுப் பதிகம் கோளறுபதிகம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

சைவசமயத்தில் அதீத பற்றும் இறைவனிடத்தில் அளவு கடந்த பக்தியும் உடையவனும் தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்தவனுமாகிய இராசராச சோழமன்னனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பியின் நெறிப்படுத்தலில் திருமுறைகள் தொகுக்கப்பட்டன. பன்னிரண்டு திருமுறைகளிலும் உள்ள பாடல்கள் ஏழுவகையான பாடல்களைக் கொண்டுள்ளது. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங் களின்போது திருமுறைப் பாடல்கள் ஓதும் நிகழ்ச்சியும் உள்ளடக் கப்படுகின்றமையில் இருந்து திருமுறைகளின் சிறப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே நாமும் திருமுறைகளை ஓதி திருவருளைப்பெற்று உய்வடைவோமாக.

உளமார்ந்த நன்றிகள்

1. பாரம்பரிய சமயவிழுமியம், கலாசாரத்தை மாணவரிடையே வளர்க்கும் ஆசிரியருக்கு நன்றி.
2. மாணவர் வரவை அதிகரிக்க ஊக்கம் கொடுத்துவரும் திருமதி. சு. வசந்தகுமாரிக்கு நன்றி.
3. பாடசாலையின் பாதுகாப்புக்கு சுதாஜினி, தவலட்சுமி குடும்பம் பெரிதும் உதவுகின்றனர். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.
4. இப்பாடசாலையை நிறுவியவரும் ஆலோசகருமான திருமிகு. கு. வி. கந்தசாமி ஐயா அவர்களுக்கு நன்றி.
5. இவருடன் இணைந்து இவ்விழாவை சிறப்பாக நடாத்த உறுதுணையாக இருக்கும் திரு. திருமதி அழ. பகீரதன் தம்பதியினருக்கு நன்றி.
6. எமது அழைப்பை ஏற்று விழாவிற்கு வருகை தந்துள்ள அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.
7. கலைநிகழ்வுகளைத் தயாரித்து தந்த யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலய ஆசிரியர்கள் திருமதி கு. பவளகுமாரி, திருமதி ஜெயகௌரி ஆகியோருக்கு நன்றி.
8. விழா சிறப்புற நடாத்துவதற்கு உதவிய பாடசாலை நிர்வாகத்தினருக்கு நன்றி.
9. எமக்கு வழிகாட்டி நிற்கும் திருமதி அகல்யா ஜனார்த்தனன் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை அவர்களுக்கு நன்றிகள்.
10. விழாவை நடாத்த உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# மாணவர் சான்றிதழ்கள்









# மாணவர் சான்றிதழ்கள்








இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேச ஞாபகார்த்த

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி ஜெயதுர்சனா (வகுப்பு: 10)

முதலாம் இடம்

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேச ஞாபகார்த்த

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible]

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

# மாணவர் சான்றிதழ்கள்

ශ්‍රී හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு [illegible]

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible]

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

---

ශ්‍රී හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு [illegible]

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible] கயல்விழி

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

---

ශ්‍රී හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு [illegible]

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible]

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

---

ශ්‍රී හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு [illegible]

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible] திகழினி

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

# மாணவர் சான்றிதழ்கள்

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible]

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற
ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு - 2015

யாழ் மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு
யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

பேச்சு

ஆக்கத்திறன் நிகழ்வில்

யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் / செல்வி [illegible]

விசேட பாராட்டை

பெற்றுக்கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

இல.248-1/1, காலி வீதி
கொழும்பு-04

# பாடசாலைப் பதிவு

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS

හින්දු දහම් පාසල් ලියාපදිංචි කිරීම
அறநெறிப்பாடசாலை பதிவு செய்தல்
Registration of Religious (Hindu) School

| | |
|---|---|
| දහම් පාසලේ නම හා ලිපිනය:- | [illegible] |
| அறநெறிப்பாடசாலையின் பெயர், முகவரி:- | யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறி பாடசாலை, சாத்தாவோலை, சுழிபுரம் வடகிழக்கு, சுழிபுரம். |
| Name & Address of Religious School:- | Yogi-Karthikesu Memorial Araneri School Saththavolai, Chulipuram North-East, Chulipuram. |

[illegible] 2002.05.03 [illegible]

[illegible] 2002.05.03 [illegible] அறநெறிப்பாடசாலை எமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

Reference your application dated..03-05-2002..... the above Religious School has been registered in the Department of Hindu Religious & Cultural Affairs.

ලියාපදිංචි අංකය
பதிவு இல :
Registration No.: [illegible]

[illegible]/Date 28-05-2002

[illegible]/பணிப்பாளர்/Director

[illegible] 248, 1/1,
[illegible], [illegible]-04.
இல. 248 1/1,
[illegible], கொழும்பு 04.
No. 248 1/1,
Galle Road, Colombo 04

## யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையில் 2013, 2014, 2015 ஆண்டுகளில் பரிசு தினமும் விசு க விமலன் ஞாபகார்த்த விசேட வருடாந்த விழாவும் சிறப்பாக நடைபெற்றது. விழாக்களின் சில பதிவுகள்



















